# காணிக்கை

ரா. சீ.

அணியகம்
சென்னை-30.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# காணிக்கை

ரா. கி.

அணியகம்
சென்னை-50

# நூல் விளக்கம்


| | |
|---|---|
| முதற்பதிப்பு | 1978 |
| மறுபதிப்பு | 1999 |
| நூல் தலைப்பு | **காணிக்கை** |
| ஆசிரியர் | ரா. சீனிவாசன் |
| பொருள் | நாவல் |
| பதிப்பகம் | அணியகம்,<br>5, செல்லம்மாள் தெரு,<br>செனாய் நகர்,<br>சென்னை - 600 030. |
| தாள் | 11.6 Kg. |
| பக்கம் | 120 |
| **விலை** | **ரூ. 23.00** |
| அச்சிட்டோர் | நெல்சன் அச்சகம்,<br>சென்னை - 600 029. |

# காணிக்கை

## முன்னுரை

நாவல் காலத்தின் விமரிசனம் என்பர்; நம்மைச் சுற்றியுள்ள புறநிகழ்ச்சிகளின் தாக்கங்கள் மனித வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கின்றன. நாம் வள்ளுவர் காலத்தில் வாழவில்லை; வன்முறையும் ஜனநாயகமும் போராடிக் கொண்டிருக்கின்றன. 'எமர்ஜன்சி' நீங்கி ஜனநாயகம் வளரும் காலம் இது; இதற்கு உள்ள சோதனையைச் சித்திரிக்கிற உருவகக் கதை இது.

இனிச் சர்வாதிகாரம் ஆட்சியில் இடம் பெறுமா? ஜன நாயகம் வெற்றி காணுமா என்பது சிந்தனைக்கு உரியது. விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. அழிவுக் கோலம் அவசியமா? அழகுக் கோலம் தேவையா!

கிளர்ச்சிகள் வளர்ச்சிக்குத் தேவைதான். அது வன் முறையில் இயங்கும் பொழுது ஏற்படுகின்ற அழிவுகள் ஏராளம்; அதைச் சுட்டிக் காட்டுவது இந்நாவல்.

'மது ஒழிப்பு" சமுதாயப் பிரச்சனை; இது ஒரு குடும்பப் பிரச்சனையாகவும் மாறுகிறது. எப்படி? இந்தக் கதையை முடித்துவிட்டு உண்மை காணுங்கள். இது எப்படி? வேறு ஒன்றும் இல்லை. பதினாறு வயதில் கேட்கப்படும் நகைச் சுவைத்துணுக்கு இது.

ரா. சீ.

# 1

அன்று அவள் என்னைப் போக வேண்டாம் என்று சொன்னாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எனக்காக ஒருத்தி கனவு காண்கிறாள் என்றால் அது ஆச்சரியம் தானே. என்னைப் பற்றிக் கனவு காண்பது வேறு; எனக்காகக் கனவு காண்பது வேறு என்பதை அன்று தான் அறிய முடிந்தது.

அன்று இரவெல்லாம் அவள் தூங்கவே இல்லை. அப்படி ஒன்றும் அவள் அன்று தேர்வுக்குப் படித்தாள் என்றும் கூற முடியாது. மாணவிதான்; ஆனால் அவள் கண் விழித்துப் படிப்பதைப் பழக்கமாகக் கொண்டது இல்லை. மணமாகி விட்டுக் கணவனை நினைத்துக் கொண்டு தூக்கம் வராமல் அப்படியும் இப்படியும் புரண்டுகொண்டு இருந்ததாகவும் கூற முடியாது. அவள் மணமாகாதவள் என்பதையும் முன்னமேயே சொல்லி விடுகிறேன். என்னைப் பற்றிக் கனவு காண்பதற்கு நான் அவள் கணவனும் அல்ல; அதனால் தான் அவள் எனக்காகக் கனவுகண்டாள். இதை அவள் மறுபடியும் சந்தித்த போது என்னிடம் சொன்னாள்.

"இது ஒரு புது அனுபவம். இப்படிக் கூட ஒரு பைத்தியக்காரி இருப்பேனா உங்களைப் பிரிந்து விட்டு. அப்புறம் நான் 36 இல் போய்விட்டேன்" என்றாள். அதாவது 36 வது எண்ணுள்ள பஸ்ஸில் என்னை விட்டுப் பிரிந்து விட்டாள். அதற்குப் பிறகு அவள் 27ஐப் பிடித்துத் தன்விடுதியைச் சேர்ந்தாள்.

''ஏன் உங்களோடு வந்திருக்கக் கூடாது? அப்புறம் அதை நினைத்துக் கொண்டே வேதனையோடு பிரிந்து விட்டேன்''. என்றாள்.

அதாவது அன்று படம் பார்க்க அழைத்தேன். அவள் என்னோடு வர விரும்பவில்லை. யாருக்கோ எதற்கோ அஞ்சினாள். அவளோடு மற்றொரு பைத்தியமும் இருந்தாள். அவள் ஒரு சினிமாப் பைத்தியம். அதனால் அவளைப் பயித்தியம் என்றேன்.

எந்தப் புதுப்படம் வந்தாலும் ஓடிவிழுந்து அடித்துக் கொண்டு முன்னாலே நிற்கும். அதனால் தான் அவளைப் பைத்தியம் என்று சொல்வது உண்டு.

என்னைக் கூட சிலபேர் 'அரைப்பைத்தியம்' என்று சொல்வார்கள். அதாவது எது எனக்குப் பிடிக்கிறதோ அதை விடாமல் தொடர்வேன்: அதைத்தானே பைத்தியம் என்று பலபேர் சொல்லிக் கொள்கிறார்கள். அது சிலசமயம் அவசியம் என்று தான் படுகிறது. ஏன் இப்படிச் செய்யக் கூடாது என்று கேட்டு ஏதாவது தவறு செய்து விடுவேன்.

அந்த மாதிரி ஏன் இப்படிச் செய்யக் கூடாது என்ற பைத்தியக்காரத் தனத்தில் இதுவும் ஒன்று. ''ஏன் அவளைக் காதலிக்கக் கூடாது? இது என்ன பெரிய தப்பா?

தப்பு என்றுதான் அவள் சொல்கிறாள்

அதாவது நான் மணமானவன்; ஒரு குழந்தைக்குத் தந்தை. இந்த உயர்வைப்பெற்றபிறகு மறுபடியும் தாழ்ந்து போவது என்பது அவள் ஒப்புக்கொள்ள வில்லை, இதைத் தான் அவள் என்னை அரைப்பயித்தியம் என்று சொன்னாள்

''நான் சொன்னேன் நான் முழுப் பைத்தியம் இல்லை; கால் பைத்தியம்தான். ஏன் தெரியுமா? என்னை அறியாமல் உன் பின்னால் என் கால் செல்கிறது. அதனால் நான் கால் பைத்தியம்'' என்றேன்.

அவ்ள் சொன்னுள் 'கலியாண மான பிறகு நீ காதலிக் கலாமா?" என்று கேட்டாள்.

"எல்லாரும் அதைத்தான் செய்கிருர்கள்"என்றேன்.

அவள் கிட்டே மட்டும் அப்படிச்சொல்லி விட்டேன். அதனுல்தான் அவள் என்னே அரைப்பயித்தியம் என்ருள். அதாவது ஆங்கிலத்திலே சொன்னுல்'செமிகிராக்'.என்னேப் போல இப்படி அரைப் பயித்தியங்கள் இருக்க மாட்டார் கள் என்று நினேக்கிறீர்களா? இருப்பார்கள். அவர்களே உங்களுக்குத் தெரியாது. என்னேப் பற்றி மட்டும் எப்படி உங்களுக்குத் தெரியும். நான் சொன்னதுக்கு அப்புறம் தானே தெரியும்.

எங்கள் சின்ன பையன்; அதுதான் முரளி. அப்படி என்ருல் பெரிய பையன் இருக்கிருன் என்று நினேக்கிறீர் களா! அப்படி ஒன்றும் இல்லே. ஒரே பையன்தான். அவன் சின்னவன். அதனுல் அவனேச் சின்ன பையன் என்று சொன்னேன். அவன், "அப்பா! நீ ஒரு பைத்தியம்" என்று அடிக்கடி சொல்லுவான்.

ஏன் இப்படிச் சொல்கிருன் எனக்குத் தெரியாது.

"ஏன்டா முரளி என்னேப் பையித்தியம் என்று சொல்றே" என்று கேட்கிறேன்.

"நீ அம்மா பேச்சு கேக்கறே" என்பான்.

"அம்மா பேச்சுக் கேட்டால் நான் பைத்தியமா?"

"நான் கேக்க மாட்டேன்"

அவன் சுதந்திரத்தைப் பார்த்து நான் ரொம்ப ஆச்சரியப் படுகிறேன்.

என் மனேவிக்கு நான் ரொம்பவும் அடங்கியவன். அவளும் அப்படித்தான் என்னேப் பற்றி அபிப்பிராயம் சொல்லிக் கொண்டு வருகிருள்.

"அவர் நான் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டார்" என்று சொல்லிப் பெருமைப் படுகிறாள்.

ஒரு நாள் காப்பி கொண்டு வந்து வைத்தாள். ரொம் பவும் சூடாக இருந்தது. நான் எப்படிக் குடிக்க முடியும்! அப்படியே வைத்து விட்டுப்போனாள். நான் கவனிக்கவே இல்லை.

அவளுக்கு ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருந்தேன். அது தான் என் சிநேகிதி; அப்படித்தான் அவள் என்னைப்பற்றி யும் சொல்கிறாள்; அதாவது காதல் கடிதம்எழுதிக் கொண்டி ருந்தேன். அதுதான் என் சிநேகிதியும் சொல்கிறாள். நானும் அப்படித்தான் சொல்கிறேன். அதாவது காதல் கடிதம் எழுதிக் கொண்டு இருந்தேன்; அப்படி என்றால் அவள் எப்படி என் சிநேகிதி ஆக முடியும்? சே! அதுதான் நல்ல சொல்; தப்பு இல்லாத வார்த்தை; என் சிநேகிதி வாழ்க!

அந்தக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன். காப்பி ஆறிவிட்டது. சில்லென்று இருந்தது. எப்படி அதைக் குடிக்க முடியும். சே இதுஒரு காப்பியா" என்று அதை என் மனைவியைப் பார்ப்பது போல் பார்த்தேன். அந்தப் பார் வையில் சூடு இல்லை. அப்படி என்றால் என்ன அது? எனக்குத் தெரியாது.

"ஆறினகஞ்சி பழங்கஞ்சி தானே. எது? காப்பி. இல்லை; எல்லாம் அப்படித்தான். அவள் சொன்னாள். "நான் வரும் போது சூடாகத்தான் இருந்தது. இப்பொழுதுஆறிவிட்டது" என்று சொன்னாள். அவள் எதை நினைத்துக் கொண்டு அப்படிச் சொன்னாள். அது தெரியாது. எனக்கு வேறுஅது ஒரு உருவகமாகத்தெரிந்தது.

'உருவகம்' அது அடிக்கடி நான் நினைத்தப் பார்ப்பது உண்டு. நான் அதிகமாகப் படிக்கா விட்டாலும் ஓய்ந்த போது தமிழ் இலக்கியம் படிப்பேன். அதனால் இந்தச் சொற்கள் எனக்குப் பழக்கம். உங்களுக்குத் தெரியும்

என்று நினைக்கிறேன்; உண்மைக்கும், உருவகத்துக்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது. நேரிடையாக எதையும் சொல்லமுடியாவிட்டால் இந்த உருவகம்தான் பயன்படு கிறது. உருவகம்தான் எனக்குப் பிடிக்கும்.

இந்தக் கடற்கரையிலே நிறைய சிலைகள் வைத்திருக் கிறார்கள். ஒரு 'கேள்வி பதில்' வைக்கிறேன் என்று வைத் துக்கொள்ளுங்கள். அதாவது உங்கள் நினைவு ஆற்றலைப் பரிசோதிக்கிறேன் என்று அர்த்தம். அதற்குத்தான் 'கிவிஜ்' என்று பெயர். அறிவாற்றலை சோதிப்பது வேறு நினைவாற்றலை சோதிப்பது வேறு. உங்கள் அறிவாற்றலை நான் எப்படிச் சோதிக்கமுடியும்? அப்படிச் சோதித்தால் நிச்சயமாக என்னை எல்லாரும் சொல்வதுபோல 'அரைப் பயித்தியம்' என்று கட்டாயம் சொல்வீர்கள். இது எல்லாம் சும்மா பொழுதுபோக்கு.

எங்கே சொல்லுங்கள் பார்க்கலாம். எத்தனை சிலைகள் வைத்திருக்கிறார்கள்! உங்களால் சொல்ல முடியாது. சொல்லிவிட்டால் உங்களை நான் முழுப் பயித்தியம் என்று மதிப்பிடுவேன். அதாவது கடற்கரையிலே நீங்கள் மனி தர்களைப்பார்ப்பது இல்லை. வெறும் சிலைகளைத்தான் பார்க் கிறீர்கள் என்று அர்த்தம். நான் சொல்லட்டுமா கம்பர், இளங்கோ, பாரதி, பாரதிதாசன், அவ்வையார், போப் இவர்கள் எல்லாம் உண்மை மனிதர்கள். அவர்கள் பெரும் புலவர்கள். சாகா இலக்கியங்களைப் படைத்தவர்கள். நான் விட்டு விட்ட மூன்று சிலைகளை நீங்கள் சொல்லி விடுவீர் கள். 'கண்ணகி', 'காந்தி', 'தொழிலின் வெற்றி' இந்த மூன்று சிலைகள்தா‍ எனக்குப் பிடித்தவை. ஏன் தெரி யுமா? அவர்கள் மனிதர்கள் அல்ல; உருவகங்கள். அதா வது அவர்களைப் பற்றி நினைக்கும்பொழுது சில அடிப் படைச் செய்திகள் நினைவுக்கு வருகின்றன. நாம் சிலவற் றுக்கு மதிப்புத் தருகிறோம்.

அவளும் அடிக்கடி அந்தக் கண்ணகியைப் பற்றித் தான் பாட்டுவாள். அதுதான் என் சிநேகிதி. அங்கே நாங்

கள் உட்கார்ந்து பேசுகிறோம். பேசுவோம் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. சொன்னால்தானே எங்கள் கதை உங்களுக்குத் தெரியும்.

அவள் சொல்கிறாள் இதுதான் சிலை. பெண்ணை நீங்கள் மதிக்கிறீர்கள் என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு என்கிறாள். அதுமட்டும் அல்ல; முதல் முதல் பெண்ணுக்குப் பெருமை கொடுத்த முதல் தமிழ்க் காப்பியமும் சிலப்பதிகாரம்தான் என்று சொன்னாள். இதை அவள் விமரிசித்ததிலிருந்து தெரிந்து கொண்டேன். அவள் கண்ணகியைப் பாராட்டியதிலிருந்து அவள் ஒரு லட்சியப் பெண் என்பதை அவள் சொல்லாமல் சொல்லிவிட்டாள்.

நான் சிலபேர் அங்குப்போகும்போது இது 'கண்ணகி சிலை' என்று காட்சிப் பொருளாகக் கண்டு செல்வதைப் பார்த்து இருக்கிறேன். அவள் அதைக் கருத்துப் பொருளாக என்னிடம் பேசினாள். அதுமுதல் கண்ணகியைப் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டேன். இது முதல் உருவகமாக எனக்குப்பட்டது. அதாவது பெண்மையின் உயர்வை அது பேசுகிறது.

அடுத்தது 'காந்தி'—அவர் உண்மை மனிதர் மற்றவர்களுக்கு. எனக்கு அவர் உருவகமாகத்தான் தெரிந்தார். இந்த நாட்டில் வன்முறையை ஒழிக்க வேண்டும்; ஒழிய வேண்டும் என்று பாடுபட்ட வீரர் அவர். உண்மையின் இருப்பிடம்; பகைமை பாராட்டாத பண்பினர். இந்த இரண்டும் இந்த நாட்டுக்கு இப்பொழுது மிகவும் அவசியம் எனப் பட்டது. அவர் இந்தத் தேசத்துத் தந்தை. அவரிடம் இந்த மரியாதை எனக்கு ஏற்பட்டது. 'வாழ்க நீ எம்மான்' என்று ஏதோ உளறிக்கொண்டு இருப்பேன்.

"என்ன இது?" என்று கேட்பாள்.

"உங்களுக்குப் பாடத் தெரியுமா?"

"சீ பைத்தியம்! பாடறவர்களுக்குத்தான் பாடத் தெரி

யும் என்று நீ நினைக்கிறே".

"ஏன் எல்லாருக்கும் தெரியுமா?"

"தெரியும் பாடமாட்டார்கள்; அதுதான் வித்தியாசம்".

"அப்படீன்னு ஒரு பாட்டுப் பாடுங்க பார்க்கலாம்".

"பொன்னுர் மேனியனே" என்ற பழம் பாட்டைப் பாடினேன். அதாவது நான் சின்ன வயசிலே அதாவது முரளி வயது என்று நினைத்துக்கொள்ளுங்களேன். அவனை விட கொஞ்சம் வயது அதிகம். அந்தக் காலத்திலே ஆறு வயதுக்குத்தான் டீச்சர் அம்மாவைப் பார்க்கமுடியும்.

இப்ப பிறந்தவுடனே L. K. G., U. K. G. இப்படி ஏதாவது சொல்லுவாங்க. அவர்கள்தான் அந்தக் குழந்தைகளுக்கு மழலை மொழியே கற்றுத் தருகிறுர்கள். அம்மாவை 'மம்மி'யாக்கி அனுப்புகிறுர்கள்; அப்பாவைத்'தாடி' யாக்கி அனுப்புகிறுர்கள்.

அந்த வயதிலே அப்பொழுது எல்லாம் இந்தக் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்களிலே இந்தப் பாட்டுத்தான் பாடுகிறுர்கள். 'பொன்னுர் மேனியனே' இப்பொழுது என்ன பாடுகிறுர்களோ தெரியவில்லை. எல்லாம் சேர்ந்து பாடுகிறுர்கள். மணியடித்தவுடன் பிரார்த்தனை. அங்கேதான் எல்லாம் ஒன்ருகக்கூடுகிறுர்கள். ஒரே பாட்டு; வருஷம் முழுவதும் அதேபாட்டுத்தான். அதை என்வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாமல் செய்துவிட்டது. பாட்டு என்ருலே அந்த ஒரு பாட்டுத்தான் தெரியும். அது தெரிந்ததால்தான் அன்றைக்கு அவளிடம் பாடிக் காட்ட முடிந்தது.

அவள் ஒரே சிரிப்பு சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறே?"

"உங்க பாட்டு"

"ஏன் நல்லா இல்லையா?"

"ரொம்ப கருநாடகம்"

அதாவது நான் கருநாடக இசை பாடினேன் என்று சொன்னளா அல்லது பாடிய பாட்டைப் பாடினேன் என்று சொன்னளா தெரியவில்லை.

"நான் மறுபடியும் பாடட்டுமா?" என்றேன்.

அவள் பயந்தே போய்விட்டாள். வாழ்க்கையிலே இதைப்போல அவள் எப்பொழுதும் பயந்ததே இல்லை என்கிருள்.

எதுக்கு அவள் பயந்தாள்? மறுபடியும் அந்தப் பாட்டைப் பாடி விடுவேன் என்று ஒரே பயம்.

"பயப்படாதே நான் பாடமாட்டேன்.

ஒன்று நான் பாடாமல் இருப்பதற்கு ஒரு வழி இருக்கிறது" என்றேன்.

"என்ன?" என்ருள்.

",நீ பாடவேண்டும்" என்றேன். சிரித்தாள்; வேறு வழி இல்லை. அவள் பாடவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. அப்புறம் அவள் என் வழிக்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

எனக்காக அவள் பாடினுள். ஏன் எனக்காக அவள் வாழவும் தொடங்கினுள். அது எப்படி? அதை அப்புறம் சொல்கிறேன்.

சினிமாப் பாட்டு ஒன்று பாடினுள். அதுதான். 'அவள் ஒரு தொடர்கதை'யிலே ஜேசுதாஸ் பாடியது, அதுதான் ஆரம்பத்திலே ஹிட். இப்பொழுதும் அதை அவள் மறக்கவே இல்லை. அதை நான் மறந்துவிட்டேன். உங்களுக்கு நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன். 'தங்கச்சி' என்று ஆரம்பிக்குமே அது. அதுதான் 'தெய்வம் தந்த வீடு' சரி

போகட்டும். முழுப்பாட்டு எனக்குக் கவனத்துக்கு வரவில்லை. ஜெய்கணேஷ் பாடியது. ரொம்ப உருக்கமான பாட்டு.

"உனக்கு இந்த வயசிலே?"

"ஏன் வருது?" என்று கேட்கிறீர்களா.

"அதுதான் எனக்கு ரொம்ப பிடித்த பாட்டு. சோகத்திலேதான் சங்கீதமே பிறக்குது" என்று சொன்னாள்.

"நம்ம நாட்டிலே ஏழைகளின் நிலையைச் சித்திரிக்கின்ற சோகம் அதுலே கலந்து இருக்கிறது" என்று மேலும் அவள் விளக்கம் தந்தாள்.

அதை விளக்குவதற்குப் பக்கத்தில் இருந்த மற்றொரு சிலையைக் காட்டினாள்.

அதைப் பார்த்துச் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"இது தொழிலாளியின் வெற்றி"

"அதற்குச் சிரிக்க வேண்டுமா?"

"கேலிச் சித்திரம்"

அதாவது என்றைக்கும் தொழிலாளி இப்படிக் கஷ்டப்படுவான் என்பது அவள் குறிபபிட்ட கருத்து என்பதை அவள் சொல்லித் தெரிந்து கொண்டேன்.

"உன்னைப் பைத்தியம் என்று சொல்லத் தோன்றுகிறது" என்றேன்.

"ஏன்?"

"இது தொழிலாளியின் சிலை: படகோட்டிகளைச் சித்திரிக்கிறது" என்றேன். "கடற்கரையில் இருப்பதால்".

"அல்ல; இது தொழிலாளியை மட்டும் சித்திரிக்கவில்லை. இது உருவகம். அதாவது உழைப்புக்கு இந்தச்

சமுதாயம் மதிப்புத் தருகிறது என்பது அர்த்தம். இது வெறும் தொழிலாளி மட்டும் அல்ல; இந்த நாட்டுக் குடி மகன் ஒவ்வொருவனும் மதிக்கத் தகுந்தவன் என்பது. அந்த உழைப்பால் தான் இந்த அதி அற்புதமான உலகம் படைக்கப்படுகிறது. கடவுள் காடு மேடு மலை ஆறு என்ற அடிப்படைப் பொருள்களைக் கொடுத்தான். மனிதன் இவற்றைக்கொண்டு அதி அற்புதமான வாழ்க் கையைப்படைத்தான். இது மனிதனின் வெற்றி.'' என்று கூறினாள்.

அவள் கொஞ்சம் படித்தவள். என்னைவிட அதிகம் படித்தவள். கல்லூரிக் கட்டிடத்தை எட்டிப் பார்த்தவள். நான் தூர இருந்து வேடிக்கை பார்த்தவன். நிழலுக்குக் கூட அங்கே இருக்க விரும்பாதவன். ஏன் அப்படி என்று கேட்கிறீர்களா?

எனக்கு மற்றவர்கள் சொல்லிக் கொடுத்துக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் பிடிப்பு இல்லை. சுயசிந்தனை இருக்க வேண்டும் என்று நினைக்கிறவன். அதனால் கூடத் தான் என்னை அரைப்பயித்தியம் என்றார்கள்.

நீங்களே சொல்லுங்கள். படித்தால் நான் எப்படி முன்னுக்கு வந்து இருக்க முடியும். வேண்டுமானால் கொஞ்சம் விஷயம் அறிந்தவனாக இருக்கலாம். சும்மா 'டிக்கிரி'ஒன்று வாங்கி மாட்டி வைத்திருக்கலாம். யார் இப்ப இதை மதிக்கிறார்கள். பணம் இருக்கிறதா என்று தான் பார்க்கிறார்கள். எங்க அப்பன் கொஞ்சம் அறிவாளி. எனக்காக இந்த உலகத்தில் விட்டு வைத்த சொத்து அது தான் என்னைக் காப்பாற்றுகிறது. காப்பாற்றியது. அதை நம்பித்தான் என் மனைவி என் வீட்டில் குடி இருக்கிறாள். அதாவதுகுடித்தனம் செய்கிறாள். குடியும் குடித்தனமுமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். எங்க அப்பா வைத்து விட்டுப் போன 'பெட்ரோல் பங்க்' என் பேரில் தான்

இருக்கிறது. அதுதான் என்னைக் காப்பாற்றுகிறது. அதுசரி என்னைப் போல எல்லா அப்பனும் சொத்து வைத்து விட்டுப் போனால் நன்றாகத்தானே இருக்கும். அது எப்படி முடியும்?

எனக்கு அந்த 'பங்கு' அங்கே உட்காரப் பிடிக்காது. இது என்ன ஒரு தொழிலா? யாரோ வேலை செய்கிறார்கள். யாரோ சம்பாதிக்கிறார்கள். நான் 'முதலாளி'. இப்படித்தான் என்னைப் பற்றி அங்கே சொல்லிக் கொள்கிறார்கள். விசித்திரமான உலகம் இது. அதாவது என் அப்பன் எனக்காக விட்டு வைத்த தொழில். நான் ஒரு குட்டி முதலாளி. என் கீழே ஒரு கணக்குப் பிள்ளை. எடுபிடி ஆட்கள் வேகமாக ஓட ஆட ஒரு ஸ்கூட்டர்.

அதிலே தான் அவளுக்கும் எனக்கும் சிநேகிதமே ஏற்பட்டது. அது எப்படி ஏற்பட முடியும். பின்னாலே உட்காருகிறவர்கள் எல்லாம் உறவுக்காரர்கள் என்று தானே நினைக்கிறீர்கள். அது தான் இல்லை. உறவு கொள்ள வேண்டியவர்கள். கொள்ள நினைக்கிறவர்கள். சில சமயம் தொடராமல் அறுந்து விடுகிறவர்கள்.

நான் நினைத்தது உண்டு பின்னால் உட்காருகிறவர்கள் எல்லாம் அவரவர் துணைவியராகத்தான் இருக்க வேண்டும் என்று.

நான்கூட 'ஸ்கூட்டர்' வாங்குவதற்கு முன்னால் இப்படிப்போகிறவர்களைப் பார்த்து ரசித்ததுஉண்டு.தெருவுக்கு அழகு ஸ்கூட்டர்தான், அப்பொழுதுஎல்லாம்எனக்குக் கலியாணம் ஆகவில்லை. நம் பின்னாலே யார் உட்காருவார்கள் என்று நினைப்பது உண்டு. அதற்கப்புறம் தான் இந்த ஸ்கூட்டருக்கே கிராக்கி ஏற்படுகிறது என்றுநினைக்கிறேன்.

எங்க அப்பா உயிரோடு இருக்கிற வரையில் எனக்கு ஸ்கூட்டரே வாங்கித் தர மாட்டேன் என்று சொல்லி விட்டார். ஏன்? இந்த முட்டாள் பயல்கள் பலபேரு அடி

பட்டுச் சாகாமல் உயிரோடு திரும்புவதால் தான். "நல்ல காலம் தப்பிச்சேன்" என்று என் கிட்டே வந்து சொல்லு வார்கள். அப்பா அதைக் கேட்டு, "பார்த்தியாடா சொன்னு கேக்கறயா ஸ்கூட்டர் என்ருலே இப்படித் தான்."

"நீங்க?"

"நான் சைக்கிள் விடவே பயந்தவன். இரண்டுசக்கரத் திலே ஒரு வண்டி போறதே ஆச்சரியம். ஒரு தடவை கீழே விழுந்து கால் முட்டி எல்லாம் தேய்ந்து போச்சு; அதுக்கப் புறம் நான் ஏன் கத்துக்கிறேன்!" என்று பெருமையாகச் சொல்லி இருக்கிருர்.

அவர் எப்படி என்னை ஸ்கூட்டர் விட அனுப்புவாரு! எனக்காக அவர் சொத்து வைத்திருக்கிருரே அதுக்கு வாரிசு நான் தான். அதுக்காகவே நான் உயிர் வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர் போன அப்புறம் தான் இந்த ஸ்கூட்டர் கற்றுக் கொள்ள முடிந்தது.

அவள் அதுதான் என் மனைவி ஸ்கூட்டரிலே ஏறவே மாட்டாள். அவ்வளவு பயம். அவள் நிறைய நகைபோட்டி ருந்தாள், அது எங்கே விழுந்து விடுமோ என்ற பயம், அதுக்குக் கார்தான் லாயக்கு. இல்லா விட்டால் பல்லவன் தான் சரி; என் வண்டியிலேயே ஏறமாட்டாள்.

இந்தப் பின்சீட்டுக்கு ஆள் இல்லையே என்று கவலைப் பட்டது உண்டு. அதைத்தான் என் சிநேகிதி நிரப்பினுள். எப்பவும் யாராவது பின்னுலே உட்கார்ந்தால்தான் நன்ருக இருக்கிறது. தனியேபோவதற்கே பிடிப்பதுஇல்லை. எனக்கு அவளை ரொம்ப பிடித்து இருந்தது. அவளை எங்கே 'பிக் அப்' பண்ணேன் தெரியுமா!

அது அப்புறம் சொல்றேன். இதுக்குள்ளே என்ன அவசரம்!

அது ரொம்ப கேட்கவே பிடிக்காது. அவள் காலே ஜிலே படித்துக் கொண்டிருந்தாள். அவள் எப்பவும் தனி யாகவே போக மாட்டாள். அவள் எப்படித் தனியாகப் போக முடியும்! அவள் ரொம்ப அழகாக இருந்தாள். அழகாக இருந்தால் இதுஒரு தொந்தரவு; தனியாகப் போக முடியாது. போனுல் வழியிலே கமெண்ட் அடித்துக் கொண்டே இருப்பார்கள். அவள் எப்பொழுதும் பொழு தோடு வீட்டுக்குப் போய் விடுவாள்.

அன்றைக்கு காலேஜிலே ஒருநாடகம், அதிலே அவள் நடிக்கவில்லே. பார்த்தாள்.நேரம் ஆகிவிட்டது.எல்லோரும் போய்விட்டார்கள். அவள் எப்படித் தனியாகப் போக முடியும்.

துணிந்து பஸ் ஸ்டாண்டிலே வந்து நின்ருள். இதைச் சொல்லும்போது 'அக்கினிப்பிரவேசம்' கதைதான் கவனத்துக்குவருகிறது, அப்படிஅவள் ஏமாந்தவள் அல்ல; புத்திசாலிதான். என்னசெய்வது இரண்டு முரட்டுஆட்கள். வர வர இப்பொழுது இப்படித்தான் ஆட்கள் முரட்டுத்தன மாக ஆகிக் கொண்டு இருக்கிருர்கள். நான் பார்க்கிறேன். என் கண் எதிரேதான் இந்த நிகழ்ச்சி நடக்கிறது. அவர்கள் என்ன செய்கிருர்கள்? போகிற பஸ் வருகிற பஸ் இது எல்லாம் நிறுத்தி விட்டு ஒழிகஎன்று கிறுக்குகிருர்கள். அது பரவாயில்லே. கண்ணுடி எல்லாம் உடைத்து நொறுக்கு கிருர்கள்.

அப்பத்தான் நினேத்துக் கொள்வேன் அந்த உழைப் பாளியின் சிலே. உழைப்பால் உருவாகிய 'பஸ்' இது. ஒரு நிமிஷத்தில் உடைத்துப்பாழ்படுத்துகிருர்கள். ஓடும் ரயில் வண்டியை நிறுத்திக் கொளுத்துகிருர்கள், ஐம்பது லட்சம் மதிப்பிடுகிருர்கள் அப்படிச் சொல்கிருர்கள். எனக்கு எப்படித் தெரியும். அதை நிறுத்திக் கொளுத்திப் பாழ் பண்ணி விடுகிருர்கள். இந்தத்தேசத்துக்கெவ்வளவுபெரிய நஷ்டம். ஐம்பது பேர் சேர்ந்துஅழித்து விடலாம், அதைச்

செய்வதானல் ஆயிரம் உழைப்பாளிகள் இருந்தால் கூடப் போதாதே! அழிவு எவ்வளவு எளிது. ஏன் கொளுத்தினர் கள், அவர்கள் கோபத்தைக் காட்ட அப்படிச் சொல்லு கிறாகள். அது உண்மை அல்ல. இந்த நாட்டுப் பொதுச் சொத்தை மதிக்காததால்தான், ஒரு சில 'உருமாறிகள்' (அதாவது இன்னர் என்று அடையாளம் காண்பிக்க முடியாது) அவர்கள் தான் பொதுமக்கள் சொத்துகளைக் கொள்ளை அடிக்க அந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறார் கள்; அவர்கள் தான் அந்த அழிவை ஏற்படுத்தினர்கள்; ஏற்படுத்துகிறார்கள். ரொம்பவும் வேதனை தரும் செய்தி.

அதை உடனே மறந்து விடுகிறோம். இதைப் போல திடீர் நிகழ்ச்சிகள் பல தோன்றிக்கொண்டே இருக்கின்றன. எப்பொழுதும் அமைதியின்மை; கலவரம்; ஏன்; எதற்கு என்று சொல்ல முடியாத நிலைமைகள் ஏற்பட்டு விடுகின்றன.

நினைத்தால் டாக்சி ஸ்ட்ரைக்; 'ஆட்டோக்கள்' கூப்பிட் டால்வருகிறவர்கள்; திடீர்என்றுமறுத்துவிடுகிறார்கள். அவர் கள் ஒதுங்கி விடுகிறார்கள். தெருக்கள் வெறிச் சென்று ஆகி விடுகின்றன. இது எங்கோ போய் விடுமோ என்று பொது மக்கள் பேசிக் கொள்கிறார்கள். எப்படிச்சொல்ல முடியும், அன்று பஸ் ஸ்ட்ரைக். ஒரு வண்டி கூடப் போகவில்லை. மின்னல் வேலை நிறுத்தமாம் அதாவது திடீர் என்று எழுகின்ற பிரச்சனைகள் மின்னல் வேகத்தில் வேலையை ஸ்தம்பித்துவிடச் செய்கிறது. இல்லா விட்டால் அவள் அன்று அவர்கள் கையில் சிக்கி இருக்கத் தேவை இல்லை.

அன்று நான் செல்லவில்லை என்ருல் அவள் பெண்மைக்கு இழுக்கு ஏற்பட்டு இருக்கும். அந்த எல்லைக் குள் போவதற்கு முன் என் ஸ்கூட்டர் அவளைக் காப்பாற்றியது. எனக்குச் சில சமயம் பொழுதுபோவது என்ருல் இப்படிச் சுற்றுவது வழக்கம். எந்த நோக்கத்

தோடும் போவது இல்லை. சும்மா ஜாலியாகப் போவது உண்டு. அன்று அவள் அந்தமுரடர்களோடு போராடினுள். கண்ணகியின் சிலையை அங்கே நான் காணவில்லை. அவள் உயிர் பெற்றுப் போராடியதைப்பார்த்தேன்.

நாட்டிலே இன்று திருடு கொள்ளை வன்முறை இவை எல்லாம் பெருகி விட்டன. அவர்களைக் கட்டுப் படுத்திக் கொண்டு வந்தார்கள். கட்டுக்கு மீறிய நிலையில் அவர்கள் அதிகமாகிக் கொண்டு வருகிறார்கள். எந்த வீட்டிலும் 'பூட்டு' போட்டு வைத்தால் நிச்சயமாக அது உடைபட்டுத் திருடு போகிறது. இந்த நிலை பெருகி விட்டது என்று பேசிக் கொள்கிறார்கள்.

இனி நாட்டிலே பிரச்சனையே வன்முறையும் அடக்கு முறையும் தான் என்று என்னையும் அறியாமல் நினைக்கத் தொடங்கினேன். வன்முறையில் செயல் படுவது என்பது ஒரு பக்கம்; அதை அடக்க அரசாங்கம் துப்பாக்கிச் சூடு வரை செல்வது என்ற நிலைக்குப் போய் விடுகிறது.

இனி 'ஜனநாயகம்' என்பது அக்கினிப்பரிட்சையில் இறங்கி விட்டது 'எதற் கெடுத்தாலும் கிளர்ச்சி, அடிதடி' கடை மூடுவது, நூற்று நாற்பத்து நான்கு, போகட்டும் ஏதோ ஓர் உயர்ந்த லட்சியத்தை நோக்கிச் சென்றாலும் கவலை இல்லை. சின்ன பிரச்சனைக்கு எல்லாம் கிளர்ச்சி. தனி மனிதர்கள் பதவிவெறி நாட்டு அரசியல் என்ற நிலைக்குத் தாழ்ந்து விடுவதால் தான் இந்த வன்முறைகள் பெருகி விட்டன.

காந்தி அடிகள் காலத்தில் போராட்டம் நடந்தது. சுதந்திர இயக்கத்துக்காக நடத்திய போராட்டம் அது. இன்று எதற்கு நடக்கிறது? சமுதாய நன்மைக்கு நடத்தும் போராட்டங்களில் வளர்ச்சி உண்டு. தனிமனிதப் பிரச்சனை களுக்காக நடத்தப்படும் போரர்ட்டம் அழிவைத்தான் உண்டு பண்ணுகிறது.

நான் தத்துவம் பேசுகிறேன். பேசிப் பயன் இல்லை. இன்று எந்த நேரத்தில் எது நடக்குமோ அதைச் சொல்ல முடியவில்லை. அரசியல் அலைகள் ஓயாமல் கொந்தளித்துக் கொண்டே இருக்கின்றன. முன்னெல்லாம் ஐந்து ஆண்டுக்கு ஒரு முறைதான் தேர்தல். இப்பொழுது ஒவ்வொரு நாளும் தேர்தலாக அமைந்து விட்டது.

'ஒழிக' என்று கத்துவதன் அர்த்தம் என்ன? நாம் வாக்குத் தந்த அரசாங்கமே ஒழிக என்று கத்து கிறோம். சட்டம் நாட்டை ஒழுங்குபடுத்துவது. அதையே மதிக்கவில்லை என்றால் பிறகு எப்படி எதைச் சாதிக்க முடியும்? சட்டத்தை இயற்றினால் மட்டும் போதாது. அதை நாம் மதிக்க வேண்டும். இது தான் இன்றைய பிரச்சனை.

அந்த உடைந்த 'பஸ்''எங்கள் பாங்கின்' எதிரில் சோக வரலாற்றைச் சொல்லிக் கொண்டிருந்தது. ஓடிக் கொண் டிருந்த ஓட்டம் நின்று விட்டது.

அன்று 'சோ' என்று மழை பெய்து கொண்டிருந்தது. டாக்சி ஸ்ட்ரைக், ஆட்டோஸ்ட்ரைக், பஸ் மின்னல் வேக வேலை நிறுத்தம். அந்த மின்னல் கொடியாள் அவள் நடுத் தெருவில் நின்று விட்டாள். கடல் அலைகள் அவளுக்காக இரங்கி ஓ என்று கத்திக் கொண்டிருந்தது, கவுரவர் மத்தியில் அகப்பட்ட திரௌபதியாக அவள் இருந்தாள், துச்சாதனன் துகில் உரியும் நேரத்தில் என் ஸ்கூட்டர் நின்றது. அன்றுஅவளுக்குக்கண்ணனாகஇருந்து காத்தேன். அவள் துகில் உரியப்படவில்லை. 'பாஞ்சாலி சபதம்' எப்பொழுதோ நடந்த கதையில்லை. அது அன்றாடம் நடக் கும் வாழ்க்கைப் பிரச்சனை என்பதை உணர்ந்தேன்.

அவள் ஸ்கூட்டரின் பின் உட்கார்ந்தாள்.

பேசிக் கொண்டே போனோம். இல்லை. ஸ்கூட்டர் போயிற்று, அதற்கு இவ்வளவு வேகம் கூடாது என்பதை

அப்பொழுது தான் உணர்ந்தேன். அதனுல் நாங்கள் போனேம். மெதுவாகப்போனுல் அது தள்ளாடித் தரையில் சாய்ந்து விடும்.

"எங்கே போக வேண்டும்?"

"விடுதிக்கு"

"இப்படியே தனியே"

"வரக் கூடாது. இன்று கல்லூரியில் நாடகம்".

"என்ன நாடகம்"

"பாஞ்சாலி சபதம்"

"யார் நடித்தது?"

"திரெளபதி"

"அவள் சொந்தப் பெயர் ?

மறந்து விட்டது. அவள் திரெளபதியாகவே மாறி விட்டாள். அதனுல் அந்த நினைப்பு என்னைவிட்டு அகல வில்லை"

"அந்த நாடகம்?"

"அது வெளியேயும் நடந்து விட்டது; நான் திரெளபதி யாகி விட்டேன்"

"ஏன் அவர்கள் வழி மடக்கினுர்கள்?"

"அவர்கள் ஒவ்வொருநாளும் இப்படித்தான் கிண்டல் செய்வார்கள். அதோ பாருடா அவளை என்பார்கள். சிலர் கண் சிமிட்டிக் கருத்தைத் தெரிவிப்பார்கள். சிலர் இந்தக் குட்டி என்று என்னை மிருகமாக நினைப்பார்கள்."

"நீ தனியாக"

"போவதில்லை. இப்படி ஸ்ட்ரைக் நடக்கும் என்று எப்படித் தெரியும்."

"நான் வராவிட்டால்"

"என் கதை இன்றோடு முடிந்து இருக்கும் என்று நினைக்கின்றேன். இன்று யாருக்குமே பாதுகாப்பு இல்லை. அந்த அளவுக்கு."

அவள் யாரைக் குறிப்பிடுகிறாள் என்று தெரியவில்லை. நாட்டு நிலையைக் குறிப்பிடுகிறாள்.

"உனக்குக் கலியாணம் ஆகிவிட்டதா?"

"சரியான பயித்தியம் நீங்கள்" என்று கேட்டாள்.

என் மனைவி என்னை அரைப் பயித்தியம் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்; இவள் என்னைச் சரியான பைத்தியம் என்று சொன்னாள்.

"அதுசரி முழுப்பயித்தியத்துக்கும் சரியான பயித்தியத்துக்கும் என்ன வித்தியாசம் சொல்ல முடியுமா?"

"என்னை அவ்வளவு விரைவாக வந்து ஒருவன் கலியாணம் செய்துகொண்டால் அவன் முழுப் பயித்தியம். எனக்கு அவ்வளவு சீக்கிரம் கலியாணம் ஆகிவிடும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அதனால் நீங்கள் சரியான பைத்தியம்."

நான் ஏன் அவசரப்பட்டுக் கலியாணம் செய்து கொண்டேன் என்று அப்பொழுதுதான் வருத்தப்பட்டேன். அதாவது இதைப்போல ஒரு பெண்ணை ஆபத்துக் காலத்தில் காப்பாற்றி அதற்குப்பிறகு கலியாணம் செய்து கொண்டிருந்தால் நான் ஒரு ஹீரோ ஆகி இருப்பேன். அவள் என்னைப் பிரமாதமாக மதிப்பாள்.

'நீங்கள் சரியான சமயத்தில் வந்து காப்பாற்றினீர்கள்' என்று பாராட்டுத் தெரிவித்துப் பிறகு அவள் அப்படியே தன் உள்ளத்தைப் பறிகொடுத்து விடுவாள். இது எனக்குத் தெரியும். அந்த மாதிரி நாடக நிகழ்ச்சியை நானும் எதிர்பார்த்தேன்.

"நீங்கள் ஏன் பண்ணிக்கொள்ளவில்லை" என்று கேட்டாள்.

"அது எப்படி உனக்குத் தெரியும்?"

"ஸ்கூட்டரில் நீங்கள் மட்டும்தானே இந்தக் கடற் கரைச் சாலையில் சென்றீர்கள்?"

அவளை அந்த நேரத்துக்கு மறுக்க விரும்பவில்லை. அதற்கப்புறம் 'நன்றி' என்ற மூன்று எழுத்தால் முடித்து விடுவாள். அது மங்கலகீதமான சொல்; அதை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை.

"அந்த ஸ்கூட்டர் காலியாக இருந்ததால்தானே நீ உட்காரமுடிந்தது" என்று சிரித்துக்கொண்டே சொன் னேன். என்னை இறுகப் பிடித்துக்கொண்டாள்.

என் மனம் என்னை உறுத்திற்று. அந்தப் பிடியிலிருந்து என்னால் விலக முடியவில்லை. விடுதல் அறியா விருப்பம் என்னுள் எழுந்தது.

"என்னைப் பார்த்தால் உனக்கு எப்படித் தோணுது?"

"கலியாண மாப்பிள்ளை ஆகவேண்டிய வயது என்று தெரியுது"

"நீ என்னை"

வெட்கம் அவளைக் கவ்வியது.

"வெறுக்க மாட்டேன். நீங்கள் வந்து காப்பாற்றுவிட் டால் நான் ஒரு கண்ணகியாக மாறி இருப்பேன்"

"அப்படின்னு"

"அவர்கள் குடலைப்பிடுங்கி மாலையாகப் போட்டுக் கொண்டு இருப்பேன். உண்மையில் நான் கண்ணகி யாக மாறிவிட்டு இருப்பேன்.

அவன் அவள் கற்பைக் கெடுத்தபிறகு அவள் எப்படிக் கண்ணகியாக மாறமுடியும்.

"பத்தரகாளி படம் பார்த்திருக்கிருயா?"

"அதுதான் கண்ணகியா?"

"பழிக்கு வழி சொல்லடா என்று கேட்டாளே அவள் பத்திரகாளிதானே?"

கையில் சிலம்பு வைத்திருந்த கண்ணகி வீரப்புரட்சி செய்தாள். பாண்டியனை வீழ்த்திஞள். அதுதான் அவள் சிறப்பு.

"அப்படியாஞல் நான் வந்து"

"அவனைக் காப்பாற்றினீர்கள் அவ்வளவுதான்"

எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அவள் தன் இடுப்பில் சொருகி வைத்திருந்த கத்தியைக் காட்டிஞள்.

"இப்பொழுது பெண்களுக்கு இது அவசியமாகிறது" என்று சொன்ஞள்.

"நாட்டில் பாதுகாப்பு இல்லை அல்லவா"

"இருக்கிறது. அது நேரம் பொறுத்து வரும். விசாரணை நடக்கும்; அவ்வளவுதான்"

அந்தச் சொல் எனக்குப் பிடிக்கவில்லை. கேட்டுக் கேட்டுச் சலித்துவிட்டது.

"உனக்கு எப்படி இந்தத் தைரியம்?"

"நான் N. C. C-இல் சேர்ந்து இருக்கிறேன்"

"அப்படியா?"

"எதிரிகள் எங்கோ இருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டாம். அவர்கள் இங்கேதான் இருக்கிறார்கள். இனி நாட்டில் உள்நாட்டுக் கலகம்தான் நடக்கும். முன் இந்து முஸ்லீம் போராட்டம் நடந்ததே அதேதான் வேறு பெயர் வடிவில் இனிக் கால் கொள்ளப்போகிறது. அரசியல் கட்சிக்காரர்கள் வெறிகொண்டு தாக்கிக் கொள்வார்கள்; இந்த நாடு இப்படித்தான் அழியப் போகிறது."

பெண்ணுக்கு இவ்வளவு அரசியல் தெரிந்திருந்தது அதிசயமாக இருந்தது. அவள் மேலும் சொன்னாள்.

"தேர்தல் முடிந்ததும் ஆட்சி மாறுகிறது. பிறகு அவர்கள் சாதாரண மனிதர்கள். அவர்களை எதிர்பார்ப்பதே அரசியல் என்றால் அதற்குத் தேர்தலே வேண்டாமே" என்று சொன்னாள்.

"ஊழல்கள் விசாரணைகள்"

"அது வேறு. அது அமைதியாக நடத்த வேண்டிய நிகழ்ச்சிகள்; அரசியல் தாக்குதல் நடத்தவேண்டியது இல்லை."

கல்லூரிப் பெண் அரசியல் பேசும் அளவுக்கு இந் நிகழ்ச்சிகள் முக்கியத்துவம் பெற்றுவிட்டன. இவை எல்லாம் வண்டியிலே போய்க்கொண்டு பேசலாம். அது எப்படி அங்கே பேசமுடியும்?

அதற்காகவே புதிதாகத் திறந்த 'நீலக்கல்' என்ற பெயரிடப்பட்ட பொது விடுதியில் சாப்பிட்டுக்கொண்டே பேசினோம். சிலர் சாப்பிட்டுவிட்டுப் பேசு என்பார்கள். பிறகு பேச்சில் எப்படிச்சுவை கலக்கும். பேச்சின் சுவை சாப்பிடுவதிலும், சாப்பிடுவதின் சுவை பேச்சிலும் கலப்பதற்கு இவ்வாறு பேசுவது அவசியம் ஆகிறது.

அவள் பஸ்ஸுக்கு பாஸ் வாங்கி வைத்திருக்கிறாள் என்று நினைத்தேன். அவள் எங்கே வேண்டுமானாலும்

போகலாம். மாணவர்களுக்கு அந்தச் சலுகை தந்திருக்கிறார்கள், அதை அவள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவளுடைய நிழற்படத்தை ரசிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதற்காக அந்த 'அட்டை' எங்கே என்று கேட்டேன். அதற்கு அவள் இந்தப் பதில் தந்தாள். அரசாங்கம் தருகின்ற சலுகைகள் எல்லாம் நாம் அனுபவிக்கவேண்டும் என்பது அல்ல; அது நம் சுயமரியாதைக்கு இழுக்கு. பல பேருக்கு அது தெரிவது இல்லை. சம்பளச்சலுகை கிடைக்கிறது என்றால் அதை உடனே வாங்கிவிடுகிறார்கள். வசதி உடையவனும் வாங்குகிறான், இல்லாதவனும் வாங்குகிறான். அரசாங்கம் வேறு நாம் வேறு என்று நினைக்கும் மனப்பான்மை மாறவேண்டும். இம் மாற்றம்தான் உண்மையான நாட்டுப் பற்று. அரசாங்கம் ஏதோ ஆளுகின்ற கட்சிக்குத்தான் சொந்தம் என்று நினைத்துப் பொதுச்சொத்தை அழிப்பதும் இப்படித் தான் என்று அவள் தன் கருத்தை வெளியிட்டாள்.

அவள் பதினைந்து ரூபாய்க்கு 'அட்டை' வாங்காததே எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"நான் பஸ் கண்டக்டரின் கண்ணுக்கு 'அட்டை யாக' இருக்க விரும்பவில்லை" என்று முடித்தாள்.

"நான் உன் போட்டோவைப் பார்க்கத்தான் கேட்டேன், வேறு எதற்கும் இல்லை" என்றேன்.

அவள் சிரித்தாள்.

"நேரில் பார்க்கும்பொழுது போட்டோ எதற்கு?"

அதில் ஒரு ரசனை இருக்கிறது. உள்ளத்தில் படியும் வடிவத்துக்கு ஓர் எழுத்து வேண்டும்; அதுதான் போட்டோ; அது அழகை மட்டும் காட்டும்; உண்மை வடிவம் அவளை முழுவதும் காட்டும் என்றேன்.

அவள் தன் போட்டோவைக் கொடுத்தாள்.

அவள் ஏன் தன் படத்தை அந்த நேரத்தில் வைத்திருந்தாள். அது தெரியவில்லை.

அவள் பற்கள் மிக அழகாக இருந்தன. எனக்கு ஒரு சந்தேகம் அந்தப் பல்லால் முகத்துக்கு அழகு ஏற்பட்டதா அல்லது முகத்தால் அந்தப் பற்களுக்கு அழகு ஏற்பட்டதா தெரியவில்லை, அதை இன்னும் என்னால் முடிவு செய்யவே முடியவில்லை.

சிரிக்கும் பொழுது முகத்தில் மலர்ச்சி ஏற்படுகிறது. அந்த மலரின் நடுவில் அப்பற்கள் விளங்கும் பொழுது தான் அழகே உண்டாகிறது. பல்லுக்கு அழகு இல்லை. முகத்தால் தான் அழகு உண்டாகிறது என்பது அவளைப் பொறுத்தவரை உண்மையாக இருந்தது. மற்றவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது. அது பொதுப் படை நியதியாகவும் என்னால் கூறமுடியவில்லை.

அவள் பஸ் அட்டையைப் பற்றி விமரிசித்தது எனக்கு இன்னும் மறக்க முடியவில்லை, அதாவது அவளுக்குச் சமுதாய உணர்வு இருந்தது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இது ஒரு புதிய செய்தியாக இருந்தது.

இதுவரை வாழ்க்கையை இல்லறம் துறவறம் என்று தான் பிரித்துக் காட்டினார்கள். இரண்டும் தனி மனிதன் அறமாகத் தான் தெரிந்தது. இதைவிடக் காதல் வீரம் என்பது எனக்குப் பிடித்து இருந்தது. இது தான் அகம் புறம் என்ற பாகுபாடு. இதில் குடும்ப உணர்வும் இருக்கிறது; சமுதாய உணர்வும் இருக்கிறது. இந்த இல்லறம் துறவறம் என்ற பாகு பாடு உப்பு சப்பு இல்லாத ஒன்றாகத் தெரிந்தது. நான் அதிகம் படிக்கவில்லை என்றாலும் எனக்குச் சுயசிந்தனை அதிகமாக எப்படியோ இருந்தது. இந்தப் பெட்ரோல் பங்க்கில் வேறு என்ன வேலை இருக்கிறது. வருகிற கார் எண்களைச் சில சமயம்

பொழுது போக்காக எண்ணிக் கொண்டிருப்பது உண்டு. காரில் latest model—என்ருல் மிகக் கவர்ச்சி; ஆனல் வாழ்க்கையில் மட்டும் பழமையில் ரொம்பப் பேருக்கு மோகம் ஏற்படுகிறது. அர்த்தமில்லாத விஷயங்களில் அர்த்தம் கண்டு பிடிப்பதைப் பார்க்க முடிகிறது. பழைய கள் போதை தருகிறது என்று சொல்வார்கள். அது போலப் பழைய விஷயங்கள் மக்களை மயக்க வைக்கின்றது.

எனக்குப் பழைய மாடல் என்ருலே பிடிப்பது இல்லை. நான் என் மனைவியைப் பற்றிச் சொல்லவில்லை. அதற்குள் நீங்கள் தவருக நினைத்து விட்டீர்கள். நான் காரைப்பற்றித் தான் சொன்னேன். காப்பி ஆறிவிட்டது என்று குறிப் பிட்ட போதுகூட அப்படித்தான் தவருக நினைத்து விட்டீர் கள் என்று நினைக்கிறேன்.

இந்தப் புதுக் கார்களில் எனக்கு ஒரு கவர்ச்சி, இந்த விஷயத்திலே என்னிடம் பெண்மை குடி கொண்டிருந்தது.

என் கழுத்தில் ஒரு செயின் போட்டுக் கொண்டிருந் தேன். அதிலே எனக்கு ஒரு தனி கவர்ச்சி, எங்க அப்பா இருக்கும் பொழுதே நான் அதைக் கேட்டுப் போட்டுக் கொண்டேன், அதில் ஒரு டாலர் தொங்கிக் கொண்டிருந் தது. அதில் ஒரு 'சாயிபாபா' படம் என்று நினைக்கிறேன். அதைத் தொங்க விட்டு இருந்ேதன். ஏன் அவர் படத்தைப் போட்டேன் என்று கேட்டார்கள். கேட்க வில்லை. நானே சொல்லி விடுகிறேன்.

நானிருக்க பயமேன்? என்று குரல்கொடுத்த மகான் அவர்தானே. யாருமே இதைப் போலச் சொன்னதே இல்லை. கடவுள் கூட வாய் திறந்து இப்படிப் பேசியது இல்லை. இந்த நாட்டு அரசியல் மேதைகள்; பதவி ராஜாக் கள் ஒரு நாள் கூட இப்படிப் பேசியது இல்லை. "நாங்கள் இருக்கிருேம் பயப்படாதீர்கள்" என்று யாருமே சொல்லியது இல்லை. அவர்களால் சொல்ல முடியாது. அது எப்படிச் சொல்ல முடியும்?

இன்று சமுதாய உறுதி இல்லை; எதிலும் எந்த உறுதியும் காண முடியாது யாரும் எதையும் கூற முடியாது. அவள் சொன்னாளே அதுதான் நினைவுக்கு வருகிறது. வன்முறை ஒரு பக்கம் அடக்கு முறை மறுபக்கம். இதுதான் இந்த நாட்டுப் பிரச்சனை. அதாவது பலபேருக்கு வேலை கிடைக்கும். அந்த வாய்ப்புதான் உருவாகும். அதாவது போலீசு வேலை; நாட்டில் ஒழுங்கைக் காப்பது; அவ்வளவு தான், இப்படித்தான் வேலை இல்லாத் திண்டாட்டமே தீரப் போகிறது.

அவள் கேட்டாள் ' நீங்கள் ஏன் இந்தச் செயின் போட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்'' என்று.

இது எனக்குப் பிடித்து இருக்கிறது என்று சொன்னேன்.

நான் கேட்டேன். ''நீ ஏன் தலையில் பூவைக்க வில்லை'' என்று.

''அதை வைத்துக் கொள்ளும் காலம் வரவில்லை'' என்றாள்.

நான் இவ்வளவு நாள் என் மனைவியோடு பழகினேனே தவிர, அவள் ஏன் பூ அதிகம் வைத்துக் கொள்கிறாள் என்று கேட்டதே இல்லை.

அவள் சொன்னாள்''நான் மணம் ஆகாதவள்'' என்றாள்.

மணமானால் தான் பூவும் மணக்கும் என்ற தத்துவத்தை அவள் கூறித்தான் தெரிந்து கொண்டேன்.

''கல்லூரிக்குப் போகும் போது யாராவது பூ வைத்துக் கொள்வார்களா? இது கூடத் தெரியவில்லை'' என்றாள்.

அப்பொழுதுதான் இதைக் கூடச் சரியாகக் கவனிக்க வில்லை என்பதை உணர்ந்து கொண்டேன்.

'திருமணம்' என்பதன் அர்த்தத்தை அவள் விளக்கியது போல இருந்தது.

அன்று அந்தப் பொது விடுதியில் அது தான் அந்த ஓட்டலில் பில் முப்பது ரூபாயை எட்டிப் பிடித்தது.

பொதுவாக பிரியாணி 'ஓட்டல் போயிருக்கிறேன். அங்கேதான் இப்படி பில் அதிகம் ஆவது உண்டு. ஒரு நாள் என் கிறித்துவப் பாதிரி நண்பரோடுபோயிருந்தேன். அவர் ரொம்பவும் நவீனமான மனிதர்.

அவர் அடிக்கடி எங்கள் பெட்ரோல் பங்கில் தான் வந்து பெட்ரோல் போடுவார். அவர் கழுத்தில் ஒரு சிலுவை தொங்கும். அதில் ஏசு நாதரின் உருவப்படம் கை விரித்துக் கிடக்கும். அது தான் சிலுவையில் அறையப் பட்ட படம். அவரைக் கேட்டேன். "நீங்கள் ஏன் இந்தப் படத்தைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு இருக்கிறீர்?"

அவர் அறுக்கத் தொடங்கினர்.

"ஏசு பாவ ரட்சகர்" என்றார்.

"நீங்கள் செய்யும் பாபங்களை அவர் மன்னித்து விடுகிறார்" என்றார்.

இவரும் நம்ம சாயிபாபா type, தான் போல் இருக்கிறது.

"நான் இருக்க பயமேன்?"

அந்தப் பரம்பரையைச் சார்ந்தவர் போல் இருக்கிறது.

அவரோடு ஒரு பிரியாணி ஓட்டலுக்குச் சென்றேன்.

முதலில் 'சூப்' கொண்டு வந்து வைத்தார் அவர் வைக்கவில்லை. அவர் சொல்லி அந்த சர்வர் கொண்டு வந்து வைத்தான்.

"இதைச் சாப்பிடுங்கள்; நன்ருகப் பசி எடுக்கும்." என்ருர்.

குடித்த பிறகு தொடர்ந்து ஆர்டர் செய்து கொண்டே இருந்தார். நானும் ஒன்றும் சளைக்கவில்லை. 'பில்' அவர் கொடுக்க முன் வந்தார். அதை மட்டும் என்னுல் ஒப்புக் கொள்ள முடியவில்லை. அது என்னமோ மற்றவர்கள் எனக்காக பில் பணம் கொடுப்பது பிடிக்க வில்லை. அறுபத் தைந்து ருபாய் கொடுத்தேன். வாழ்க்கையில் இது என்னுல் மறக்க முடியாத சம்பவம்.

இந்த நிகழ்ச்சி அன்று எனக்கு நினைவுக்கு வந்தது. இது 'பிரியாணி'ஹோட்டல் அல்ல;'பிரயாணி'ஹோட்டல். அதாவது வெளியூர்க்காரர்கள் வந்து தங்கி உண்ணும் உணவு விடுதி. எல்லாம் காய்கறிதான். சும்மா 'கட்லெட் ஐஸ்கரீம்' 'காப்பி' அவ்வளவு தான். முப்பது ருபாயை எட்டிப் பிடித்தது. அன்று நான் பில் கொடுக்கவில்லை. அவள் தந்தாள். இதுவரை இந்த விஷயத்தில் யாருக்குமே இந்த வாய்ப்பைத் தந்தது இல்லை. அவளிடம் தோற்று விட்டேன். இதுவும் மறக்க முடியாத சம்பவமாகப் பட்டது.

அவள் கையில் தவறு]பையில் பணம் வைத்திருந்தாள்; எனக்கு ஒரு வியப்பு ஏற்பட்டது.

நான் சொன்னேன். "பெண்கள் மாறவே இல்லையே" என்றேன்.

"எப்படி"? என்ருள்.

"இந்தச் சந்தைக் கடைகள் பார்த்திருக்கிறேன். அங்கே சுருக்குப் பை வாங்குவதை. கிழவிகள் தான் வாங்குவார்கள்".

அவளுக்குக் கொஞ்சம் அவமானமாகப் போய் விட்டது.

"ஆக அந்தச் சுருக்குப் பைக்கும் கைப்பைக்கும் வித்தியாசமே இல்லை என்று சொல்கிறீர்களா?" என்றாள்.

"நாங்கள் என்ன உங்களைப் போல ஜேபியா வைத் திருக்கிறோம்" என்று கேட்டாள்.

அப்புறம் தான் விளங்கியது. முடியாது என்பது. ரசனை எனக்கு அறிவுறுத்தியது.

அவள் போனபின் நினைத்துப் பார்த்தேன். இது மேல் நாட்டுக் காப்பியா? இந்த நாட்டு அசலா என்று நினைத்துப் பார்த்தேன். இது மேல் நாட்டுச் சாயல் என்பதை முடிவு செய்து கொண்டேன்.

அவளை நினைக்கும் போது எல்லாம் அந்தப் பை அதில் இருந்து அவள் எடுத்துக் கொடுத்த முப்பது ரூபாய், தவறு மூன்று நோட்டுகள் என்றால் மறக்கவே முடியவில்லை.

"படிக்கிற பெண்ணுக்கு இவ்வளவு பணம் எதற்கு?"

"செலவு செய்ய" என்றாள்.

"தெரியும் எதுக்கு உனக்கு? யாருக்காகச் செலவு செய்யப் போகிறாய்?"

"பெண்கள் கையில் கட்டாயம் பணம் இருக்க வேண்டும். நான் சில சமயம் இதைப் போல என் ஆண் சினேகிதர்களோடு படம் பார்க்கப் போவது உண்டு. அவர்கள் காசு கொடுப்பதைத் தவிர்க்க" என்றாள்.

அவள் ஆண் சினேகிதர்களோடு படம் பார்க்கிறாள் என்று சொன்ன போது அவள் என் மதிப்பில் மிகவும் தாழ்ந்து விட்டாள்.

"சே! இவள் பெண்தானு?" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டேன்.

"என்ன பேசாமல் அசந்து விட்டீர்கள்" என்று கேட்டாள்.

"என்ன பேசுவது என்று தெரியவில்லை".

"ஏதாவது படத்தைப் பற்றிப் பேசுங்களேன்".

"பதினறு வயதில்"

"இந்த முப்பத்தாறு வயதில்" என்ருள்.

"இல்லை எல்லாரும் நன்ருக இருக்கிறது என்று சொல்கிருர்களே" என்றேன்.

அதாவது நான் என் ஆண் சினேகிதனேடு படம் பார்த்ததை உங்களால் ஜீரணிக்கமுடியவில்லை.இதுதானே உண்மை என்ருள்.

"ஆமாம்" என்றேன்.

நீங்கள் இந்த நகரத்து பஸ்களில் ஏறிப் பழக்கம். பெண்களை ஒதுக்கி வைக்கும் நாகரிகத்தை அங்கே கற்றுக்கொண்டீர்கள் என்று சொன்னுள்.

"ஏன் அது தப்பா" என்றேன்.

"இல்லை; உட்கார்ந்து இருக்கிற ஆண் பிள்ளைகளை இந்தப் பெண்கள் எழுப்பி இடம் கேட்கிருர்களே அது ரொம்பவும் அநாகரிகமாகப் படுகிறது." என்ருள்.

"ஏன் இவர்களால் நிற்கமுடியும். அதை ஒரு உரிமையாகக் கேட்கும்பொழுது நான் அவர்களுக்காக வேதனைப் படுகிறேன்" என்று முடித்தாள்.

நான் இதை நினைத்துப் பார்த்ததே இல்லை.

"பெண்களுக்கு முதலிடம் தரவேண்டும்" என்று நினைத்து வந்தேன்.

அவள் சொல்கிறாள். "அதுசரி அவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. காலியாக இருந்த இடத்தில் ஆண்கள் உட்கார்ந்து விடுகிறார்கள். அந்த ஆண் அவர்களின் உறவுக்காரர்களாக இருந்தால் அந்தப்பெண் எழ வைப்பாளா? 'பரவாயில்லை, உட்காருங்க' என்று சொல்ல மாட்டாளா என்று கேட்டாள்.

அந்தப் பேச்சிலே எனக்குச் சுவாரசியம் ஏற்படவில்லை.

எழுப்பக்கூடாதுதான். அவர்கள் நின்றுகொண்டு இடிபடுவதைவிட அவர்களை ஒதுக்குவது நல்லது என்றுதான் பட்டது.

"இன்று பெண் ஆணாக மாறுகிறாள்" என்றாள்.

அது எனக்கு விளங்கவில்லை.

அடுத்துச் சொன்னாள் 'ஆண் பெண்ணாக மாறுகிறான்' என்றாள்.

"நீங்கள் கழுத்தில் செயின் ஏன் அணிந்து கொண்டிருக்கிறீர்கள்" என்று கேட்டாள்.

"அது மைனர் செயின்" என்று சொன்னேன்.

"அதுதான் சொல்கிறேன். நீங்கள் பெண்ணைப் போல் நகை அணிந்துகொண்டிருக்கிறீர்கள்."

மறுக்க விரும்பவில்லை.

நான் கொஞ்சம் மயிர்முடி வளர்த்து வைத்திருந்தேன்.

"நீங்கள் ஏன் மயிர்முடி வெட்டாமல் எங்களைப் போல"

"இது இப்பொழுதைய Fashion"என்றேன்.

"அதுதான் நீங்கள் எங்களைப்போல் மயிர்முடி வளர்க்கிறீர்கள்"

"பிறகு"

"எங்களைப்போலக் கலர் சட்டை அணிகிறீர்கள்" என்றாள்.

ஆண்களுள் பலர் ஏன் 'பாப்' முடியும், 'கட்' சர்ட்டும் அணிகிறார்கள் என்பது அப்பொழுதுதான் விளங்கியது.

எங்கள் எதிரே இரண்டுபேர் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள். அவர்களுள் ஒருவர் அதிகமாகப் பேசிக்கொண்டிருந்தார். மற்றவர் கேட்டுக்கொண்டிருந்தார். பேசியதைக்கொண்டு அவள் பெண் என்பதை உணர முடிந்தது. பேசாமல் கேட்டுக்கொண்டு இருப்பதைக்கொண்டு அவன் ஆணாகத்தான் இருக்கவேண்டும் என்று முடிவுக்கு வந்தேன்.

"இதில் யார் ஆண் பெண்? என்று கேட்டாள்.

"கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்" என்றேன்.

அதுதான் இன்றைய நாகரிகப்போக்கு என்றாள்.

"பெண் ஆணைப்போலவே சம உரிமை கேட்கிறாள்" என்றாள்.

"நீ?"

"எனக்கு இருக்கும்பொழுது நான் ஏன் கேட்க வேண்டும்" என்றாள்.

"மறுபடியும் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்" என்று முடித்தாள்.

வாழ்க்கையில் பிறர் காசு கொடுக்க ஹோட்டலில் உடன் இருந்து சாப்பிடுவது இது முதல் நிகழ்ச்சி; மறக்க முடியாத சம்பவமாக இருந்தது. இந்த நினைவுகளோடு வீட்டுக்கு வந்தேன்.

நான் அவளை ஏமாற்றினேன். அவளுக்கு உதவி செய்தது உண்மை. ஏன் எனக்குக் கலியாணமாகிவிட்டது என்று அவளிடம் சொல்லி இருக்கக்கூடாது.

ஒரு பெண் முதலில் அதைச் சொல்லிவிடுவாள். எனக்கும் கழுத்தில் ஒரு 'தாலி' காலில் 'மெட்டி' இருந்தால் அவள் என்னை உடனே புரிந்துகொண்டிருப்பாள்.

"கழுத்தில் மைனர் செயின்" அதை வைத்துக் கொண்டு அவள் எனக்கு இன்னும் கலியாணம் ஆக வில்லை என்று முடிவு செய்துவிட்டாள். 'மைனர் செயின்' என்பதற்குப் புதிய விளக்கம் கிடைத்தது. அவள் சொன்னால் கேட்டாளா.

அதுதான் முரளியின் அம்மா.

"நீங்கள் போட்டுக்கொள்ளுங்கள் நன்றாக இருக்கிறது" என்றாள்.

அதாவது நான் ஒரு பணக்கார அப்பாவின் ஒரே மகன். எனக்கு இருக்கிற தகுதியே அதுதான். அதைக் காட்டுவதுபோல் அது என் கழுத்தில் தொங்கிக்கொண்டு இருந்தது. அவளுக்கு அதிலே ஒரு சந்தோஷம். என்னைப் பணக்காரனாக மதிக்கிறதிலே அவளுக்கு சந்தோஷம்.

அதுவே அவளுக்கு அதுதான் 'நவீன கண்ணகிக்கு' மாறாக நினைக்கும்படி செய்தது. இதுதான் நான் வைத்த பெயர். அப்புறம்தான் தெரிந்தது அவள் உண்மைப் பெயர் மாதவி என்பது.

அவள் அப்பா சிலப்பதிகாரத்திலே ரொம்பவும் ஈடுபாடாம். அவருக்கு மாதவிதான் ரொம்பவும் பிடித்தவளாம்.

அதுசரி கோவலனுக்கே அவள்தான் ரொம்புவும் பிடித்திருந்தது.நெருங்கிய தொடர்பு. கதையே மாதவியின் காதலைத்தானே சொல்கிறது அவள் 'கலைச் செல்வி' என்பது அவள் அப்பாவின் மதிப்பீடாம்.

தன் மகளும் அதைப்போல ஆடல் பாடலிலே சிறக்க வேண்டும் என்று நினைத்துத்தான் அவரும் அந்தப் பெயரை வைத்தாராம். அதேபோலத்தான் அவளும் நேரம் போறதே தெரியாமல் 'துச்சாதனன் துகில்' வரை இருந்துவிட்டு வந்திருக்கிருள்.

அவள் எவ்வளவோ பாடுபட்டாள். கோவலனோடு கடைசிவரை வாழமுடியாமல் போய்விட்டது. என் மாதவி அவளோடு இந்தத் தொடர்பு ஏற்படும் என்று நான் எதிர் பார்க்கவே இல்லை. அவள் பெயர் மாதவி என்று தெரிந்ததும் என் மனைவியைக் கண்ணகியாகப் பார்க்க முடிந்தது.

நான் படிக்காதவன்தான்; ஆனல் சுயசிந்தனை உடையவன். இதை முன்னமேயே சொல்லி இருக்கிறேன். அதனுல்தான் எதையும் உடனே வேகமாக விவரிக்க முடியவில்லை. சில சமயம் கஷ்டப்படுகிறேன். சட்டென்று விஷயத்துக்கு வரமுடிவதில்லை.

முரளிக்கு மாதவி மேலே ரொம்பவும் பிரியம். அவன் தன் அம்மாவிடம் பழகுவதைவிட மாதவியிடம்தான் ஆசை; இது எல்லாம் பின்னுலேதான் தெரிந்தது. மாதவி மறுபடியும் என்னைச் சந்திக்க விரும்பினுள் என்று சொன்னேன்.

அங்கேதான் என் வாழ்வின் புதிய அத்தியாயம் தொடர்ந்தது என்று நினைக்கிறேன். முதல் சந்திப்பிலேயே

எப்பொழுதும் காதல் உண்டாவதே இல்லை. இரண்டாவது சந்திப்பில்தான் காதலே ஆரம்பபாடத்தைப் படிக்கிறது.

அதுவும் பிறர் கஷ்டப்படும்போது அந்தக் கஷ்டத்திலே பங்குகொள்ளும்பொழுதுதான் அன்பே உதயம் ஆகிறது என்பதை அறிந்துகொண்டேன்.

கண்ணகிக்கு மகன் இல்லை; எனக்கு முரளி இருந்தான். மாதவியின்மேல் கோவலன் நாட்டம் வைத்ததில் அர்த்தம் இருக்கிறது. அவன் கலாரசிகன். நான் என்னைப் பற்றி எப்படிக் கூறமுடியும். பிறர்தான் என்னைப்பற்றி விமரிசிக்க முடியும்.

முன்னமே என்னைப்பற்றிப் பலர் விமரிசித்து இருக்கிருர்கள். நான் ஒரு முதலாளி. இது எவ்வளவு பயங்கரமான சொல் என்பது எனக்குத் தெரியாது. 'என்ன முதலாளி' என்று மரியாதையாகச் சொல்லக் கேட்டு இருக்கிறேன்.

நான் குறிப்பிட்டேனே என் பெட்ரோல் பங்குக்கு முன் ஒரு தொழிற்சாலை. அவர்கள் ஒழிக என்று சொல்லும் பொழுது என்னையே சொல்வதுபோல் இருக்கும்.

இந்த முதலாளிகளால்தான் இந்த வேலை நிறுத்தமே ஏற்படுகிறது என்று நினைக்கிறேன். யார் இந்த முதலாளிகளைப் படைத்தார்கள்?

அங்கே ஒரு கம்யூனிஸ்டு தோழர் பேசினர். கார்ல் மார்க்ஸ் சொன்னதாகச் சொன்னர். இயற்கை மனிதனுக்குச் சொந்தம் இல்லை; ஆகாயத்தைப் பார்த்து யாரும் இதை எனக்குச் சொந்தம் என்று சொன்னது இல்லை. நீரைப்பார்த்து யாரும் எனக்குச் சொந்தம் என்று குறிப்பிட்டது இல்லை. நெருப்பு எனக்குச் சொந்தம் என்று சொன்னது இல்லை. நிலம் மட்டும் எனக்குச் சொந்தம்

என்று கூறத்தொடங்கினான். இங்கேதான் முதலாளித்தனம் உண்டாயிற்று என்று கூறினார்.

மண்ணாசை மனிதனுக்கு என்று உண்டாயிற்றோ அன்று தான் அவன் தனக்கு என்று எல்லாவற்றையும் வளைத்துக் கொள்ளத்தொடங்கினான். 'மண் பெண் பொன்' இந்த மூன்றும்தான் மனிதனை மயக்குகின்றன என்று யாரோ ஒரு சாமியார் பேசக்கேட்டு இருக்கிறேன். மயக்கினால் நல்லதுதானே. மயக்கத்திலே இருக்கிற சுகம் எதிலே இருக்கிறது.

அவள் அதுதான் மாதவி என்னை மயக்கிவிட்டாளா? சொல்ல முடியவில்லை. அது மயக்கம் இல்லை; தெளிவு; அவள் ஒவ்வொரு விஷயத்தையும் எவ்வளவு தெளிவாகப் பேசுகிறாள்.

ஆண் பெண் பேதம் மெல்ல மெல்ல மறைந்துவிடும் என்ற தத்துவத்தைப் பேசுகிறாள். இருவரும் சம உழைப் பாளிகள் ஆகப் போகிறார்கள். இதுதான் நடக்கப் போகிறது என்று கூறினாள்.

"எங்கள் அழகைக் கண்டு மயங்குகிறீர்கள். பின் என்ன செய்கிறீர்கள். அழகான வீடு அமைத்துச் சிறைப் படுத்துகிறீர்கள். குடும்பம் என்ற தளையில் அகப்படுத்திச் சிக்கவைக்கிறீர்கள். காதல் என்ற போதையை எழுப்பி விட்டு அதில் எங்களை மூழ்கடித்து விடுகிறீர்கள். குழந்தை களைப் போல் எங்களுக்கு முத்தம் கொடுக்கிறீர்கள். தழுவிக் கொள்கிறீர்கள். தொட்டுத் தொட்டுப் பார்க்கிறீர் கள். நாங்கள் என்ன பொம்மைகளா? தொட்டுப் பார்க்க" என்று கேட்கிறாள்.

எனக்கு அவளைப் பற்றி ஒன்றும் புரியவில்லை. இதற் குத்தான் படித்திருக்க வேண்டும் என்பது. என் மனைவி நான் தொட்டால் சந்தோஷப்பட்டாள்; அவள் எனக்குச்

சொந்தம் என்ருல் ரொம்ப மகிழ்ச்சி; 'சொந்தம்' என்ற சொல்லே இப்படித்தான் உண்டாகி இருக்க வேண்டும். 'என் மனைவி எனக்குச் சொந்தம்' என்று பேசக் கேட்டு இருக்கிறேன். இந்த வீடு எனக்குச் சொந்தம் என்பதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது என்று கூறுகிருள்.

என் மனைவி எனக்காகவே வாழ்கிருள். அப்படித் தான் முன்னல் சொல்லிக் கொண்டிருந்தாள். நான் ஒரு முறை ஒரு புதிய வியாபாரம் செய்யத் தொடங்கினேன். அதில் துணிந்து இருபதினுயிரம் போட்டேன். அதாவது கார் சாமான் கடை; அது ரொம்பவும் குறைவுதான். ஆனல் 'லோன்' வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னுர் கள். வியாபாரமே அப்படித்தானே? நாம் பிறரிடம் கடன் வாங்குகிரேம். நாம் பிறருக்குக் கடன் தருகிரேம். பணத்தைப் புரட்டுகிரேம்; பிறகு பணம் புரள்கிறது. பிறகு அதற்கு உரியவன் அதில் புரள்கிருன்; புரட்சி என்று எதையோ சொல்கிருர்கள், இதை மறந்து விட்டு.

அன்று ஒரே சண்டை. "உங்களை யார் அதில் இறங்கச் சொன்னது? உங்களுக்குப் பின்னல் யார் அதைக் கவனித்துக் கொள்வார்கள்?" என்று கேட்டாள். நான் ஒரு நாள்கூட அப்படி நினைத்தது இல்லை. அவ்வளவு விரைவில் நான் இந்த உலகத்தை விட்டு ஏன் போகப் போகிறேன். என் மனைவிக்காகவாவது நான் வாழத்தான் வேண்டும்.

அவளுக்கு வைத்த பெயர் மாதவி; அவள் எனக்கு மதுவாகவே விளங்கினுள். அவளை 'மது' என்றே கூப்பிட் டேன். அவள் 'உமது விருப்பம்' என்ருள்.

அவளோடு பழகுவது ஒரு புதிய அனுபவம். ஏன் கோவலன் மாதவியிடம் மயங்கினுன்? ஆடல் பாடல் அழகு என்று சொல்லுகிருர்கள். அதுவல்ல காரணம். அவள் கண்ணகியை விட அறிவுடையவள். கண்ணகிக்கு உலகம் தெரியாது; வீடு மட்டும்தான் தெரியும். அவளை

எழுநிலை மாடத்தில் வைத்து அழகு பார்த்தான்; அவள் பேசாமல் அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந் தாள். பேசாத பெண்ணிடம் அவன் எந்தச் சுவை காண முடியும்? எப்பொழுதோ ஒரு முறை சிரிப்பாள். கஷ்டம் வந்தால் வெளியே சொல்ல மாட்டாள்.

மாதவி சமுதாயப் பெண்; மற்றவர்களை மகிழ வைத் தாள்; அதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவள் தனக்கே உரியவளாக இருக்க வேண்டும் என்று விரும்பினான். அவள் பாடலை யாரும் கேட்கக் கூடாது என்று நினைத்தான். எனக்கு என்ன வேலை. இந்த மாதிரித் தமிழ்ப் புத்தகங்களை நிறைய படித்து இருக்கிறேன்.

சிலம்புச் செல்வர்கள் நிறைய நம் நாட்டில் இருக்கிறார் கள். அவர்கள் பேசுவதையும் சில சமயம் கேட்டு இருக் கிறேன். ஆவேசம் வந்தது போல் பேசுவார்கள். அதைக் கேட்டு எனக்குள் சிரித்துக் கொள்வேன்.

கண்ணகியை ஆகா, ஓகோ என்று அளந்துகொண்டே இருப்பார்கள். அவர்களுடைய கருத்து என்ன? கண்ணகி போல இந்த நாட்டில் பேசா மடந்தைகளாக இருக்க வேண்டும். அப்புறம் 'லபோ, திபோ' என்று அடித்துக் கொள்ள வேண்டும்.

மாதவி கோவலனுக்காக அழவில்லை. அவள் அவனைத் தனக்குச் 'சொந்தம்' என்று நினைக்கவில்லை. சமுதாயப் பார்வையில் இருந்து அவள் முடிவை எடுத்துக்கொண் டாள். தன் மகளை இல்வாழ்க்கைப் படுத்த நினைக்கவில்லை. காணார் கேளார் கால் முடப்பட்டார் இவர்களுக்குச் சேவை செய்ய அனுப்பினாள்.

என் மது அடிக்கடி இந்த மேகலையைத்தான் குறிப்பிடு வாள். தமிழ்க் காப்பியங்களிலேயே மிக உயர்ந்த

காப்பியம் மணிமேகலைதான். அவள் ஒருத்திதான் இந்தக் குடும்பம் என்ற கட்டுக்குள் அடங்காமல் சமூகப் பெண்ணாக வாழ்ந்தாள். உதயகுமரனிடத்தில் உள்ளம் பாய்ந்தது." புதுவோன் பின்னால் என் நெஞ்சு போயிற்று. இதுதானா காதலின் இயற்கை. இது காதலாயின் கெடுக அதன்திறம்"என்று சொல்லித் துறவுக் கோலம் பூண்டாள். எதற்காக? பசியால் வருந்தும் எளியவர்க்கு உணவு பங்கிட. சமுதாய உணர்வு அவளிடத்தில்தான் தோன்றியது என்று கூறுகிறாள்.

வேறு என்ன வேலை எங்களுக்கு இருக்கிறது? அந்தக் கண்ணகியின் சிலைக்குப் பக்கத்தில் கடற்கரை மணலில் வேறு என்ன பேச முடியும்? அங்கே உட்கார்ந்தால் கண்ணகியைப் பற்றிப் பேசுவோம்; காந்தியின் சிலையின் பக்கத்தில் நான், எதிரே இருக்கும் கல்லூரி அவளைப் போன்றவர்கள் படிக்கும் கல்லூரியாயிற்றே என்று பார்த்துக் கொண்டிருப்பேன். அவள் காந்தியைப் பற்றியே பேசுவாள். தொழில் சிலைக்கு வரும்பொழுதுதான் அவளுக்குக் கொஞ்சம் வேகம் வரும்.

பொதுச் சொத்தை மதிக்க வேண்டும் என்று கூறுவாள்.

"அப்படி என்றால்?"

"பஸ்களை நிறுத்தி உடைக்கக் கூடாது" என்பாள்.

"மற்றொன்று பொதுச் சொத்தைக் கொள்ளை அடிக்கக் கூடாது" என்று கூறுவார்.

இந்த இரண்டு செயல்களை யார் செய்தாலும் அவர்களை மதிக்கக் கூடாது என்கிறாள்.

அதாவது'வன்முறையைத் தூண்டுகிறவர்களை மன்னிக்கக் கூடாது' என்பது அவள் வாதம். மற்றொன்று ஊழல்

உண்மை என்று பட்டால் அவர்களுக்குத் தக்க தண்டனை தந்துதான் தீரவேண்டும்'' என்று கூறுகிறாள்.

பெண் அரசியல் பேசுவது எனக்கு வியப்பாக இருந்தது. கடற்கரையில் காதல் பேசுவாள் என்று எதிர்பார்த்து தான் அவளைச் சந்தித்தேன். அடிக்கடி சந்திப்போம். அவளுக்கு அரசியல்தான் அதிகம் பிடிக்கும். மற்றொன்று இலக்கியம். இலக்கியம் எனக்குத் தெரியாது. அரசியல் கொஞ்சம் சொன்னால் புரிந்து கொள்வேன்.

''உங்களை எனக்கு பிடித்து இருக்கிறது'' என்று கூறுவாள்.

அவள் என்னை ஸ்கூட்டரில் பிடித்த போதே அது எனக்குத் தெரிந்த விஷயம். அவள் அதைச் சொல்ல வேண்டிய தேவையே இல்லை.

அவளை வழி மறித்துப் பாஞ்சாலி சபதம் நாடகம் நடத்தியதிலிருந்து இந்த வன்முறைகளைக் கண்டால் அவளுக்கு ஒரே வெறுப்பு. இவர்கள் எல்லாம் காட்டு மிராண்டிகள் என்று கூறுகின்றாள்.

அவள் என்னைப் 'பதினாறு வயதா' என்று கேட்டதால் அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு வந்தேன். அந்தப் படம் மிகச் சிறந்த படம் என்று சொன்னார்கள்.

படம் சிறந்ததுதான்; டாக்டர் அவளைக் கெடுக்க முயற்சி; அதனால் அந்த வாழ்க்கை நாசமாகியது. ஏதோ எங்கோ ஒரு நாவல் அதுதான் சினிமாவாக வந்ததே அந்தக் கதையின் சாயல். அதே ஆசிரியர் 'என் ராஜா வருவார்' என்று எழுதிய சிறுகதையின் சாயல். கதை இந்த வகையில் 'காப்பி' என்று பட்டது. அதை அவள் ஒப்புக்கொள்ளவில்லை. ''நீங்கள் அந்தக் கதை படித்தது குற்றம்'' அதனால் அதை வைத்து இதைப் பார்க்கிறீர்கள் என்கிறாள்.

சரி நீங்களே சொல்லுங்கள். அந்தக் கதை முடிவு சரியா. ஓர் அழகியைச் சப்பாணிக்கு ஆசிரியர் மணம் முடித்து வைக்க விரும்பவில்லை. அவனைத் தடுக்கவே ஒரு கொலை; அவனைப் பிரித்து விட்டார். அங்கேதான் கதாசிரியர் மனம் திருந்தவில்லை. அவரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. டாக்டர் அவளைத் தொட இடங் கொடுத்தார். சாப்பாணி தொட முடியவில்லை. இது என்னமோ இப்படி என்னை அந்தப் படம் சிந்திக்கத் தூண்டியது.

அவள் என் முடிவை ஒப்புக் கொள்ள வில்லை. இதெல்லாம் யார் பார்க்கிறார்கள். நடிப்பு அழகாக இருக்கிறது என்றாள். கலரில் படம் அதைவிட அழகாக இருக்கிறது. அவள் 'பதினாறு வயது' அதுதான் கதைக்கு வெற்றி என்றாள்.

'பாபி' படம் இப்படித்தான் என்று நினைக்கிறேன்.

அவள் பந்தயத்தில் தோற்று விடுவது அழகாக இருக்கிறது; அவளைச் சிரிக்க வைக்கிறான் கமலஹாசன். அது அழகாக இருக்கிறது.

வீட்டில் சதா மதுவைப்பற்றியே நினைப்பேன். அவளும் நம்புகிறாள் நான் மணமாகாதவன் என்று. நான் நினைத்துப் பார்க்கிறேன். அவள் என்னைப் பளிச்சென்று கேட்டு இருக்கக் கூடாது.

ஸ்கூட்டரில் நான் தனியாகப் போவது கழுத்தில் மைனர் செயின் இது அவளுக்குப் போதும்.

அவள் பொதுவாகச் சொல்லுகிறாள். ரொம்ப பேரிடம் ஒரு கெட்ட பழக்கம் எப்பொழுதும் குடும்பத்தைப் பற்றிச் சொல்லுகிறார்கள்.

"உங்களுக்கு எத்தனை பசங்க?"

"ஆண் பெண்"

"பரவாயில்லே. எல்லாம் ஆம்பளே பசங்க."

"சரிதான் சார்! பெண்தான்! படிக்க வச்சாப் போச்சு."

இப்படிக் கேட்பது அநாகரிகம் என்று சொல்கிருள்.

ஒரு பெரிய பிரகஸ்பதி இருக்கிருர். அவர் என் பாலிய சினேகிதர். அவர் ஒரு பெரிய பிசினைஸ் வைத்து இருக்கிருர். அதாவது 'பொம்மைகளே உற்பத்தி செய்தல்' அவர் அதிகம் பேசமாட்டார்.

அவரிடம் ஒரு நாள் போயிருந்தேன்.

"உங்க உடம்பு எப்படி?" என்று கேட்டார்.

"நல்லாத்தான் இருக்கிறேன"

இவர் என்ன வைத்தியரா?

அவசியமில்லாத கேள்வியாகப் பட்டது.

நான் தான் கெட்டிக்காரன் என்று நினைத்தேன். அது இல்லே என்பதை அவள் நிருபித்து விட்டாள்.

எத்தனேயோ நாள் நாங்கள் சந்தித்து இருக்கிறேம். பேசி இருக்கிறேம், எனக்கு அது இனிமையான நாட்கள். இல்லே என்று எப்படிச் சொல்ல முடியும்.

அவள் சொன்னுள் "உங்களுக்குக் கலியாணம் ஆகி இருக்கிறது. அது எனக்குத் தெரியும்" என்ருள்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவளே சொன்னுள்."அடிக்கடி நேரம் ஆகிவிட்டது" என்று சொல்கிறீர்கள். கடிகாரத்தை அவ்வப்பொழுது பார்க்கிறீர்கள். அதிலிருந்து தெரிந்து கொண்டேன்" என்ருள்.

நான் மனைவியிடம் பொய் சொல்ல முடிந்தது. பிஸினஸ் அப்படித் தான் லேட்டாகும் என்று சொல்லி விடுவேன். அவள் நம்பிவிடுவாள்.

இவளிடம் நான் பொய் சொல்ல முடியாமல் போய் விட்டது. முன்னர் கூட நான் எங்கே பொய் சொன்னேன். உண்மையை மறைத்தேன். இரண்டுக்கும் கொஞ்சம் வேறுபாடு இருக்கிறது.

"அப்படியானல் எப்படி என்னை விரும்புகிருய்?" என்று கேட்டேன்.

"நீங்கள் அதிகம் படிக்கவில்லை. அதனுல் தான் விரும்புகிறேன்" என்ருள்.

என்னை அது அவமானப் படுத்துவது போல் இருந்தது.

"நான் படிக்க வில்லை என்பது உனக்கு எப்படிச் சொல்ல முடியும்?"

"கொஞ்சம் புத்திசாலியாக இருக்கிறீர். அதனுல் தான் தெரிந்து கொண்டேன்."

படித்தவர்களைப் பற்றி ஏன் இவ்வளவு தவருக அபிப்பிராயம் வைத்திருந்தாள் எனக்குத் தெரியவில்லை.

"ஏன் அப்படிக் கூறுகிருய்?"

"நானும் படித்திருக்கிறேன்; அதனுல் தான் அப்படிச் சொல்கிறேன்" என்ருள்.

"நல்லது தானே?"

"ஆமாம் படிப்பு இன்னது என்று தெரிந்து கொண் டேன். அந்த வகையில் அது நல்லது தான்."

"திருப்பித் திருப்பி என்ன சொல்லிக் கொடுக்கிறார்கள் தெரியுமா? இந்தத் திருக்குறள் தான்" என்றாள்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அதை நான் படித்தது இல்லை. பஸ்ஸில் அர்த்தம் தெரியாமல் ஏதோ எழுதி வைத்திருந்தார்கள். அது தான் திருக்குறள் என்று தெரியும்.

"அவர் என்ன அப்படித் தவறாகச் சொல்லி விட்டார் என்று கேட்டேன்.

"தவறு இல்லை மூளையைக் கெடுத்து வைத்து விட்டார். மனிதனைச் சுயநல வாதியாக ஆக்கிவிட்டார்" என்றாள்.

"எப்படி?"

"இல்லறம் துறவறம்" என்ற சொல்லடுக்குகளை நான் ஏற்றுக் கொள்ள முடியாது என்றாள்.

"அப்படி என்றால்?"

"அறம் ஒன்று தான் அது மனித அறம். அது இந்தச் சமுதாயத்தில் நீ ஒருவன் என்பது. நீ சேர்ந்தது தான் சமுதாயம் என்பது.தனிமனிதன் இந்தப்பரந்த உலகத்தில் ஒரு பிரஜை. அவன் இந்த உலகத்தை வளமுடையதாக ஆக்க வேண்டும். அழகு படுத்த வேண்டும்.

அதைத் தானே செய்கிறோம்.

ஒவ்வொருவனும் தன் வீட்டைத்தான் கவனிக்கிறான். குடும்பஸ்தனும் வீட்டைப் பற்றியே கவலைப் படுகிறான். துறவியும் 'வீட்டைப்' பற்றியே கவலைப் படுகிறான் 'நாட்டைப்' பற்றி மறந்து விடுகிறார்கள் என்று கூறினாள்.

"நான் உண்மையைச் சொல்லி இருக்க வேண்டும்" என்றேன்.

"சொல்லத் தேவை இல்லை. அதனால் எதையும் நான் இழக்கவில்லை" என்றாள்.

"ஏன்?"

"தங்களை மணக்க விரும்பவில்லை. பழகத்தான் விரும்பினேன்.

"எனக்காக ஓர் உண்மையை மறைத்தீர்களே அது தான் என்னைக் கவர்கிறது. என்னிடத்தில் உங்களுக்கு இருக்கின்ற ஈடுபாட்டை அது காட்டிற்று," என்றாள்.

எனக்கு இது வியப்பாக இருந்தது. எந்தத் தவறுக்காக வெட்கப்பட்டேனோ அதனையே அவள் பாராட்டினாள்.

நான் இதுவரை பெண் என்றால் அவள் காதலுக்குத் தான் உரியவள் என்று நினைத்தேன். அவள் பழகுவதற்கும் இனியவள் என்பதைக் காட்டினாள்.

இந்தக் கடற்கரைக் காட்சி என் உள்ளத்துக்கு இனிமை தருகிறது. அங்கே அவள் சில நாட்களில் வரமாட்டாள். அவள் எப்படி வர முடியும்? அவள் படிக்கும் மாணவியாயிற்றே. தேர்வுகள், படிப்புகள் என்னென்ன மோ சொல்கிறார்கள்; பலநாள் அவளைச் சந்திக்க முடியாது. நூல் நிலையங்களுக்குச் சென்று விடுவாள் படிப்பதற்காக. கட்டுக் கட்டாகப் புத்தகங்கள் அவள் கரங்களில் தவழும்; அந்தப் புத்தகங்கள் அவ்வளவும் படித்துத் தானே அவள் அறிவு பெறுகிறாள்.

எனக்கே கொஞ்சம் வெட்கம் ஏற்பட்டு விடும். ஒரு பெண் இவ்வளவு படிக்கிறாள். நான் என்ன செய்தேன். என் அப்பன் வைத்து விட்டுப் போன சொத்தை மூலதன மாக வைத்து என் வாழ்க்கையைத் தொடங்கினேன்; தொடருகிறேன். அதையே என் முரளிக்கு வைத்துச் செல்கிறேன். அதை நம்பித்தான் என் மனைவியும்

என்னைக் கொண்டாள்; அதாவது கணவனைக் கொண்டாள். நான் தனியாக விடப்பட்டால் நான் எதுக்கு லாயக்கு? எண்ணிப் பார்க்கிறேன்.

பெரிய பணக்கார வீட்டுப் பெண்ணை எனக்குக்கட்டி வைத்தார்கள். அவள் பாட்டன் அவளுக்கு நிறைய சொத்து வைத்து விட்டுச் சென்றிருக்கிறார். நிறைய நகை வைத்திருக்கிறாள் அதற்காகவே ஒரு பெண் வேண்டும் என்று கவலைப்படுகிறாள். "எனக்குப் பின்னால் யார் இந்த நகைகளைப் போட்டுக் கொள்ளப் போகிறார்கள்.?" அதுவே அவளுக்குக் கவலை.

நான் சொல்வேன்,"ஏன் உனக்கு நிச்சயம் ஒரு மருமகள் வரப்போகிறாள். அவளுக்குப் போட்டு அழகு பார்க்கலாமே" என்று.

"எனக்கு என்று ஒரு பெண் வேண்டும்" என்று கூறுகிறாள். "ஒன்று கொடுக்க ஒன்று வாங்க" என்று அழகாகச் சொல்லுவாள், கொடுக்கல் வாங்கல் வாணிபத்தில் பார்த்திருக்கிறேன். அது அவள் வாழ்க்கைத் தத்துவமாக அமைந்திருக்கிறது.

'இரண்டுக்கு மேல் வேண்டாம்' என்ற விளம்பரம் அவள் கண்ணில் பட்டு இருக்கிறது. நான் சொல்லுவேன் 'ஒன்றுக்கு மேல் வேண்டாம்'. என் அப்பாவுக்கு நான் ஒரே பிள்ளை. அதனால்தான்.

"அதனால்தான் நீங்கள் செல்வமாக வளர்ந்து விட்டீர்கள், செல்வமாக வளர்க்கப் பட்டீர்கள்."

நான் படிக்கவில்லை என்பதை இப்படிக் குத்திக் காட்டுவாள்.

நான் படித்த இந்தக்கூட்டத்தைப் பார்க்கிறேன். அவர்கள் இன்று என்ன செய்கிறார்கள்.

விண்ணப்பம் போடுகிறார்கள். வேலைக்குத் திண்டாடு கிறார்கள். பிறகு எப்படியோ ஒரு வேலையைப் பிடித்துக் கொள்கிறார்கள். யாரோ ஒரு சிலர்தான் மேல் படியை எட்டிப் பார்க்கின்றார்கள். பல பேர் சாதாரண குமாஸ்தாக் களாகவே மாறுகிறார்கள். பிறகு 'இன்கிரிமெண்டு' பற்றாக் குறை. இதுதானே இன்றைய சராசரி படித்தவர்களின் கஷ்டம். இந்த உலகத்தையே மறந்துவிடுகிறார்கள். குடும்பம் குழந்தைகள் நோய் நொடி இந்தப் போராட்டங்கள்.

யாரோ ஒருவர் என்னைப் பார்த்து ஒரு சின்ன கேள்வி கேட்டார்.

"குழந்தைகள் மட்டும் சின்னச் சின்ன விஷயத்துக் கெல்லாம் சிரிக்கின்றனவே வயதானவர்கள் ஏன் சிரிக்க மாட்டார்கள்?".

"குழந்தைகளுக்கு வாழ்க்கை சுமையாக இல்லை. அவர்கள் மற்றவர்களுக்குச் சுமையாக இருக்கிறார்கள். அவர்களுக்காக மற்றவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதனால் அவை சிரிக்க முடிகின்றன" என்றேன்.

எப்படியோ நான் படிக்கவில்லை. அதை ஒரு குறை யாகவே நினைக்கிறாள் பத்மினி. அதுதான் என் மனைவியின் பெயர். நான் அவளைப் 'பத்து' என்றுதான் கூப்பிடுவேன்.

"எல்லாரையும்தான் பத்து மாதம் சுமக்கிறார்கள்" என்று அவள் கிண்டலாகச் சொல்லுவாள்.

அப்படியானால் உன்னை 'மினி' என்று கூப்பிடுகிறேன் என்பேன்.

"அவள் வேண்டாம் நான் 'பத்தாகவே' இருக்கிறேன்" என்பாள்.

அந்தக் கடற்கரைக் காட்சியைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். அது எனக்குப் பொழுதுபோகும் இடம்

மட்டும் அல்ல; என் அறிவை வளர்த்துக் கொள்ள அது மிகவும் பயன்பட்டது.

அங்கே 'அன்னி பெசண்டு' சிலை ஒன்று கவனிப்பாரற்றுக்கிடந்தது. அவர்கள்தான் அந்தக் காலத்தில் இந்திய சுயராச்சியத்துக்குத் துணை செய்தார்கள் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப்பக்கம் பார்க்கிறேன். மீன் பிடிக்கும் குடும்பங்கள் அங்கே குடி இருக்கிறார்கள். அங்கே ஒரே அசுத்தம் செய்து வைத்து இருக்கிறார்கள். நடக்கவே முடிவதில்லை.

அங்கே திடீர் என்று கூச்சல் போட்டுச் சண்டை போட்டுக் கொண்டு இருப்பார்கள். விஷயம் என்ன என்று தெரியாது. அத்தனை பேரும் 'பிலுபிலு' என்று பிடித்துக் கொண்டு சண்டை போட்டுக் கொள்வார்கள். அந்தச் சின்னப் பயல்கள் வழியிலேயே உட்கார்ந்து விடுகிறார்கள். யாரும் அவர்களைக் கண்டிக்க முடியாது.

சில சமயம் நடந்து போவது உண்டு. அவள் இப்பொழுது ஸ்கூட்டரில் ஏற மறுத்துவிட்டாள்.

"அது அவ்வளவு நல்லது அல்ல" என்று சொல்கிறாள்.

"அந்த ஆசை எனக்கு இல்லை என்று சொல்லி விட்டாள்.

அதற்கப்புறம் நான் மட்டும் ஓட்டிக் கொண்டு செல்வதில் எனக்கு விருப்பம் ஏற்பட்டது இல்லை, பஸ்ஸிலேயே மரீனா அடைவேன். அதுதான் நல்லது என்று நினைக்கிறேன்.

அவள் இப்பொழுது எல்லாம் தேர்வுக்குப் படித்துக் கொண்டு இருந்தாள். அதிகம் என்னோடு பழக முடியாமல் போய்விட்டது. நான் சொல்ல மறந்து விட்டேன். அவள்

சென்னையில் குடியில்லை, அதாவது, அவர்கள் பெற்றோர்கள் சென்னையில் இல்லை என்பது அர்த்தம்.

அங்குக் கடற்கரைக் கட்டடங்களுள் ஒன்றில் விடுதி ஒன்று இருந்தது. அங்கே ரொம்பவும் கட்டுப்பாடு அதிகம். ஏழு மணிக்கு எல்லாம் உள்ளே போய்விட வேண்டும்.

நான் அங்கே செல்வது இல்லை. விசிட்டர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்று சொல்வார்கள். நான் செல்வது இல்லை. அங்கு நான் அவளுக்கு எந்த உறவு என்று எப்படிச் சொல்வது.

என் ஸ்கூட்டரில் அவள் பின்னால் ஏறிச்சென்றால் அவர்கள் கலைத கட்டுவார்கள். அவளுக்கு நான் காதலன் என்று சொல்லுவார்கள். அதில் ஒன்றும் தவறு இல்லை. அதை அவள் ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டாள். என்னிடம் அவள் நட்பைத்தான் விரும்புகிறாள். முக்கியமாக என்னோடு பொதுச் செய்திகள் தான் விமரிசிப்பாள்.

அன்றாட அரசியல் பேசுவதில் தனி அக்கறை காட்டினாள். அவள் சொல்லுகிறாள் 'ரொம்ப பேர்' அரசியலை ஒதுக்குகிறார்கள் அது தவறு என்கிறாள்.

'அரசியல் அயோக்கியர்களின் புகலிடம்' என்று யாரோ எழுதி வைத்தார்களாம். அதுவும் அவள்தான் சொல்லுகிறாள். அப்படி எழுதியிருக்கக் கூடாது. அதுதான் உண்மையான தொண்டு செய்வதற்கு வாய்ப்பு அளிக்கிறது என்று சொல்கிறாள்.

இளைஞர்கள் மாறிவிட்டார்கள். அரசியலில் இருந்து அவர்கள் ஒதுங்குவது இல்லை என்று கூறுகிறாள். எனக்கு என்ன தெரியும் இந்தக் காலத்தில்படிக்கும் இளைஞர்களைப் பற்றி.

அடுத்து சினிமாவும் புறக்கணிக்கக் கூடாது என்று கூறுகிறாள். இதில் மிகக் குறைந்த செலவில் மிக்க பயன் கிடைக்கிறது.

"இது எப்படி"? என்ற டயலாக் ரஜனிகாந்த் அடிக்கடிப் பேசுவது ஒரு ஹிட் ஆய்விட்டது. அன்று ஒரு விசிறிகளின் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். எனக்கு மேடையில் பேசிப் பழக்கம் இல்லை என்று சொல்லிவிட்டு"இது எப்படி இருக்கிறது?" என்று கூறினர். ஒரே சிரிப்பு இது 'பதினறு வயதினிலே' வரும் சுவையான பேச்சு.

"நான் உன்னைக் காதலிக்கவில்லை. உன் பதினறு வயதுதான் என்னைக் கவர்ந்தது"என்கிருள் அந்த டாக்டர். இதுவும் பிரமாதமான டயலாக்கு.

இதெல்லாம் கேட்கப் பார்க்கச் சுவை தருகிறது என்கிருள். அந்தச் 'சப்பாணி' பிரமாதமான படைப்பு என்கிருள். பரட்டையை அப்படியே விட்டு விட்டு இருக்கலாம். அவன் பெரிய வில்லன் என்று கூற முடியாது. சாதாரண சராசரி பேர்வழி. கதை "பார்முலா" ஒரு 'ரேப்' ஒரு 'கொலை' அவசியம் என்று பட்டது. ரொம்பவும் செயற்கையாகக் கதை முடிக்கப்பட்டது என்பது என் அபிப்பிராயம். அவள் அதை ஒப்புக் கொள்ளவில்லை. அப்படித்தான் முடியவேண்டும்.

கலியாணம் முக்கியம் இல்லை. கதைதான் முக்கியம் என்ருள்.

அவள் சொந்த வாழ்க்கையில் கலியாணத்தை விரும்புகிருளா, கதையை விரும்புகிருளா என்று அறிய விரும்பினேன். உனக்கு எது பிடிக்கும்?" என்று கேட்டேன்.

"கதைதான் பிடிக்கும்" என்ருள்.

"கலியாணம்?"

"உங்களுக்கு?" என்று கேட்டாள்.

நான் எண்ணிப் பார்க்கிறேன். பதில் சொல்ல முடிய வில்லை. 'பத்துக்கு' அது முக்கியமான நிகழ்ச்சி. அவள் வருஷத்தில் இரண்டு நாட்களை நினைவுபடுத்திக் கொள்கிருள். ஒன்று அவள் பிறந்த நாள். நிச்சயமாக அன்று மோர்க்குழம்பு வைத்து விடுகிருள். அதுதான் அவனுக்கு ரொம்பவும் பிடித்தது. மற்ருென்று 'கலியாண நாள்' எப்படியும் ஒரு ஸ்வீட் செய்து விடுவாள்.

"அம்மா இன்னிக்கு என்னம்மா?"

"உங்க அப்பாவைக் கேள்"

"அம்மாவை நான் கலியாணம் பண்ணிக் கொண்ட நாள்" என்று நான் விளக்கம் சொல்வேன்.

"சரியான பைத்தியம்பா நீ" என்று சொல்வான்.

அவனுக்கு இது ஒரு வழக்கமான பேச்சாக அமைந்து விட்டது.

அவனுக்கு ஏதாவது புதுமையாகப் பட்டாலும், சரி இல்லை என்று பட்டாலும் உடனே 'சரியான பைத்தியம்பா நீ' என்று சொல்லிவிடுவான்.

"ஏண்டா நீ கலியாணமே பண்ணிக்க மாட்டியா?"

"ஓ பண்ணிப்பேன்" என்று துணிச்சலாகச் சொல்வான்.

"யாரை?"

"என் பெண்டாட்டியை" என்று சொல்வான்.

நானும் பத்துவும் சிரிப்போம். நாங்கள் சிரிப்பதற்கு அவன் ரொம்பவும் உதவி இருக்கிருன்.

திடீர் என்று அவன் சிரிப்பான். இப்பொழுது அல்ல. இரண்டு வருஷங்களுக்கு முன். அவன் அப்பொழுது இவ்வளவு அறிவு பெறவில்லை.

அவன் சிரிப்பு எங்களுக்குச் சொல்ல முடியாத சந்தோஷத்தைக் கொடுக்கும். இப்பொழுது அவன் எங்களைப் பார்த்துச் சிரிக்கிறான். கேள்வி கேட்டுவிட்டுச் சிரிப்பான். அவன் கண்ணில் நான் ஒரு பயித்தியமாகக் காணப்பட்டேன்.

"ஏண்டா நீ யாரையாவது பைத்தியக்காரனைப் பார்த்திருக்கிறாயா?"

"இல்லை அம்மா உன்னை அப்படிச் சொல்லுகிறாள்."

எப்படி இந்தப் பழக்கம் இந்த முரளிக்கு ஏற்பட்டது என்பதை அப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன்.

அவனுக்கு என்னைப் பற்றிச் சரியான அபிப்பிராயம் கிடையாது என்று தெரிந்து கொண்டேன்.

ஒரு நாள் தூக்கத்திலே ஒரு கனவு கண்டேன். மதுவும் நானும் ஒரு மாந்தோப்புக்குப் போகிறோம். அவள் மரத்து மேலே ஏறிக்கொண்டு பழங்களைப் பறிக்கிறாள். அவள் மட்டும் கடிக்கிறாள். "மது மது எனக்கு" என்கிறேன்.

தூக்கத்தில் 'மது மது' என்று கத்திவிட்டேன்.

அவள் என்னை உணர்த்தினாள்.

"என்ன மயக்கமா?" என்று கேட்டாள்.

"இல்லை தூக்கம்" என்றேன்.

"மது என்றீர்களே"

"அதுதான் ஒழித்து விட்டார்களே?' என்றேன்.

"தூக்கத்திலே கூட அதைத்தான் சொல்லிப் பிதற்று கிறார்கள்" என்றாள்.

மறுநாள் காலையில் கேட்டாள்.

"யார் அந்த மது" என்றாள்.

"அவள் ஒரு மாது" என்றேன்.

"மாதுதான் உங்களுக்கு மதுவா"

"இல்லை அவள் எனக்குக் காவியம்" என்றேன்.

"அவள் கலியாணமானவளா?"

"ஆக வேண்டியவள்."

"அப்படியானால்"

"எப்படியானால்" என்று திருப்பிச் சொன்னேன்.

"அவளை நீங்கள்"

"ஆசைப்படக் கூடாது" பின் கலியாணம் ஆன வளையா ஆசைப்படுவார்கள்.

"இதோ பாரு எங்க அம்மா வீட்டுக்கு"

"ஏன்"

"ஆமாம். அவளைக் கொண்டு வந்து வைத்துக்கொண்டு ஹாய்யா குடித்தனம் பண்ணலாம்."

எனக்கு என்னமோ மாதிரி இருந்தது. அவளே எனக்கு அந்த ஆசையை ஊட்டிவிட்டது போல் இருந்தது.

அவள் என்னைப் பற்றி இல்லை. எனக்காகக் கனவு கண்டாள். நான் திடீர் என்று ஒரு கார் விபத்தில் அகப்

பட்டுக் கொள்கிறேன். அந்தக் கார் என் ஸ்கூட்டரில் மோதுகிறது. நான் தூக்கி எறியப்படுகிறேன். அவள் அலறி எழுகிருள்.

"அவர் அவர்" என்று அலறி எழுந்தாள். பக்கத்தில் அவள் 'மேட்' அப்படித்தான் சொல்லிக்கொள்கிறார்கள் அங்கே ஒருவரை ஒருவர். அதாவது 'ரூம் மேட்' என்று அர்த்தம்.

அவள். "என்னடி?"

"கனவு"

"எதைப் பற்றி?"

"அவர்"

"அவர்? என்ன அது? யார் அந்த அவர்?"

"அவர்தான் என் சிநேகிதர் கடற்கரை நண்பர்."

"காதலர் என்று சொல் அதுதான் அழகாக இருக்கும்"

"அவருக்கு மணமாகிவிட்டது."

"அதனுல் அவர் காதலர் ஆக முடியாதா?"

கொஞ்சம் அசிங்கமாகப் பேசிவிட்டாள்.

"அவர் எப்படிக் காதலர் ஆக முடியும். உனக்குத் தமிழே தெரியவில்லை. பின்னுல் கலியாணம் பண்ணிக் கொண்டால்தான் அப்படிச் சொல்லலாம்."

"பின்?"

"அதுதான் நண்பர்"

"Boy Friend"

"இல்லை man friend, அவர்தான் அன்று என்னைக் காப்பாற்றினர். அன்று பஸ் ஸ்ட்ரைக் நடந்ததே. அன்று துச்சாதனன் துகில் நாடகம். அது முடிந்து வீடு திரும்பும் போது வன்முறையாளர்கள் வழி மறித்தார்கள். அன்று அவர் வராவிட்டால்."

"என்னடி சினிமாக் கதை பேசறே"

"உனக்கு சினிமாக் கதை என்றால் அவ்வளவு கேவல மாகப் போய்விட்டது. அதைப் போல் நடக்காது என்று சொல்றியா?"

"இல்லை. அதைச் சாதாரணமாக அமைத்து விடுகிறார் கள்."

"அதைப் பார்த்துதான் அவர்கள் கற்றுக்கொள் கிறார்கள்."

"அவர்களைப் பார்த்துச் சினிமா கற்றுக்கொள்கிறது."

"கடற்கரையில் நடக்கலாம்"

"அதுக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது என்று நீ சொல்றே. அதுதான் மின்னல் வேக வேலை நிறுத்தம்".

"அந்தக் குக்கிராமத்திலே நடக்குமா? அங்கே அந்த ஊரார் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் களா?"

"அதுதான் செயற்கை என்று சொல்லுகிறேன்" என்று அவள் முடித்தாள்.

"இது இயற்கை என்று ஒப்புக்கொள்கிறாயா?"

"கட்டாயம் நடக்கும். இது நகரம். எல்லாவற்றுக்கும் துணிந்தவர்கள்" என்று அவள் 'மேட்' ஒப்புக்கொண் டாள்.

"அன்று அவர் காப்பாற்ருவிட்டால் நான்"

"என்ன ஆகி இருக்கும். உன் படிப்புப் பாழாகி யிருக்கும்."

"நான் ஒரு உதவாக்கரையாகிவிட்டிருப்பேன்."

"ஏன் நீ வீரம் பேசுவாயே"

"அப்படிப் பேசிப் பழக்கம். ஆனல் செயலிலே முடியுமா? அவர் கிட்டேகூட அப்படித்தான் சொன்னேன். இதோ பார் என்னிடம் கத்தி."

"கத்தி இருப்பே அவ்வளவுதான் முடியும்."

"அதுதான் கத்தி என்றேன். அவரும் நம்பிவிட்டார். நம்ம N. C. C. பயிற்சியிலே இந்த மாதிரிச் சூழ்நிலையை எப்படிச் சமாளிக்க முடியும். சும்மா விட்டுக் கொடுக்கா மல் பேசினேன்."

"அதனல் காதல் ஏற்பட்டு விட்டது."

"ஏற்பட்டு இருக்கலாம். ஆனல் அவர் கதாநாயகன் ஆக முடியாதபடி தடுக்கப்பட்டார். அவர் Father ஆகத் தான் நடிக்க முடியும். அவருககு ஒரு பையனும் இருக்காரு."

"பின் எப்படி அவரிடம்"

"அதுதான் நட்பாக மலர்ந்து விட்டது."

"இதை உலகம் ஒத்துக்காது."

"நீயே ஒப்புக்கொள்ள மாட்டாய். அது தெரியும். ஆனல் காதலுக்கும் நட்புக்கும் ரொம்ப வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

"காதல் உடலைப் பற்றியது. நட்பு உள்ளத்தைப் பற்றியது" என்று அவள் விளக்கம் தந்தாள்.

"அதுதான் நானும் நினைக்கிறேன். அந்த உடல் உறவு சே! அதை நினைத்துப் பார்க்கவே பிடிக்கவில்லை. அது எப்படித்தான் காதல் செய்கிறார்கள்."

"இதெல்லாம் உனக்கும் எனக்கும் விளங்காது. அதற்குக் காலம் வரும்."

இப்படி எல்லாம் என்னைப் பற்றி அவள் கண்ட கனவுக்குப்பின் அவர்கள் பேசி இருக்கிறார்கள். இதை அவள் அந்த கடற்கரைக் காற்றில் என்னிடம் சொல்லி இருக்கிறாள்.

அவள் என்னைப் பற்றிக் கனவு கண்டாள். அதை அவள் மேட்டிடம் சொன்னாள். பொறுமையாகக் கேட்டாள்.

நான் என் மேட்டிடம் நானாகச் சொல்லவில்லை; தூக்கத்தில் நானாக உளறிக் கொட்டிவிட்டேன்.

"மதுவைப் பற்றிய கனவா?"

இது அவள் கேட்ட கேள்வி. இவளை மது ஒழிப்புப் பிரச்சாரத் தலைவியாக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். மறுநாள் மூட்டை முடிச்சோடு புறப்பட்டு விட்டாள்.

"இனி ஒரு க்ஷணம் கூட குடித்தனம் பண்ணமாட்டேன்" என்று சொல்லிவிட்டாள்.

எனக்கு எங்க பெட்ரோல் பங்குத் தொழிலாளிகள் மிரட்டுவார்கள்.

அதாவது வேலை நிறுத்தம் செய்வதாகச் சொல்வார்கள். அவர்களுக்கும் பத்துவின் ஒத்துழையாமைக்கும் எனக்கு வித்தியாசம் தெரியாமல் போய்விட்டது.

"இல்லை நான் சொல்வதைக் கேள்," எந்தக் குடும்பப் பெண்ணும் இதைத் தாங்கிக்கொள்ள மாட்டாள்.

"கனவிலே உளறக்கூடிய அளவு உங்கள் உறவு"

"முற்றவில்லை. அரும்பி இருக்கிறது அது மலராக ஆவதற்கு எவ்வளவோ காலம் பிடிக்கும். பிறகு அது காயாகிக் கனியாவதற்குள்."

"நான் பறித்துவிட்டேன். நீங்கள் நிம்மதியாகக் காதல் செய்யுங்கள். நான் வேண்டாம் என்று சொல்ல வில்லை. நான் என்ன ஒன்றும் ஆம்படையான் வேண்டுமென்று காத்துக் கிடக்கவில்லை" என்று தூக்கி வாரிப் பேசினுள்.

நான் எவ்வளவு அவசியமில்லாத பொருளாகிவிட்டேன் என்று நினைக்கும் பொழுது நான் மிகவும் தாக்கப் பட்டு விட்டேன்.

முரளிக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்னப்பா அம்மாவுக்குப் பயித்தியமா" என்று கேட்டான்.

அவள் நடந்துகொள்வது அவனுல் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. என்னைக் கேட்கும் கேள்வியை அவளைப் பார்த்து அன்று கேட்டுவிட்டான்.

பெரியவர்களின் போக்கை அப்படி விமரிசிப்பது அவனுக்குப் பழக்கமாகி விட்டது.

"ஆமாண்டா எனக்குப் பயித்தியம். சின்னம்மா வரப் போகிருள் அவள்தான் உனக்குச் சோறு போடுவாள்" என்று சொல்லிவிட்டு அவள் புறப்பட ஆரம்பித்தாள்.

"சின்னம்மாவா"

மது அவனுக்குச் சின்னம்மா ஆகப் போகிறாள். எனக்கு ரொம்ப வேதனையாகப் போய்விட்டது. களங்கமில்லாத அந்த நட்புக்கு இவ்வளவு சோதனையா? அவள் என்னோடு பேசியது தவறா? நான் ஏன் பேசக்கூடாது? நான் ஒருத்தியைத்தான் மனைவியாகப் பார்க்கிறேன். அவளை என் சகோதரியாகப் பார்க்கவில்லை. அது உண்மைதான். அப்படி பிற ஸ்திரீகளைப் பார்க்க வேண்டும் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். அவளை மட்டும் என்னால் அப்படிப் பார்க்க முடியவில்லை. அதற்குத்தான் அவள் ஒரு புதிய சொல்லைப் படைத்துத் தந்திருக்கிறாளே.

'நட்பு' என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படவே கூடாதா. ஏன் ஏற்படக் கூடாது. சரி இவர்களைக் கேட்டுக் கொண்டுதான் என் நட்பு வளர வேண்டும்.

'அம்மாவுக்குப் பைத்தியம்' என்ற சொல்லை அவளால் தாங்கிக் கொள்ள முடியாமல் போய்விட்டது. அவனையும் என்னையும் விட்டுவிட்டு அவள் ஆணைக்கு அஞ்சித் தெருவில் வந்து நின்ற டாக்சியில் ஏறி அவள் தன் பிறந்த அகத்துக்குச் சென்று விட்டாள். ஏன் அவள் அவசரப் பட்டாள்? நான் அவளுக்குச் சொந்தம். அதற்கு உரிமை கொண்டாடினாள். நான் அவளுக்குச் சொந்தம்தான். அதனால் என் நினைவுகளில் மதுவுக்கு இடம் இருக்கக் கூடாதா?

மது அவளை என்னால் மறக்க முடியாது. அவளைப் பற்றிய போதை எனக்கு ஏறிவிட்டது. அவளைப் பார்க்காமல் இருக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. அதற்கு யார் பொறுப்பு. மினிதான் பொறுப்பு. அவள் கிழித்த கோட்டை நான் தாண்டியதில்லை. அது அவளுக்குப் பெருமையாக இருந்தது. அதைப் பலரிடம் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறாள்.. அது கெட்டுவிட்டது.

நான் அதிகம் படிக்கவில்லை. அதனால் என்ன? இதைக் கூடவா என்னால்புரிந்து கொள்ள முடியாது. அவள் என்னைக் கண்டிக்கக் கண்டிக்க மதுவை என்னால் விட முடியவில்லை. அவளைப் பார்க்க வேண்டும் என்று துடிப்பு ஏற்பட்டது.

கடற்கரையில் அலைவேன். அவள் உட்கார்ந்த இடமெல்லாம் சுற்றிச் சுற்றி வருவேன்.

அவளுக்கு எப்படி என் வேதனையைச் சொல்லி முடியும். இது ஒரு புதிய அனுபவம். மற்றவர்களிடம் எப்படிச் சொல்ல முடியும். என் சிநேகிதி என்ற இடத்தைத் தான் அவள் எனக்குக் கொடுத்திருந்தாள். நான் மண மானவன் என்பதால் என்னை அவள் அதற்கு ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் என்னை மதித்தாள். என்னோடு பேசுவாள்; சிரிப்பாள்; பொது உணவு விடுதியில் உண் பாள்; தின்பாள்; பருகுவாள்;பொழுது போவது தெரியாமல் பேசுவாள். ஆனால் அது அவள் ஏற்க விரும்பவில்லை.

அவளுக்கு வயது பதினாறு அல்ல; இருபத்தியாறு. எப்படியோ அவளும் அந்த வயதை எட்டிப் பிடித்து விட்டாள். அவள் என்ன? எத்தனையோ பேர் அந்த விடுதியில் அவள் வயதைப் பிடித்துக் கொண்டிருக் கிறார்கள். நல்ல உயரம் மற்றவர்கள் அவள் தோளுக்குத் தான் வருவார்கள். அவள் தூர வரும் போதே நன்றாகத் தெரிவாள். அவள் கலைந்த மயிர்முடி காற்றில் அசையும்; சிரிக்கும் வாயிதழ் சிந்தனையை அவிழ்க்கும்.

''அவளிடம் என் கனவைச் சொன்னேன்''

அவள் அன்றுதான் கவலை காட்டினாள். நிழல் படிந்தது போல் அவள் முகம் சோகத்தைக் காட்டியது.

"இது உண்மையா?" என்றாள்.

"She is very silly" என்று ஆங்கிலத்தில் சொன்னாள்.

"ஓர் ஆடவனுக்குக் கனவு காணக் கூடவா உரிமை இல்லை" என்று கேட்டாள்.

அவளே கொஞ்ச நேரம் பொறுத்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். "Silly" என்று சொல்லி இருக்கக் கூடாது.

"அவர்களை மதிக்கிறேன்" என்றாள்.

எனக்குப் புரியவில்லை.

"அவர்களுக்கு உலகம் சிறியது. குடும்பம்தான் உலகம். அதற்கு மேல் அவர்களால் செல்லமுடியவில்லை. Sorry நான் தவறாகச் சொல்லி விட்டேன்" என்று வருந்தினாள்.

அவளை என் வீட்டுக்கு அழைத்துச் செல்ல விரும்பினேன். ஆசைகள் வேகமாகச் செயல்படுகின்றன என்பதை அன்றுதான் அறிந்தேன். ஆசைகளுக்கு ஆற்றல் மிகுதி என்பதை அறிய முடிந்தது.

அவள் சொன்னாள் "இல்லற தர்மம் என்று இருக்கிறது. அதன்படி நீங்கள் குற்றவாளிதான். அதாவது கட்டிய மனைவியைத் தவிர வேறு ஒருத்தியைக் கனவிலும் கருதக் கூடாது" என்று சொன்னாள்.

அவள் சொல்லுவது, திருக்குறள் தெளிவுரை போல் இருந்தது.

"சமூக தர்மம் என்ற ஒன்று இருக்கிறது அதன்படி நீங்கள் என்னிடம் நட்புக் கொள்ளலாம். அந்தத் தர்மம் இன்னும் இந்த நாட்டில் கால் கொள்ளவில்லை. அதைப் புரிந்து கொள்ளவில்லை. கொள்ளவும் மாட்டார்கள்.

அதற்குத் தடையாக இருப்பது ஆண் பெண் உறவு. அதற்கு இந்த நாட்டில் முக்கியத்துவம் கொடுத்து

விடுகிறார்கள். அது இல்லாமலும் ஒருவனும் ஒருத்தியும் பழக முடியும் என்பதை இந்தச் சமூகம் உணரவில்லை. அதற்குக் காரணம் தெரியுமா? உங்களுக்குத் தெரியாது. நான் சொல்கிறேன்.

இந்த நாட்டுப் பழைய இலக்கியங்கள் "ஒருவன் ஒருத்தி" என்று அறிந்ததே தவிர இந்த இரண்டு பேருக்கு மேல் அவர்கள் சமூக உணர்வு வளரவில்லை. எல்லாமே இந்தக் குடும்பத்தைச் சுற்றித்தான் அமைக்கப்பட்டுள்ளது. சொத்து உரிமை என்பது ஒரு பயங்கரமான பூதம். அது தான் இந்தக் குடும்பங்களைக் காத்து வருகிறது.

உங்களுக்குப் பின்னால் அந்தச் சொத்து முழுவதையும் உங்கள் மனைவி அடைய விரும்புகிறாள். அவளுக்குப் பின்னால் உன் மகனுக்கு என்று நினைக்கிறாள். நீங்கள் வேறு ஒரு பெண்ணை நினைத்தால் நீங்கள் அந்தச் சொத்தில் பணத்தில் பெரும்பங்கு அவளுக்குச் செலவு செய்து விடுவீர்கள் என்று நினைக்கிறாள். இதுதான் உண்மை. நீங்கள் என்னை நினைப்பதால் அவர்களுக்கு ஒன்றும் நஷ்டம் ஏற்பட்டுப் போய்விடாது. நீங்கள் அந்தக் குடும்பத்தின் முழு நேர உழைப்பாளி. இதுதான் உண்மை" என்று கூறி விளக்கினாள்.

"உனக்கு எப்படி இது தெரியும்"? என்று கேட்டேன்

நீங்கள் 'சமுதாயச் சிந்தனை' என்ற நூலைப் படித்திருக்க வேண்டும். அதைப் போன்ற நூல்கள் பெருக வேண்டும். சமுதாயக் கண்ணோட்டத்தோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும். உலகில் எவ்வளவோ அடிமைத்தனம் இருக்கிறது. அவற்றுள் இந்தக் கணவன் மனைவி பந்தம் ரொம்பவும் அடிப்படையானது. அது கொஞ்சம் தளர்ந் தால்தான் சமுதாயச் சிந்தனைகள் வளரும் என்று கூறினாள்.

"இதெல்லாம் உங்கள் படிப்பில் சொல்லித் தருகிறார் களா?"

"நான் அரசியலையும் சமூக இயலையும் பாடம் எடுத்துப் படிக்கிறேன். அதனால் இப்படிச் சிந்திக்கிறேன்" என்று கூறினாள்.

நான் படிக்காததே மேல் என்று தெரிந்தது. இந்த மாதிரி மேல் படிப்புப் படித்து இருந்தால் சாதாரண விஷயங்களை எல்லாம் இப்படித்தான் பார்ப்பேன். அப்புறம் எதையும் லேசாக எடுத்துக்கொள்ள முடியாது என்று பட்டது.

"அதாவது அவள் ஒத்துழையாமை நடத்துகிறாள் என்பது அர்த்தம். அவள் தாய் வீட்டுக்குச் சென்று விட்டால் நீங்கள் தனியாக விடப்படுவீர். உங்களுக்கு அவள் தேவை. அது இயற்கை, அந்தத் தேவையை மறுத்துவிட்டால் நீங்கள் அவளுக்கு முழு அடிமையாகி விடுவீர்கள். இது ஒரு முதலாளித்துவத் தனம்" என்று கூறினாள்.

எனக்கு இந்த வாதம் எல்லாம் புரிந்து கொள்ள முடியவில்லை.

"அதே போலத்தான் ஆண்களும் நடந்து கொள்கிறார்கள். பெண் அவள் தனக்கு அடிமையாக இருக்க வேண்டும். ஒரு பெண் நல்ல பெயர் வாங்க வேண்டுமானால் 'கணவன் சொற்படி நடப்பவள்' என்ற பெயர் எடுக்க வேண்டும்.

நீங்கள் நினைத்துப் பாருங்கள். இதிலே ஒரு முதலாளித்துவம் இல்லை என்று கூற முடியுமா? அடிமைதான் சொன்ன சொல் பேச்சுக் கேட்டு நடப்பான். அதே போல மனைவி தனக்கு முழு அடிமையாக நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் பலர் இருக்கின்றார்கள். இதெல்லாம் மனிதக் கட்டுப்பாடுகள் என்று கூறி விளக்கினாள்.

நீங்கள் உங்களை மாற்றிக் கொள்ள வேண்டியது தான். நீங்கள் ஒரு குடும்பத் தலைவர். அதாவது நீங்கள் சமுதாய மனிதர் அல்ல. குடும்பத் தலைவர்.''

அழகான சொற்கள். அவள் என்னைச் சிரித்து விளையாடுவது போல இருந்தது.

இப்பொழுது நான் அவளோடு அதிக நேரம் பேச முடியவில்லை. 'முரளி' எனக்காகக் காத்துக் கிடந்தான். மனைவி வீட்டில் இருந்தபோது இருந்த உரிமையும் இப்பொழுது இல்லை என்பதை உணர்ந்தேன்.

## 3

அவள் உலக சரித்திரம் படித்தவள்; நான் வீட்டுச் சரித்திரத்தையே படிக்கவில்லை. நான் படித்த சரித்திரம் என்ன? சொத்துக்கு ஒரு பிள்ளை. சுகத்துக்கு ஒரு பெண். இப்படிக் கேட்ட தலைமுறையிலே வந்தவன்.

அவள் சொல்கிறாள். "சந்தோஷத்தைப் பிறர்க்குப் பங்கிட்டுத் தரவேண்டும். துக்கத்தை நாமே தாங்கிக் கொள்ள வேண்டும்" என்று சொல்கிறாள். என் துன்பத்தை நான்தானே தாங்கிக்கொள்ள வேண்டும்.

புயல் வீசியது; நாட்டிலே எவ்வளவு பெரிய கஷ்டம். தண்ணீர் போய் ஊரையும் ஏழைகளையும் அழிக்கிறது என்றால் ரொம்ப அதிசயமாகத்தான் இருக்கிறது. நான் எதிர்பார்க்கவில்லை. அவள் ஊருக்குப் போனபோது இந்த விபத்து ஏற்பட்டது. அவளுக்கு ஒன்றும் இல்லை. சுகமாகத் தான் போய்ச் சேர்ந்திருக்கிறாள். இல்லாவிட்டால் தந்தி வந்திருக்குமே.

முன்னெல்லாம் தந்தி என்றால் யாராவது செத்துவிட்டால் தான் அடிப்பார்கள். இப்பொழுது கலியாணத்துக்கும் அடிக்கிறார்கள். ஏன் முன் கூட்டியே தபாலில் போடக்கூடாதா அது அவ்வளவு நல்லது அல்ல என்று நினைக்கிறார்கள். அதாவது அதிக செலவு செய்து தந்தி அடித்தால்தான் மதிப்பு; அதாவது யாரோ ஒரு பணக்காரன் முதன் முதலில் இந்தப் பழக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறான். அவன் மறந்துவிட்டிருக்கிறான். திடீர் என்று நினைவு வந்திருக்கும் தந்தி அடித்திருப்பான். பணக்காரன் எந்தத் தவறைச் செய்தாலும் அதைப் பின்பற்றுவதுதானே இந்த நாட்டுப் பழக்கம். பணக்காரன் நிறைய செலவு செய்து கலியாணம் செய்தால் கலியாணம் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று மற்றவர்களும் நினைக்கிறார்கள். அப்புறம் ஒரே 'காப்பி'. இது சம்பிரதாயம் என்று மாறிவிடுகிறது. இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும். சும்மா யோசனை பண்ணிப் பார்க்கிறேன்.

இந்த 'பத்து' 'போய்ச் சேர்ந்தேன்' என்று ஒரு தந்தி அடித்திருக்கக் கூடாதா! அப்புறம் அவள் என்னை மதித்து விட்டதாக ஆகிவிடும்.

"நான் எக்கேடு கெட்டாலும் உங்களுக்கு என்ன?"

இப்படிச் சொல்லி இருக்கிறாள்.

அதைப் போல நான் திருப்பிக் கேட்டால் அவள் முகத்தை எங்கே வைத்துக் கொள்வாள்.

இந்தக் கலியாணப் பந்தலிலே ஐயர் சொல்லிக் கொடுக்கிறார். "அக்கினி சாட்சியாக முப்பத்து முக்கோடி தேவர்கள் சாட்சியாக" இவ்வளவு பேரும் நமக்கு சாட்சி நிற்கிறார்கள். "எந்தக் காலத்திலும் மனைவியைக் கைவிடுவது இல்லை" என்று அந்த ஐயர் சத்தியம் வாங்கிக் கொள்கிறார். அவளிடம் இந்தச் சத்தியம் வாங்குவது இல்லை. அருந்ததியைக் காட்டுகிறார். அம்மி மிதிக்கிறார். என்

னென்னமோ சுற்றிச் சுற்றி 'ரவுண்டு' அடித்துத் திருப்பு கிருர். 'புருஷன் கூட சண்டை போட்டுக் கொண்டு தாய் வீட்டுக்குப் போகாதே' என்ற ஒரு புத்திமதி சொல்லக் கூடாதா.

அவள் போகட்டும் நல்லத்தனமாகப் போகட்டுமே வரட்டுமே. நாஞ வேண்டாம் என்று சொன்னேன். போகும் போது அவள் சாபம் கொடுத்து விட்டுப் போகிருள்.

" அவளேயே கொண்டு வந்து வச்சிக்கோ குடித்தனம் பண்ணிக்கோ நாஞ வேண்டாம் என்று சொன்னேன்."

எவ்வளவு தாராளமான மனம். பெண்ணே வச்சிக் கிறதுக்கும் குடித்தனம் பண்றதுக்கும்தாஞ பயன்படுத் தணும்." வேறு எதற்கும் பெண் பயன்பட மாட்டாளா. மது அது மயக்கம் தரும். இல்லே என்று சொல்லவில்லே. நான் அருந்திஞல்தானே குற்றம். பார்த்தாலேயா குற்றம்; பழகிலேன் விடமுடியவில்லே. பழக்கம் யாரையும் விடாது என்பது உண்மைதான்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது, இருக்கிறது. 'பத்து' இருக்கும் பொழுதுதான் என் மனம் மதுவின்மீது நாடியது. அவளேப் பார்க்க அங்கே அதுதான் கடற்கரை. இந்தக் கடற்கரையை ஏன் காதலர்கள் தேடுகிருர்கள். பரந்த மணல், உயர்ந்த வானம், சுற்று முற்றும் மனிதர்கள் ஆஞல் அவர்கள் யாரோ தெரியாது; விழிகள் நம்மைப் பார்க்கின்றன; ஆஞல் அந்த விழிகளில் எங்கள் உருவம் படிவது இல்லே 'இரண்டு பேர்' என்றுதான் பேசுவார்கள்.

அந்தப் படகு அந்த இடத்தை விட்டு அசைவதே இல்லே.ஏன். அது தெரியவில்லே. நாங்கள் அங்கே சாய்ந்து கொண்டு பேசுவதற்குப் பயன்படுகின்றது.

நாங்கள் என்ன பேசுவோம். அவள் சொன்னாள் "நாம் முதலில் நம்மை மதித்துக் கொள்ள வேண்டும்; அப் பொழுதுதான் மற்றவர்கள் நம்மை மதிப்பார்கள்" என்று சொல்லுவாள். இதுதான் சுயமரியாதை என்று கூறுகிறாள்.

இந்த மாதிரி எண்ண யார் இவளுக்குக் கற்றுக் கொடுத் திருப்பார்களோ தெரியவில்லை. அவள் அப்படி எண்ணு கிறாள். என்னை நான் மதித்துக்கொண்டு இருக்கிறேன். அவள் என்னை மதிக்கவில்லை. இப்பொழுது என் சுய மரியாதையை விட்டு எப்படிச் சென்று அழைத்து வர முடியும். அவள் நிச்சயமாக வரமாட்டாள்..

மதுவை மறக்க முடியுமா என்று கேட்பாள். நான் எப்படிச் சொல்ல முடியும் மறக்க முடியும் என்று.

என் வீடு வெறிச்சென்று இருந்தது. முரளி ஒரு கண் இழந்தது போல் இருந்தான். 'அன்பு' என்பது அவன் அம்மாவிடம்தான் முழுமையாகக் கண்டிருக்கிறான். நான் எப்படியும் மகிழ்விக்க முடியவில்லை.

"அப்பா! யாரோ சின்னம்மா வருவார்கள் என்று அம்மா சொல்லிவிட்டுப் போனார்களே அவர்கள்" எப் பொழுது வருவார்கள்" என்று அவன் என்னைவிட ஆவ லாகக் கேட்டான்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் அம்மாவைக் கேட்பதை விடச் சின்னம்மாவையே கேட்க ஆரம்பித் தான்.

அவள் என்னிடம் முன் கொடுத்த போட்டோவை அவனிடம் காண்பித்தேன்.

"கலியாணமே ஆகலியா?" என்று கேட்டான்.

"எப்படிடா கேக்கறே"

"இல்லே தனியா போட்டோவிலே இருக்காங்களே அதுதான் கேட்டேன்?"

அப்பொழுதுதான் தெரிந்தது. கலியாணம் ஆனவுடன் முதல் நிகழ்ச்சி போட்டோ. அதிலே இரண்டு பேரு சேர்த்துப் பிடிக்கிறது ஏன் என்று இப்பொழுதுதான் தெரிந்தது. என் வீட்டிலும் அவளும் நானும் சேர்ந்து பிடித்துக் கொண்ட போட்டோ சுவரில் மாட்டி இருந்தேன்.

அதை வைத்துக் கொண்டுதான் அவன் கேட்டான்.

"ஏன்பா அம்மா என்று சொல்றியே அவளுக்கு யாருப்பா அப்பா" என்று கேட்டான்.

"அப்பாவா?"

"அதான்பா அவளுக்கு உங்களைப் போல ஒரு அப்பா இருக்க வேண்டாமா? அதுதான் கேட்டேன்.

"அவளுக்கு இன்னும் கலியாணமே ஆகலியே?"

"அப்படீன்னு அவங்களுக்குச் சண்டையே போடத் தெரியாது, ரொம்பவும் சாதுவாகத்தான் இருப்பார்கள்."

"ஏன்பா அம்மா வரலே?" என்று கேட்டான்.

"எனக்கே தெரியவில்லே."

"அதெல்லாம் முடியாது. அம்மா வரணும் அப்பத் தான் சாப்பிடுவேன்" என்று அடம்பிடித்தான்.

எதிர்பாராத விதமாக மதுவே வந்துவிட்டாள்.

கையில் குழந்தைக்கு ஒரு பிஸ்கத்துப் பொட்டலமும் சாக்கலேட்டு டின்னும் கொண்டு வந்தாள்.

"மது"

"இல்லே குழந்தைக்குப் பிஸ்கத்து சாக்கலேட்டு அது தான் வாங்க முடிந்தது."

"இது என்ன கெட்ட பழக்கம்?"

"குழந்தைகள் இருக்கிற இடத்துக்கு ஏதாவது தின்ன எடுத்துப் போக வேண்டும்" என்று தத்துவம் பேசினுள்.

அதை எடுத்து வாயில் போட்டுக் கொள்ளலாம் என்று பார்த்தேன். அவள் அவ்வாறு சொன்னதும் வாய் மூடிக் கொண்டேன்.

"இவள்தான் சின்னம்மா" என்றேன்.

"பெரியம்மா" என்ருன். அதாவது அவள் உயரமாக இருக்கிருள் என்பது அவன் கருத்து.

அவள் முன்னுல் சொல்லி இருக்கிருள். "நான் உயர மாக இருக்கிறேன். அதைக் கண்டு பலர் பொருமைப் பட்டு இருக்கிருர்கள்."

"எப்படி?"

"பக்கத்திலே நிற்பார்கள்"

"நின்ருல்"

"உடனே தன் செருப்பை மாற்றிக்கொள்வார்கள். உயரச் செருப்பு வாங்கி மாட்டிக்கொள்வார்கள்" என்றாள்.

அந்த வீட்டில் அவள் உயரமாக இருந்தாள். அவள்

என்னை விடக் கொஞ்சம் உயரம் கம்மிதான்.

"ஏன் இங்கே வந்தாய்?"

"ஹாஸ்டலில் அனுமதி பெற்றே வந்தேன்" என்றாள்.

"அதைக் கேட்கவில்லை. நான் இங்கே தனியா"

"இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் வந்தேன். உங்க முரளிக்கு ஒரு அம்மா தேவைப்படும் என்பதை உணர்ந்துதான் வந்தேன்."

"இப்படியும் ஒரு பெண்"

"எப்படியும் ஒரு பெண் உங்களுக்குத் தேவை."

"அப்படிச் சொல்ல முடியாது. அவன் அம்மாதான் வேண்டும்" என்கிறேன்.

"உங்களைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது" என்றாள்.

என் மனைவி இதுவரை எப்பொழுதும் இப்படிப் பேசியதே இல்லை. நான்தான் இப்படிப் பலமுறை சொல்லி இருக்கிறேன். அவளைப் பிரிந்து என்னால் வாழ முடிவதில்லை. ரொம்பவும் பிரிந்திருந்தால் ஒரு மாதம்தான் பிரிந்திருப்பேன். அவள் இல்லாவிட்டால் அந்த வீடு ஒவ்வொரு அறையும் நன்றாகத் தெரியும். வெறும் வீடுதான் தெரியும்.

அவளிடம் பலமுறை சொல்லி இருக்கிறேன். "என் உயிர் நீ! உனக்காக என் உயிரையும் விடுவேன்,"

இப்படி எல்லாம் பேசி இருக்கிறேன். அவளும் சிரித்துக் கொண்டே என்னைப் பார்ப்பாள்.

கண்ணகியும் அப்படித்தான் இருந்தாள் என்று பேசக் கேட்டு இருக்கிறேன். கண்ணகி என்ன சொன்னாலும் அவள் கேட்டு ரசிப்பாளே தவிர பேச மாட்டாள்.

"ஏன் வந்தாய்?" என்ற கேள்வி என் நெஞ்சு வரை வந்தது. அதற்குப் பிறகு அந்தப் பேச்சு வெளிவரவில்லை. எச்சில் முழுங்கிக் கொண்டேன்.

"உனக்குத் தேர்வு இல்லையா?" என்று வேறு விதமாகக் கேட்டேன்.

அவள் தன் கையில் 'வெறுந்தாள்' என்ற நாவல் வைத்திருந்தாள்.

இது என்ன என்று கேட்டேன்.

"வெறுந்தாள்" என்றாள்.

"வாழ்க்கை சுதாவுக்கு வெறுந்தாளைத்தான் காட்டிற்று" என்ற பகுதியைப் படித்தேன்.

வாழ்க்கை வெறுந்தாளைக் காட்டுமா என்று கேட்டேன்.

"வாழ்க்கை சில சமயம் வெறுந்தாளையும் காட்டும். அதில் அழகிய சித்திரம் வரைவது அறிவாளியின் கடமை" என்று அந்தப் புத்தகத்தின் முகப்பில் அவள் எழுதி வைத்திருந்தாள்.

அந்தக் கதையாசிரியர் எழுதாத கருத்து அவள் தன் முதல்தாளில் எழுதி வைத்திருந்தாள்.

அதற்குள் முரளி குறுக்கிட்டான். அம்மாதான் இல்லையே. அம்மாவா இருக்கட்டுமே அப்பா என்றான்.

இந்தச் சிறுவன் எவ்வளவு எளிதாகச் சொல்லி விட்டான்.

நான் பலமுறை என் மனைவிக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன் வந்து விடும்படி. "முரளி உன் நினைவால் ஏங்குகிறான்" என்று எழுதி இருக்கிறேன்.

அவள், மில் முதலாளிகள் சிலர் கதவு அடைப்பு நடத்துவது போல முரட்டுப் பிடிவாதமாகவே நடந்து வந்தாள்.

அவளிடம் நான் சொல்லுவது உண்மைதான். "பத்து உன்னைத் தவிர வேறு யாரையும் என் உள்ளத்தால் நினைப்பது இல்லை" என்று சொல்லி இருந்தேன்.

"ஆமாம் நீ இப்படி நாவல் படித்துக்கொண்டிருந்தால் உன் படிப்பு?"

"நாவல் நான் படிப்பது இல்லை. இதன் அட்டை என் சிந்தனையைக் கிளறியது. இந்த ஆசிரியர் எழுதும் நாவல் களைவிட அவற்றின் மேல் அட்டைப் படங்கள்தான் பிடித்திருக்கின்றன" என்றாள்.

"பெண்களுக்கு எப்பொழுதும் 'ஜாக்கெட்'தான் பிடிக்கும் என்று சொன்னேன். அது அழகாக இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள்" என்றேன்.

இல்லை பாடிக்கும் ஜாக்கெட்டுக்கும் மாட்ச் ஆக வேண்டும் என்று சொன்னாள். அதாவது புத்தகக் கருத்துக்கும் வெளிமுகப்புக்கும் பொருத்தம் இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டாள்.

"உனக்கு நாவல்கூடப் பிடிக்குமா?" என்று கேட்டேன்.

"ஏன் உனக்கு?"

"பிடிக்காது"

"ஏன்?"

"நாவலில் உண்மை எழுதமாட்டார்கள்."

"எழுதக் கூடாது," அதுதான் நாவலுக்கே இலக்கணம் என்றாள்.

திடீர் என்று ஏன் நாவலைப் பற்றிப் பேசினேன் என்று தெரியவில்லை. அவள் கையில் அந்த நாவல் வைத்திருந்தாள்.

அவள் சமுதாயச் சிந்தனைகளையே இந்த நாவல் படித்துத்தான் பெற்றாள்; பெற்றிருப்பாள் என்பது அதைப் படித்த பிறகுதான் தெரிந்து கொண்டேன்.

அதில் சரசுவதி என்ற பாத்திரம் இடம் பெறுகிறாள். ஏறக்குறைய அவளைப் போலத்தான் இவள் இருக்கிறாள் என்று நினைக்கத் தோன்றியது. அந்த நாவலைப் படித்துப் பார்த்த பிறகு

அவளையே பின்னால் ஒரு முறை இப்படிக் கேட்டேன்.

"அந்த நாவலின் பாதிப்பு உனக்கு ஏற்பட்டு இருக்கிறதா என்று."

"அதில் எனக்குப் பிடித்த பாத்திரம் 'விடிவெள்ளி'' என்றாள்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. போயும் போயும் ஒரு குழந்தையை அதாவது பெயர் மட்டும் வைக்கப் பட்டிருந்தது என்றால் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவள்தான் அந்த நாவலில் அதி அற்புதமான படைப்பு. என்றாள்.

நான் என்ன அவளைப் போலவா படித்திருக்கிறேன் விமரிசனம் செய்ய. சொல்வதைக் கேட்டு கொள்வேன். அவ்வளவுதான்.

''ஆமாம், நீ இங்கே வந்தால்''

''யாராவது ஏதாவது நினைத்துக்கொள்வார்கள்'' அது தானே நீங்கள் தொடரப்போகும் பேச்சு.

அந்த விடிவெள்ளி அப்படி நினைக்க மாட்டாள். இந்த மதுவும் அப்படி நினைக்க மாட்டாள். இதுவரை மனிதர்கள் சமுதாயத்துக்காகவே வாழ்ந்துவிட்டார்கள். அதாவது அதன் நினைப்பை ஒட்டி வாழ்ந்து விட்டார்கள். நான் எனக்காக வாழ்ந்தது குறைவு; சமுதாயத்துக்குத் தான் வாழ்கிறேன். ஆனால் அதற்கு அஞ்சி அல்ல; அதை அஞ்ச வைக்கவே வாழ்கிறேன்'' என்றாள்.

''என்ன எனக்கு ஒன்றும் புரியவில்லையே'' என்றேன்.

''உன் மனைவி அதுதான் உன் முதலாளி லாக் அவுட் செய்துவிட்டுக் கடையை மூடிவிட்டுச் சென்றாள். அதாவது என்னை நினைத்ததே தவறு என்றுசொன்னாள் என்றீர்கள். எதைக் கண்டு அவள் அஞ்சினாளோ அந்த அச்சமே இங்கே நானாக வந்திருக்கிறேன். இதுவரை உங்களை நண்பராகக் கொண்டிருந்தேன்.''

''இனி''

"பகைவராகக் கொள்ளப் போகிறேன்."

"அப்படியென்றால்"

"உங்களை விரும்பி உங்களோடு வாழத் துணிந்து விட்டேன்."

"இது பகையா?"

"ஆம் உங்கள் மனைவிக்குப் பகையாக மாறப் போகிறேன். அப்பொழுது நான் உங்களுக்குப் பகை தானே."

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆசைகள் அலை மோதிக் கொண்டு வந்தன. அவள் அழகு என் கண்முன் நின்று என்னை அழைத்தது. அந்த வீடு அழகாகக் காட்சி அளித்தது. அவள் வயது இருபத்தியாறு; நான் பதினாறு ஆய்விட்டேன். அதாவது இளமை எனக்கு எப்படித் திடீர் என்று வந்ததோ தெரியவில்லை.

யார் ஒருவர் காதல் உணர்வுகளை வளர்க்கிறார்களோ அவர்கள் என்றும் இளமையாக இருப்பார்கள் என்பதை அப்பொழுது உணர்ந்தேன். முப்பத்தாறும் இளமைதான்; ஆனால் அதில் இளமை நினைவுகள் எழுவது இல்லை; பொறுப்பு என்ற சுமை கற்பனைகளை அழித்துவிடுகின்றன. பொறுப்பற்ற இளமைக்குச் சென்றேன்.

"அந்தச் சப்பாணியைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டேன்.

"அவன்தான் சிறைக்குச் சென்று விட்டானே. அவள் தான் அவனைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறாளே" என்றாள்.

"எனக்கு அது அழகிய உருவகமாக இருக்கிறது" என்றேன்.

"எப்படி"

"எவன் ஒருவன் தன் உழைப்பை நம்பி வாழாமல் பிறரை எதிர்பார்த்து வாழ்கிறேனே அவன்தான் சப்பாணி" என்றேன்.

"யாரைக் குறிப்பிடுகிறாய்?" என்று கேட்டாள்.

"என்னைப் பற்றித்தான்"

'நீங்கள் முதலாளியாயிற்றே"

"அதுதான் சொல்கிறேன். நான் என் உழைப்பை நம்பி வாழவில்லை. பிறர் உழைப்பை நம்பி வாழ்கிறேன். அதனால் நான் ஒரு சப்பாணி" என்றேன்.

அவள் சிரித்தாள்.

"பதினாறு வயதில் அவள் சிரிக்கிறாள். அதைப் போல நீ சிரிக்கிறாய்" என்றேன்.

சிரிப்பு எல்லார்க்கும் சொந்தம் அவளுக்குத்தான் சொந்தம் என்று கூற முடியாது என்றாள்.

நேரே அவள் முரளியிடம் சென்றாள். அவனை எடுத்து அணைத்து முத்தம் இட்டாள். அது எனக்கு வியப்பாக இருந்தது.

என்னைக் காதலிப்பதாகச் சொல்லி முரளிக்கு அவள் முத்தம் கொடுத்தது எனக்குப் புதுமையாக இருந்தது.

"இவங்கதான் சின்னம்மாவா" என்று கேட்டான்.

"இவள் பின்னம்மா அதாவது அம்மாவுக்குப் பின் வந்த அம்மா" என்றேன்.

"அழகாக இருக்கிருர்களே"

அவன் அவளுக்குத் தந்த நற்சான்று இது.

"மது! நீ அழகாக இருக்கிருய்"

"உங்கள் பாராட்டு"

"இல்லை நான் சொல்லவில்லை"

"அவன் சொல்லட்டும். அவனுக்கு என்னைப் பிடித்து இருக்கிறது என்று அர்த்தம்"

"நான்"

"உங்களிடம் அதை எதிர்பார்க்கவில்லை"

"அவள் எதைக் குறிப்பிட்டாள் என்பதை என்ருல் புரிந்து கொள்ள முடியவில்லை."

அவள் அவனுக்குச் சோறு போட்டாள். எனக்கும் அவளே போட்டாள். வேலைக்காரி சமைத்து வைத்து விட்டுச் சென்ருள் என்ருலும் யாராவது போட்டுப் பழகி விட்ட பிறகு எனக்கு அவள் தேவைப்பட்டாள்.

ஆமாம். எனக்கு எவ்வளவு துணிவு. அவள் நினைவே கூடாது என்று என் இல்லாள்! அவள் இப்பொழுது இல்லை. அதனுல் அவளை இல்லாள் என்று குறிப்பிட்டேன். அப்படி இருக்க மதுவே வீட்டில் வந்து புகுந்துவிட்டது. நான் எப்படி அவளைப்'போ' என்று சொல்வது. சொல்வது நாகரீகமாகப் படவில்லை.

'நான் போகிறேன். இன்று "பங்க்கில் படுத்துக்கொள் கிறேன்" என்றேன்.

'ஏன்'

"முரளிக்கு நீ தேவைப்படுவதால்" என்றேன்.

அவள் சொன்னாள்

"இது அறிவுடைமை அல்ல. மறுபடியும் நீ யாருக்கோ அஞ்சுகிறாய்"

"என் மனச்சான்றுக்கு"

"எதற்கு"

"இங்கே இருப்பதற்கு"

"உன் வீட்டில் நீ இருப்பதற்கு"

"இல்லை

இருக்கிறது. நான் இங்கே இருந்தால்"

உன்னை விரும்புகிறேன்" என்றாள். "உன் குடும்பத்தை விரும்புகிறேன். உன் மனைவியை விரும்புகிறேன் என்பது அர்த்தம். உன் முரளியை விரும்புகிறேன்"

என்று கூறினாள்.

அவள் என் மதிப்பில் மேலும் ஒரு படி உயர்ந்து விட்டாள்.

அவள் அன்று இரவு ஒரு வார்த்தை சொன்னாள். அது இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

"கற்பு அழியுமே என்று நான் அஞ்சவில்லை. அது உன்னால் அழிக்கப் படுமானால் அதனை வரவேற்கிறேன்; அந்தத் துச்சாதனின் துகிலில் என் கற்பு எப்பொழுதோ அழிந்து போய் இருக்கும். அந்த வன்முறையாளர்களிடம் என்கற்பும் அழிந்து இருக்கும்; நானும் அழிந்துஇருப்பேன். அந்த விபத்தில் இருந்து காப்பாற்றிய நீ அதை அழிக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆக்க நினைவு உடையவர்களுக்கு அழிக்கத் தெரியாது" என்றாள்.

அதை இன்னும் நினைத்துப் பார்க்கிறேன். அவள் நெஞ்சு உரம் என்னை மெய் சிலிர்க்க வைக்கிறது.

அம்மா என்று தூக்கத்தில் அலறினான் முரளி.

"என்னடா கண்ணு"

"நீ சின்ன அம்மா" என்றான்.

அப்பொழுதுதான் அந்த இடத்தை அவளால் நிரப்ப முடியாது என்பதை உணர்ந்தாள்.

"இல்லேடா நானும் அம்மாதான்" என்றாள்.

"அவன் சின்ன வயதில் பால் குடித்து இருக்கிறான். அவன் மெல்லிய கைகள்

அதற்கு இடம் கொடுக்கவில்லை.

மறுநாள் காலையில் அவள்தன் தோல்வியை ஒப்புக் கொண்டாள்.

"பத்மினியின் இடத்தை யாரும் நிரப்ப முடியாது" என்று அவள் குறிப்பிட்டது யாரை என்று என்னால் முழுவதும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

அவர்கள் எங்கேயோ அமெரிக்காவுக்குப் போய் விட்டார்கள் என்று கேள்விப்பட்டேன்.

நடித்து மாபெரும் புகழ் பெற்ற நடிகையர் பலர் இருக்கிற இடமே தெரியவில்லை, தெரிவதில்லை. அவள் அக்கா லலிதா என்ன ஆனுள்? அது போகட்டும் நகைச்சித்திரம் கே.ஆர்.வி. மட்டும் இன்னும் நடித்துக் கொண்டுதான் இருக்கிருள். உடம்பு மட்டும் பருத்து விட்டது. தாயாக நடிக்க வேண்டியவர்கள் இப்படி அந்த பெட்ரோல் பங்கில் பேசிக்கொள்வார்கள். சாவித்திரிக்கு இப்பொழுது வாய்ப்பே கிடைக்கவில்லை என்று பேசிக் கொள்கிருர்கள், பொதுவாகப் பெண்கள் நடிகை வானில் மின்னல் கீற்றுகளாகத் தோன்றி மறைகிருர்கள். புது முகங்கள் இடம் பிடிக்கின்றனர். ஆண்கள் கொஞ்சம் நீடிக்கிருர்கள். அவர்களுள் நம் புதுமுகங்கள் இப்பொழுதும் தோன்றி நிலை பெறுகிருர்கள். கமலஹாசன் சப்பாணியாக நடிப்பது ரொம்ப பிரமாதம்; ரஜினிகாந்த் நல்ல வில்லன். பலபேர் அவன் நடிப்பில் பைத்தியமாகி இருக்கிருர்கள். எங்க பெட்ரோல் பங்க்கில் இந்தக் குமாஸ்தாக்கள் அதிகம் படம் பார்க்கமாட்டார்கள். பெட்ரோல் பிடிக்கிருர்களே அவர்கள்தான் பார்க்கிருர்கள். 'ரஜினி' ஒவ்வொரு படத்திலும் ஒரு புது ரோல் இதுதான் அவர் தனித்தன்மை. மற்றைய நடிகர்கள் ஒரே மாதிரியான வார்ப்படங்கள். கமலுவுக்குப் புதுவகைக் கோலங்கள் அவ்வப்பொழுது கிடைக்கின்றன. இந்த வகையில் இருவருக்கும் ஒற்றுமை இருக்கிறது என்று நினைக்கிறேன்

அவள் சொன்னுள் உங்களுக்கு ஆறுதலாக இருக்க வந்தேனே தவிர மாறுதலாக இருக்க விரும்பவில்லை என்றுள். அவள் எடுத்துக் கொண்ட விடுமுறை நாட்கள் மூன்றும் சென்று விட்டன.

"நான் விடுதிக்குச் செல்கிறேன்"

"சரி அதுதான் நீ இருக்க வேண்டிய இடம்'

"ஏன் நான் ஒரு வீடு அமைத்துக் கொள்ள முடியாது என்று நினைக்கிறீர்கள்?"

"நீ தான் இந்தக் குடும்ப நியதிக்குக் கட்டுப்பட மாட்டாயே".

"அப்படித்தான் வெறுந்தாள் சரசுவதி நினைத்தாள். அப்புறம் அவள் முழுக்குடும்பப் பெண்ணாக மாறிவிட வில்லையா?

" அப்படியானால் நீ"

"எனக்குத் தெரியாது" என்று பதில் சொல்லித் தப்பித்துக் கொண்டாள்.

இந்த ஒரு வினாவுக்குத்தான் அவள் பதில் சொல்ல வில்லை. மற்றைய எல்லா வினாக்களுக்கும் அவள் பதில் சொல்லி இருக்கிறாள்.

"குடும்பம் என்பது வருகிற ஆளைப் பொறுத்து இருக்கிறது. இன்று இளைஞர்களுக்குக் குடும்பம் நடத்துவது என்பதே தெரிவதில்லை" என்று சொன்னாள்.

"நான்?"

"உங்களைப் பற்றிச் சொல்லவில்லை. நீங்கள் எங்கே குடும்பம் நடத்துகிறீர்கள். அவர்கள் தானே நடத்து கிறார்கள்."

நான் ஒரு சப்பாணி என்பதை அவள் குத்திக் காட்டினாள்.

"நீ எனக்கு நண்பாக இருக்க முடியும். துணைவியாக இருக்க முடியாது"

"துணைவியாக இருக்க முடியும் மனைவியாக இருக்க முடியாது" என்று திருத்தினாள்.

எனக்கே ஆச்சரியமாக இருந்தது. நம் சினிமா நடிகைகள் பழைய நடிகைகள் இருக்கின்ற இடம் தெரியாமல் மறைந்து விட்டார்கள். ஈ.வி. சரோஜா நடிக்காத தமிழ்ப்படமே இல்லை. அவர்கள் இன்று எங்கே என்ன என்று கேள்விகளுக்குப் பதில் கிடைப்பது இல்லை. சில சமயம் கஷ்டப்பட்டு அவர்கள் பெயரை நினைவுக்குக்

கொண்டு வர வேண்டியிருக்கிறது. நான் அவள் பெயரை மறந்து விட்டேன். மதுதான் நினைவுப் படுத்தினுள்.

"ஒரு நடிகை மணமானவுடன் ரசிகர்களின் ரசனை மாறி விடுகிறது" என்று நான் கூறினேன்.

"இல்லை. பத்திரிகைகள் அந்த மாற்றத்துக்கு அதிக விளம்பரம் தருகின்றன. அவர்கள் சினிமாப் பார்வையில் கற்பு கெட்டு விடுகிருர்கள். அதாவது அவள் குடும்பப் பெண்ணுக மாறிவிடுகிருள். அது இந்தக் கோவலர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவள் குடும்பப் பெண் என்ற முத்திரை குத்தப்படுகிருள். அதற்குப் பிறகு அவளால் நடிக்கவும் முடிவதில்லை. தன் கணவனுக்குப் படிய விரும்புகிருள். அவன் போக்குக்கு ஏற்ப மாறி விடுகிருள். பிறகு நடிப்பு நடிப்பாக நின்று விடுகிறது. அதில் உயிரோட்டம் இருப்பது இல்லை" என்று கூறினுள்.

"நல்லதுதானே அவர்களே இடம் பிடித்துக் கொண்டால் நாம் புதிய நடிகைகளை எப்படிக் காண முடியும். இப்பொழுது நடிகை என்பதற்கே இலக்கணம் மாறிவிட்டது; மாறிவிடுகிறது. இயல்பாகக் குடும்பப் பெண்களைச் சித்திரிக்கும் முகம் சுஜாதாவிடம் இருப்பதாகப் பேசிக் கொள்கிருர்கள். நடிகை 'கவர்ச்சி'யாக இருக்க வேண்டும் என்ற நிலைமை மாறிவிட்டது. இயல்பான முக பாவங்கள் நடிப்புக்கு உயர்வு தருகின்றன என்று நினைக்க வேண்டி இருக்கிறது. அவள் ஏன் 'பதினறு வயதில்' நடிக்க வில்லை. அவள் 'Over age'.

ஆமாம் பதினறு வயது இப்பொழுது காதலிக்கும் பருவமா காலம் மாறி விட்டது. இருபதில்தான் காதலே ஆரம்ப மாகிறது. இருபத்தியாறில் தான் அது அரும்புகிறது. முப்பதில் தான் மலர்ச்சி பெறுகிறது. என்னமோ இப்படி எண்ணத் தோன்றுகிறது. பொருளாதாரப் பிரச்சனைகள் அவ்வளவு எழுகின்றன.

அவள் ஏன் புயல் நிவாரணப் பணியில் பங்கு கொள்ளவில்லை என்பது பிறகு தான் தெரிந்தது. இந்த நாட்டில் வேலை இல்லாதவர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் தொழில் கொடுத்து இப்பணிகளில் புகுத்தலாம். மாணவர்களை இழுப்பது நல்லது அல்ல; அவர்கள் படிக்க வேண்டியவர்கள் என்று சொல்கிறாள்.

வெள்ளங்கள் அரசாங்கம் நல்ல உறுதியான கட்டிடம் தரட்டுமே என்ற நல்ல எண்ணத்தால் தான் அடித்துச் செல்லுகின்றன. ஆக்கப்பணிகள் நிறைய இருக்க அழிவுப்பணியில் ஈடுபடுகிறார்களே இவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்று மழை நினைக்கிறது. உங்களுக்குத் தான் அழிக்கத் தெரியுமா, எங்களுக்கும் அழிக்கத் தெரியும் என்று இயற்கை அழித்துக்காட்டுகிறது.

வீடு இழந்தவர்களுக்கு வீடு தரவேண்டும்; வாழ்வு இழந்தவர்களுக்கு வாழ்வு தர முடியும்; உற்றார் உறவினர் இழந்து அனாதைகளாக அலறியவர்களுக்கு இல்லங்களை அமைத்துத்தர வேண்டும். அவர்கள் யார்? தாய் தந்தை இழந்த தனி மனிதர்கள். அவர்களுக்கு இந்தச் சமுதாயம் தான் காப்பு அளிக்க வேண்டும். புதிய பிரச்சனைகளைச் சமுதாயம் எதிர் நோக்கி நிற்கிறது. தங்கள் தனிக் கட்சிப் பகைகளை மறந்து பணி செய்ய வேலைகள் இருக்கின்றன. இந்த நிலையில் வன்முறைச் செயல்களுக்கு இடம் இல்லை என்ற பாடத்தை இயற்கை கற்றுத் தருகிறது. இதை எல்லாம் அவளை நான் கேட்ட கேள்விக்குப்பதிலாகச் சொன்னாள்.

"நீ ஏன் இந்தப் புயல் நிவாரணப் பணியில் ஈடுபடவில்லை" என்று கேட்டதற்கு அவள் இவ்வளவு வேகமாகப் பதில் சொல்லி வைத்தாள். எனக்கே ஏன் கேட்டோம் என்று ஆயிற்று.

அன்று ஓர் எழுத்தாளர் ஒளி பரப்பில் அழகான கருத்துச் சொன்னார். அதாவது எழுத்தாளர் வாசகர்களுக்கு

எழுதவில்லை என்று. எனக்கு எழுத்தைப்பற்றி எப்படித் தெரியும். எழுத்து என்றால் கடையில் கணக்கு எழுதும் எழுத்து தான் தெரியும்.

அங்கே ஒரு ஸ்கூட்டரில் அடிக்கடி கடைக்கு வருவார். அவர் எங்கேயோ இலக்கியம் கற்றுக் கொடுக்கும் ஆசிரியராம். அவர் மற்றவரோடு பேசிக் கொண்டிருந்தார்.

"சார் இந்த எழுத்தாளி பேச்சை நீங்கள் கேட்டீர் களா?" என்றேன்.

என்ன செய்வது பேட்டி கேட்டால் ஏட்டிக்குப் போட்டியாக எதையாவது சொல்லி வைக்க நேரிடுகிறது.

யாருக்காக எழுதுகிறார் என்று கேட்டால் 'எனக்காக எழுதுகிறேன்' என்று பதில் சொன்னாராம்.

"அவர் எப்படி சார் அப்படிச் சொல்லலாம். விமரிசகர் களுக்கும் வாசகர்களுக்கும் தானே எழுத வேண்டும்" என்றார்.

எனக்கும் ஒன்றும் புரியவில்லை. மதுவைக் கேட்டேன். நீ என்ன நினைக்கிறாய். யாருக்காக நீ வாழ்கிறாய் என்று கேட்டேன்.

"எனக்காக வாழ்கிறேன்" என்றாள்.

அப்புறம் தான் தெரிந்தது அந்த எழுத்தாளர் சொன்னது உண்மை என்று. "அவரவர்களுக்கு வாழ்க்கையைப் பற்றி ஒரு கொள்கை இருக்கிறது. அதை வாழ்ந்து காட்டுவதில்தான் அந்த வாழ்வு முழுமை அடைகிறது" என்று கூறினாள்.

"அப்படியானால் எழுத்தாளன் தனக்காகத் தான் எழுதுகிறானா?" மறுபடியும் வற்புறுத்திக் கேட்டேன்.

"ஆம் அவன் என்ன நினைக்கிறனே அதை எழுது கிறன். அது தான் எழுத்து என்றாள்."

"அது பிறருக்குப் பயன் பட வேண்டாமா?"

"எழுத்தாளனைப் புரிந்து கொள்கிறார்கள். அது ஒரு அனுபவம்" அவ்வளவு தான்.

படிக்காத எனக்கும் எழுத்து, கலை, அரசியல் முதலிய வற்றை அவ்வப் பொழுது சொல்லி வந்தாள்.

பெண்கள் என்றாலே வெட்டிப் பேச்சுப் பேசுவார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அவளைப் பொறுத்த வரை அது உண்மையாக இல்லை.

தொழில் பற்றிய பேச்சு வியாபாரிகளுக்குப் பிடிக்கும். உறவுகள் முறிவுகள் இப்பேச்சுப் பெண்களுக்குப் பிடிக்கும். கிளர்ச்சிகள், படங்கள் இளைய சமுதாயத்துக்குப் பிடிக்கும். 'அடிதடி' அரசியல் பிரச்சனைகளாக ஆக்குவது வன்முறையாளர்க்குப் பிடிக்கும். 'ஒழுங்கான ஆட்சி' மக்கள் தலைவர்களுக்குப் பிடிக்கும் என்று அடுக்கிப் பேசினாள்.

அவள் யாரையோ மனதில் வைத்துக் கொண்டு இப்படிப் பேசினாள். நாட்டில் ஒழுங்கான ஆட்சி நடை பெறுகிறது என்பது அவள் அபிப்பிராயம்.

"அது தான் அதிக மழை பொழிந்து விட்டது" என்று நான் சிரித்துக் கொண்டே பேசினேன்.

அது சரி பழங்காலத்திலே கூட இப்படித்தான் பைத் தியக்காரத் தனமாகப் பேசினார்கள்.

'வேதம் ஓதும் அந்தணர்க்கு ஓர் மழை
நீதி நடத்தும் மன்னனுக்கு ஓர் மழை

கணவனை மதித்துக் கற்புடன் வாழ்பவர்க்கு ஓர் மழை என்று மழை பெய்ததாகச் சொல்கிறார்கள்.

இப்பொழுது யாருக்கு இம்மழை என்று கேட்டேன்.

"இதே தமிழகத்தில் மழையே பெய்யாமல் வானம் வெறித்துக் கிடந்தது; இப்பொழுது மழை பெய்து கருத்துக் கிடக்கிறது. இயற்கை எதையும் அதிகமாகத் தந்து விடுகிறது. அதைத் தாங்கும் சக்தி மனிதர்களுக்கு இல்லாமல் போய் விடுகிறது" என்று ஒரு புதிய தத்து வத்தைச் சொன்னாள்.

அவள் சொல்லுவதை என்னால் முழுவதும் ஏற்றுக் கொள்ள முடியாது; முடியவில்லை. அவள் சொல்லுவது: கம்யூனிஸ்டு அரசாங்கம்; அப்படித் தான் நினைக்கிறேன். அங்கே யாரும் வள்ளல்கள் என்று சொல்லிப் பெருமைப் பட்டுக் கொள்ள முடியாது. பிச்சை எடுப்பதும் குற்றம். அவர்களைப் பிச்சைக்காரர்கள் ஆக்குவதும் குற்றம்.

எனக்கு ஒரு அனுபவம் நினைவுக்கு வருகிறது. தாசப்பிரகாசு பஸ் ஸ்டாண்டு என்று தான் நினைக்கிறேன். அவளைச் சந்தித்து விட்டு எத்தனையோ பஸ்களைப் பிடித்து விட்டு அங்கு வந்து சேர்ந்தேன். முன் அவளோடு சந்தித்துப் பேசிய 'நீலக்கல்' உணவு விடுதியும் அதன் எதிரே தான் இருக்கிறது என்று நினைக்கிறேன். அவள் எனக்குப் பணம் கொடுத்த சம்பவம் அதை எப்படி மறக்க முடியும்.

அதற்கு எதிர் பஸ் நிலையம் தான். அவன் முரட்டுத் தனமாக இருந்தான்; உழைப்பினால் அந்த முரட்டுத்தனம் ஏற்படவில்லை. மற்றவர்களிடம் சுருட்டுவதால் தான் அந்த முரட்டுத்தனம் ஏற்பட்டு இருக்கும் என நினைக் கிறேன். 'அரைமனிதன்' நாவலில் வரும் ரவுடி ரங்கனை இங்கே பார்க்க முடிந்தது. அப்படியே தான் இருந்தான். அந்த ஆசிரியர் ஒரு வேளை அவனை இங்கே தான் பார்த் தாரோ தெரியவில்லை.

அந்த அறுப்புக்காரக் கந்தன் கூட உண்மையான பாத்திரம் என்று பேசிக் கொண்டார்கள். 'கார் சர்வீசு'க்கு

வந்த பழைய ஆள் ஒருவர் பேசிக் கொண்டிருந்தார்', 'இந்த அறுப்புக்காரக் கந்தன் வேறு யாரும் இல்லே. சார் தூளேயிலே ஒரு ரவுடி இருந்தான். அந்த ஆசிரியர் அந்தப் பாத்திரத்தைப் படைத்திருக்க வேண்டும். அவன் பேரு கூட கந்தன் தான். ஒவ்வொரு வெற்றிலேப் பாக்குக் கடையையும் மிரட்டிக் கொண்டு வந்தான். கடைசியில் தூளேயில் ஒரு தட்டான் கடையில் அவனே அடித்து நொறுக்கி விட்டார்கள். அவர்கள் எவ்வளவு தூரம் பொறுத்துப் பார்க்க முடியும். போய் செலவுக்குப் பணம் கேட்டு இருக்கிறன். அவர்கள் கொடுக்க முடியாது என்றுதுணிந்து சொல்லி விட்டார்கள். இவன் வழக்கம் போல் ஜேபியிலிருந்து 'பிளேடு' எடுத்து மிரட்டினன். அவ்வளவுதான் வந்தது கோபம். ஊது குழலிலேயே அடித்து நீட்டி விட்டார்கள். அறுப்புக்காரக் கந்தன் கொலேக் கேசு அதை வண்ணரப் பேட்டை மாணிக்கம் என்ற டேப்புப் பாடகன் ஒரு புத்தகம் போட்டு விற்றுன். அந்தக் காலத்திலே ஒரு 'கொலே' என்ருல் அது உடனே 'விலே' என்று பாட்டுப் புத்தகம் போட்டு விற்ருர்கள். 'தினத் தந்தி' வந்ததும் அது எல்லாம் படுத்துக் கொண்டது' என்று ஒரு வரலாறே சொல்ல ஆரம்பித்தான்.

பத்திரிகையின் தரம் எவ்வளவு உயர்ந்து விட்டது என்பதைத் தெரிந்து கொண்டேன். அது தான் அந்த ரவுடி ரங்கனேப் போலவே அந்த ஆள் இருந்தான். புது மல் ஜிப்பா ஆள் நன்ருக இருந்தான். உழைக்கலாம். ஏன் உழைக்க வேண்டும். பிழைக்கத் தெரிந்தவன். கையில் குழந்தையை வைத்துக் கொண்டு காசு கேட்டான். அநேகமாக அங்கிருந்த அனேவரும் காசு போட்டார்கள்

நானும் போட்டுத் தொலேத்தேன். அந்தக் குழந்தைக்காக அல்ல; அவன் முரட்டுப் பார்வைக்கு அஞ்சி. பலபேர் குழந்தைகளேப் படுக்க வைத்து விட்டு அவர்களேக் காட்டிப் பிச்சை எடுக்கிருர்கள். நான் நினேக்கிறேன் அவர்கள் தம் குழந்தைகளாக இருக்க முடியாது. அதற்காக

வாடகைக்கு வாங்கி வந்து விடுவார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது. தம் சொந்தக் குழந்தைகளாக இருந்தால் இப்படி வாட்டுவார்களா?

என்ன செய்வது இரக்க உணர்வை எழுப்பிப் பிழைக்கும் வழக்கம் இந்த நாட்டில் உண்டாகி விட்டது. அது கூடாது என்கிறாள் மது. இப்பொழுது கூடபலபேர் உண்டி குலுக்கி வருகிறார்கள். பத்துக்காசு கூட ஒருசிலர் போடுகிறார்கள். சே! இந்த நாட்டுப் பிச்சைக்காரர்கள் அப்படி மனிதர்களைப் பழக்கி விட்டு இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

நிறைய நிதி வழங்குகிறார்கள். மக்கள் நல்ல உள்ளத்தை வாழ்த்த வேண்டி இருக்கிறது. அவள் பேசவில்லை. மற்ற பெண்கள் அவளோடு படித்தவர்கள்.

திருச்சிக்குச் சென்று சேவை செய்து விட்டு வந்தார்கள். அவள் பேச்சே இல்லை. அவள் தன் கொள்கையில் உறுதியாக இருக்கிறாள். இப்படித் தனியார் உதவி செய்வதால் அரசாங்கம் முழுப் பொறுப்போடு செயல்பட முடிவதில்லை நிதி தரலாம்; ஆனால் இந்த மாணவர்கள் தம் படிப்பைக் கெடுத்துக் கொள்வது நல்லது அல்ல என்கிறாள்.

"படிப்பு அவ்வளவு முக்கியமா?" என்று கேட்டேன்.

"படிப்பு முக்கியம் இல்லை. தேர்வு முக்கியம்" என்று சொல்கிறாள்.

தேர்வில்தான் இந்த மாணவர்களின் எதிர்காலம் உருவாகிறது என்றாள். அதுதானே முக்கியம் என்று சொல்கிறாள்.

சரி குறை வேறு எங்கோ இருக்கிறது என்பதை உணரத் தொடங்கினேன்.

அவள் இந்தச் சமூக சேவையைப்பற்றி ஓர் அனுபவத்தைக் கூறினாள்.

அவர்கள், கல்லூரியில் சமூக சேவை என்பது வற்புறுத்தப் படுகிறதாம். அவர்களுக்கு என்ன செய்வது என்பதே தெரிவதில்லையாம்.

பக்கத்துச் சேரிக்குச் சென்றார்களாம், அங்கே ஒரு தெருவில் இருந்தவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்களாம். முதலில் இது ஏதோ சினிமாப்படக்காட்சி; ஷூட்டிங் நடக்கப் போகிறது என்று திரண்டு விட்டார்களாம். ஒரே கும்பல், இதில் யார் ஹீரோயின் என்பது விளங்கவில்லை.'மது' கொஞ்சம் பார்க்க நல்லா இருந்தாள். அவள்தான் பிரதான நடிகை என்று நினைத்தார்களாம்.

அவர்கள் அவளைச் சுற்றிக் கொண்டார்கள். படடைரக்டர், புரொஜெக்டர் இதெல்லாம் வரும் என்று சுற்றிக் கொண்டார்களாம். பிறகு உண்மை தெரிந்ததாம்.

"சே" இதுக்கா நீங்கள் வரணும் எங்களுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தால் சுத்தமா பெருக்கி விடுவோமே" என்று அங்கிருந்த குப்பம்மா ஒருத்தி சுலபமாகப் பேசி விட்டாளம்.

அதற்கப்புறம் அவளுக்கே வெட்கமாகி விட்டதாம். 'சமூகத் தொண்டு என்பது ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது' என்பதைப் பிறகு புரிந்து கொண்டாளாம்.

அவள் என்னோடு இல்லை முரளியோடு மூன்று நாட்கள் தான் இருந்தாள். என் மனைவியின் 'இடத்தைப்' பிடித்தாள். ஆனால் அவள் ஸ்தானத்தைப் பெற விரும்பவில்லை.

நான் இந்த மூன்று நாட்களும் மிகவும் வேதனைப் பட்டேன். மதுவை வீட்டுக்குள்ளே கொண்டுவரக்கூடாது. பத்துக்குத் தெரிந்தால் அவள் என்ன நினைப்பாள்.

அவளை விருந்தாக நினைக்க மாட்டாள்; மருந்தாக நினைப்பாள். அதாவது அவள் எனக்கு மருந்து வைத்து விட்டதாகப் பேசுவாள். அப்படித்தான் பலபேர் பேசக் கேட்டிருக்கிறேன்.

அவள் உண்மையில் மருந்துதான் வைத்து இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவளைப் பற்றி ஏன் நினைக்க வேண்டும். 'நட்பு' என்றால் இவ்வளவு தூரத்துக்குப்போகக் கூடாது. அது வெறும் நட்பு என்று எப்படிக் கூறமுடியும் அதில் பெண்மையும் கலந்து இருக்கிறது. பெண்மைக்கே ஒரு தனிக் கவர்ச்சி இருக்கிறது. அது ஏதாவது வடிவம் கொள்கிறது. கொஞ்சம் ஏமாந்தால் 'காதல்' என்ற போதைக்குச் சென்று விடுகிறது, ஒரு ஆணும் பெண்ணும் நெருங்கிப் பழகும் பொழுது இந்த போதை உண்டாகத் தான் செய்கிறது. அவள் இல்லை என்றாள். நான் அப்படிச் சொல்ல முடியவில்லை.

அவள் அந்தப் பார்வை இல்லாமல் பழகமுடியும் என்று நம்புகிறாள்; அதை என்னால் முழுவதும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் அவளிடம் பேசிப் பழகும் பொழுது நான் திருந்தி விடுகிறேன். என் மனம் பண்பட்டு விடுகிறது. அப்பொழுது தான் அவள் உயர்வு எனக்குத் தெரிகிறது. பெண் மட்டும் உறுதியாக இருந்தால் எந்த ஆண் மகனும் கெடமுடியாது என்பதை அவள் தொடர்பால் அறிந்து கொண்டேன் மூன்று நாள் ஒரே கூரையில் பழகினேன்; அவள் நன்மை என்னைக் கவர்ந்தது. ஆனால் அவள் பெண்மை என்னைக் கெடுக்க வில்லை. இது ஓர் அழகிய அனுபவமாக இருந்தது.

பெண் சில சமயம் தெய்வம் ஆகிறாள்; அவளே சில சமயம் பேயுமாகக் காட்சி அளிக்கிறாள். அவள் எனக்குத் தெய்வமாகக் காட்சி அளிக்க வில்லை;பேயாகவும் தோன்ற வில்லை. மானுடப் பெண்ணாகவே காட்சி அளித்தாள்.

காதல் பார்வையில் அவள் தெய்வமாகிறாள்; வெறுப்புப் பார்வையில் அவள் பேயாகிறாள்; நட்புப் பார்வையில் அவள் ஒரு பெண்ணாகவே விளங்குகிறாள். அவள் தன்னைப் பாராட்ட இடம் கொடுக்கவே இல்லை. அவள் அன்பை மட்டும் ரசிக்க இடம் தந்தாள்.

"உண்மையில் உன்னைப் பாராட்டுகிறேன்" என்று கூறினேன்.

எனவே பொய்யாகவும் பாரட்டுவது உண்டுஎன்பதை நானே தெரிந்து கொண்டேன். யாரிடமாவது ஏதாவது ஆகவேண்டும் என்றால் பொய் பாராட்டுதல் என்பது இயல்பாக அமைந்து விடுகிறது.

"எதற்கு?" இந்தக் கேள்வி நான் கேட்கவில்லை. அவள் கேட்டாள்.

"என் மீது அன்பு செலுத்துவதற்கு"

"யார் மீதாவது அன்பு செலுத்த வேண்டும். இது இயற்கையின் சட்டம். இப்பொழுது நீங்கள் கிடைத்திருக்கிறீர்கள்" என்றாள்.

"அப்படியானால் அன்பு நிலையற்றதா?"

"அன்பு நிலையானது; ஆள்தான் நிலையற்றது" என்று விளக்கம் தந்தாள்.

"நிலைத்த அன்பு என்பது உலகத்தில் காணவே முடியாதா?"

"ஞானிகளைப் போய்க்கேள்" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"நீங்கள் இப்பொழுது தனித்து விடப்பட்டிருக்கிறீர். உங்கள் தனிமை போக வேண்டும்; அதற்கு ஒரு பெண் அவசியம்"

"முரளிக்கு ஒரு தாய் வேண்டும்"

"இரண்டுக்கும் நான் பயன் படமுடியாது என்பதை இங்கே வந்த பிறகுதான் தெரிந்து கொண்டேன்."

"மனைவி ஆவதற்கு ஒருத்தி தன்னை இழக்கவேண்டும். தன்னை இழக்காதவரை அவள் மனைவியாக முடியாது" என்று மேலும் விளக்கம் தந்தாள்.

"அது தெய்வீக உறவு; அதைத்தான் இல்லறம் என்று பாராட்டினார்கள். இந்த உலகத்தில் புற நிகழ்ச்சிகள் ஒரு வரை மிகவும் பாதிப்பது இல்லை. அவை மொத்தமாகச்

சமுதாயத்தைப் பாதிக்கிறது. தனிமனிதனை முற்றிலும் பாதிப்புக்கு உள்ளாக்குவது தான் குடும்பம்'' என்றாள்.

அவள் எப்படி இந்த ஞானத்தைப் பெற்றாள் என்பது எனக்கு வியப்பாக இருந்தது.

''இங்கே வந்த பிறகு தான் தெரிந்து கொண்டேன். அதற்குமுன் சமுதாயம் என்பது ஒன்று உண்டு .அதற்காகத்தான் வாழவேண்டும் என்று நினைத்தேன். இங்கே வந்த பிறகுதான் இதன் பெருமையை உணர்ந்தேன். அவள் கோபித்துக்கொண்டு போனது நியாயமாகத்தான் படுகிறது. பெண் அந்த ஒன்றை மட்டும் தாங்கமாட்டாள். தன் கணவன் புற உலகுக்குச் செய்யும் தொண்டினைப் பணியினை ஏற்றுக் கொள்வாள்: இந்த வகையில் அவன் மனத்தில் ஒருத்தி இடம் பெற்றால் அதைத் தாங்க மாட்டாள். அதற்குத்தான் 'காதல்' என்று பெயர் என்று கூறினாள்.

அன்புக்கும் காதலுக்கும் உள்ள வித்தியாசத்தை அவள் சொல்லித்தான் தெரிந்து கொண்டேன். என் மனைவிக்கும் எனக்கும் உள்ளது காதலா உறவா என்று சிந்தித்தேன். காதல் பற்றி ஏற்பட்ட உறவுதான் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

மதுவிடத்தில் நான் காதல் கொள்வது தவறுதான். அதை அவள் எப்படி ஏற்றுக் கொள்வாள்!

எனக்குத் திடீர் என்று ஒரு கடிதம் வந்து சேர்ந்தது. அது முரளியைப் பற்றி. எனக்கு வரவில்லை. வேலைக்காரிக்கு எழுதி இருந்தாள். முரளி எப்படி இருக்கிறான் என்று கேட்டு இருந்தாள். அவன் அடம் பிடிப்பானே பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்று; என்ன செய்கிறான் என்று கேட்டு எழுதி இருந்தாள்.

அந்தக் கடிதத்தை வேலைக்காரி என்னிடம் கொடுத்தாள். நான் அவசரப்பட்டு எழுதச் சொன்னேன். ''நீ சொன்ன சின்னம்மா வந்து கவனித்துக் கொள்கிறாள் என்று

எழுது" என்று சொல்லிவிட்டேன். நானே அவளுக்கு 'உள்நாட்டுக் கடிதம்' ஒன்று வாங்கித் தந்தேன்.

அதில் அவள் அவ்வாறே எழுதி அனுப்பினுள். அவள் வேலேக்காரிதானே சொன்னபடி செய்தாள்.

"சின்னம்மாதான் வந்து அடிக்கடி கவனித்துக் கொள்கிருள். அவள் தவருமல் ஒவ்வொரு மாலேயும் வந்து கவனிக்கிருள். பிறகு ஹாஸ்டலுக்குப் போய் விடுகிருள். அவள் ரொம்பவும் அழகாக இருக்கிருள்" என்று வேண்டாத விஷயத்தையும் எழுதி விட்டாள்.

அந்தக்கடிதம் அந்த மூன்று நாளில் எழுதியது. இலக்கியம் எப்படிச் சாகா நிலே பெறுகிறதோ அதேபோல் அந்தக் கடிதம் சாகாவரம் பெற்றுவிட்டது. மதுவைப் பற்றிய எண்ணம் அவள் நெஞ்சில் நிலேத்த இடத்தைப் பெற்றுவிட்டது. வேலேக்காரி நான்கு வாக்கியமாக முடித்து வைத்தாள்.

அதற்குப் பிறகு அவள் என்ன எழுதினுள் அது எப்படி எனக்குத் தெரியும். அப்புறம் எழுதுவதற்கு என்ன இருக்கிறது. மதுதான் வருவது இல்லேயே! அவள் சிநேகிதி இல்லாததும் பொல்லாததும் பேசி இருக்கிருள்.

"நீ எப்படி இரவு தங்கலாம்? என்று கேட்டிருக்கிருள்.

"இரவு அதனுல்தான் தங்கினேன்" என்ருள்.

"அது தவறு ஆயிற்றே"

"விடுமுறை; மூன்று நாட்கள்; வார்டன் ஒன்றும் சொல்ல முடியாது".

"வார்டனுக்காகத்தான் நாம் தவறு செய்யாமல் இருக்கிறேமா".

"அப்படித்தான் அவர்கள் நினேக்கிருர்கள்."

" அது இல்லே பெண்கள் இல்லாத வீட்டில் நீ எப்படித் தங்கலாம்"

"அதனால்தானே தங்கினேன்"

இந்தப் பேச்சு அவளோடு நிற்கவில்லை. ஹாஸ்டலில் அது ஒரு முக்கியமான செய்தியாகப் பரவும் என்பதை அவள் எதிர்பார்க்கவே இல்லை.

மதுவின மதிப்புத் தாழ ஆரம்பித்தது. அவள் பெண்ணாக நடந்து கொண்டாள் என்பதுதான் அவள் மீது சாற்றப் பெற்ற குற்றச்சாற்று.

கவலையில்லாத அந்த முகம் கவலைப்பட்டால் எப்படி இருக்கும் என்பதை அறிய அது ஒரு வாய்ப்பாக நின்றது.

கடற்கரைச் சந்திப்பில் இதைச் சொன்னாள்.

"நான் உங்களைக் காதலிக்கிறேன்" என்றாள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அதற்கு நான் தயாராக இல்லை. திடீர் என்று ஏற்பட்ட விபத்தாக அது தெரிந்தது.

"நான் மணமானவன்"

"தெரியும் அதனால்தான் காதலிக்கிறேன்"

"எனக்கு விளங்கவில்லை".

"அப்படி எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள்"

"அதற்கு?"

"அதை மறுப்பதைவிட ஏற்றுக் கொள்வது மேல் என்று படுகிறது"

"நீ உண்மையாக"

"காதலிக்கிறேன் ஆனால் கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லை".

"பின் அதற்கு அர்த்தமே இல்லையே"

"பிளடானிக் லவ்" என்பது ஒன்று உண்டு. அது தெரியுமா."

இவ்வளவு பெரிய இங்கிலீசு எனக்கு எப்படித் தெரியும்.

"இது புது வகைக் காதல். உங்கள் உடம்பு எனக்குத் தேவை இல்லை. ஆனல் உங்கள் காதல் எனக்குத் தேவை. உங்களை நேசிக்கிறேன். ஆனல் இச்சிக்கவில்லை" என்ருள்.

இது அரை மனிதன் நாவலில் நொண்டி பேசுவதைப் போல இருந்தது. 'அவளிடம் உறவு கொள்ள விரும்பி னேன். ஆனல் அவளை விரும்பவில்லை.' இதைப் போலத் தான் அவளும் பேசினள்.

"இந்தக் காதல் கவிதையைப போன்றது. கவிதையைச் சிலர்தான் ரசிக்க முடியும். அதைப் போன்ற நிலை இது" என்று கூறினள்.

"அப்படி என்ருல்"

"உங்களிடம் என் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டேன். உங்களிடம் பேச வேண்டும் பழக வேண்டும் ஆனல் நீங்கள் எனக்குத் தேவை இல்லை" என்ருள்.

இது ஒரு புதுவகை அனுபவமாக இருந்தது.

அதற்கு எனக்கு என்ன அருகதை இருக்கிறது என்று எண்ணிப் பார்த்தேன். முடிவு தெரியவில்லை.

நான் படிக்கவில்லை, அதாவது கல்லூரியை எட்டிப் பிடிக்கவில்லை. காதல் என்பது அங்குப் படிக்கிறவர் களுக்குத்தான் தெரியும் என்று பேசிக் கொள்கிருர்கள். எனக்கு இந்த மாணவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவே முடிவதில்லை.

மணிக்கணக்காக நடைபாதையில் நின்று பேசுவார் கள். என்ன பேசுவார்கள்? மதுவைப் போலப் பொது

விஷயங்களையும் பேசுவார்கள். வீட்டு விஷயங்கள் பேசுவதற்கு என்ன இருக்கிறது.

நான் போகும் வழியில் இந்தக் காட்சிகளைக் காண்பது உண்டு. அவர்கள் மாணவர்கள். அதாவது எந்தக் கவலையும் இல்லாமல் பேசிக் கொண்டிருக்க உரிமை பெற்றவர்கள்.

நான் கூட நினைப்பது உண்டு. நான் ஏன் படித்து இருக்கக் கூடாது. யாரையாவது படிக்கும்பொழுது பழகிக் காதல் செய்து பிறகு கலியாணம் செய்து கொண்டிருந்தால் ஒரு முழுமையைப் பெற்றிருக்கலாம். காதல் பண்ணிக் கலியாணம் செய்து கொள்ளாததால்தான் எனக்கு இப்பொழுது மதுவின் மேல் மயக்கம் ஏற்படுகிறது. 'காதல் என்பது வாழ்க்கையில் எப்படியாவது ஒருமுறை ஒருவர்க்கு ஏற்பட்டுத்தான் தீரும். அது மணத்துக்கு முன்னால் ஏற்பட்டால் நல்லது; பின்னால் ஏற்பட்டால் என்னைப் போல் வேதனைப்பட வேண்டியதுதான்.

எனக்கு இப்பொழுது ஒரு மனநிறைவு ஏற்பட்டது. இதுவரை நட்பு என்ற சொல்லால் அவள் உணர்வையும் அன்பையும் விளக்க முற்பட்டாள். அதை என்னால் நம்ப முடியவில்லை. இதற்கு இது ஒரு புதுச்சொல் இருக்கத்தான் வேண்டும் என்று நினைத்து வந்தேன். அவள் அன்று ஒரு புதிய சொல்லைத் தந்தாள். அதாவது platonic love அதாவது 'கலை ரசிகக் காதல்' என்பது அதன் பொருள். அழகை விரும்புவதால் ஏற்படும் உறவு என்பது அதன் விளக்கம். அவளிடத்தில் அழகுஇருக்கிறது. என்னிடத்தில் அன்பு இருக்கிறது. அவளுக்காக நான் ஒரு நாள் வாழ்ந்தேன். துணிந்து தீயவர்களை எதிர்த்தேன். தெரியாமல் அவள் என்னைப் பிடித்தாள். அப்பொழுது நான் மணமாக, வில்லை என்று நினைத்தாள். அந்த நினைவு மின்னல் போல் அவள் உள்ளம் என்னைத் தொட்டது. அதிலிருந்து அவளால் என்னிடமிருந்து விலகிக் கொள்ள முடியவில்லை.

அவள் அழகை நான் ரசிப்பதில் அவள் தனி இன்பம் கண்டாள். அது அவளுக்கே தெரியாது. அவள் கையில் ஒருநாள் மருதாணி வைத்திருந்தாள். அதை நான் பார்க்க வேண்டும் என்று விரும்பினாள்,

தன் கைகளை எனக்குக் காட்டினாள்.

"இதோ பார்" என்றாள்.

"வெறுங்கை" என்றேன்.

"இல்லை; இந்தச் சிவப்பு அழகாக இல்லையா. இதைக் காட்டவேண்டுமென்று நினைத்தேன்" என்றாள்.

அவள் அழகை நான் ரசிப்பதற்கு இடம் கொடுத்தாள். அவளை ரசிக்க இடம் மறுத்தாள். இதுதான் அந்தப் புதிய காதல் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

ஒரு சாமியார் என் கடைக்கு வந்திருந்தார். அவர் இந்த உலகைத் துறந்துவிட்டேன் என்று கூறினார். அவருக்கு ஒரு மகள் இருந்தாள். சாமியாருக்கு எப்படி மகள் இருக்கமுடியும், இது புதிய கேள்விதான். அவள் பிறந்த பிறகுதான் அவர் சாமியாராகிவிட்டார். சின்னபோதே அவர் மனைவி இந்த உலக வாழ்வை நீத்துவிட்டார். அதற்கப்புறம் அவர் தனிமை வாழ்க்கையை நடத்தினார். அவர் எப்படி இந்த உலகில் பிழைக்க முடிந்தது. கைரேகை பார்ப்பதில் கெட்டிக்காரராக இருந்தார். அவர் பெரிய மனிதர்கள் என்று சொல்லப்படும் ஒரு சிலரைச் சுற்றி வருவார். அவர்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை இருப்பது இல்லை. அடுத்த பதவி எப்பொழுது என்று சதா கவலை கொள்பவர்கள்தான் பெரிய மனிதர்கள்.

இப்பொழுது இந்த அய்யப்பன் சாமி பல இடங்களில் இடம் பிடித்துவிட்டது. கருப்புச் சட்டைக்காரர்களாகி விட்டார்கள். புதிய பக்தி. மது உண்ட மங்கையர்களைப் போல் அவர்கள் காட்சி அளிக்கிறார்கள். ஏதோ பாட

வேண்டும் குதிக்க வேண்டும். யானை, ஒட்டகம் இந்த மாதிரி மிருகங்களை உலவவிடவேண்டும். ஏதோ தாடி வளர்த்துக் கொள்கிறார்கள். குடும்பம் குடும்பமாக இந்த பக்தி பரவிவிட்டது.

சரி சாமியாரைப்பற்றிப் பேசினேன். அதோடு இந்த நினைவு வந்துவிட்டது. அவர் என் கையை நீட்டச் சொன்னார்.

"எதற்காக?"

"உன் எதிர்காலத்தைப் பற்றி"

எனக்கு என் மனைவியின் நினைவுவரத் தொடங்கியது. அவளும் தன் எதிர்காலத்தைப் பற்றித்தான் கவலைப்படு கிறாள். என்னைப்பற்றி அவள் ஒரு வார்த்தைகூட கேட்க வில்லை.

"முரளி எப்படி இருக்கிறான்" என்றுதான் கேட்கிறாள் இதைத் தொடர்ந்து எழுதுகிறாள்.

என்னை மட்டும் மது வந்து கவனித்துக் கொள்வான் என்று பொறுப்பில்லாமல் சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

அவனைக் குன்னூரில் ஏதோ ஆங்கிலப் பள்ளியில் படிக்க வைக்கப் போகிறாளாம். தன் மகன் நன்றாகப் படித்துப் பிரமாதமாக முன்னுக்கு வரவேண்டும் என்று ஆசைப்படுகிறாள். என்னிடம் விட்டுவைத்தால் கெட்டு விடுவானாம். நான் படிக்கவில்லை. அதனால் அவனும் அப் படியே ஆய்விடுவானாம். அவள் என்னை அவ்வளவுதூரம் மதிப்பு இடுகிறாள். எப்படியோ படித்தால்தான் முன்னுக்கு வரமுடியும் என்று நினைக்கிறாள்.

மது அந்த நம்பிக்கை எதிர்காலத்தில் இல்லை என்று சொல்கிறான். அடிக்கடி பஸ் கண்டக்டர்களுக்கும் யாண

வர்களுக்கும் அடிதடி மோதல்கள் நடைபெறுகின்றன. ஏன் தெரியுமா? மாணவர்களுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கை இல்லை என்கிறள்

இதைப்பற்றிப் பலர் பலவிதமாக விமரிசித்துக் கொண்டார்கள்.

"மாணவர்கள் மிகவும் பொறுப்பு இல்லாமல் நடந்து கொள்கிறர்கள்" என்று பேசினர்கள்.

"கண்டக்டர்கள்தாம் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறர்கள்" என்று பேசிக் கொண்டார்கள்.

மது சொல்கிறள்! "சாதி ஒழிய வேண்டும் என்று பல பேர் பேசுகிறர்கள். இப்பொழுது புதிய சாதிகள் உருவாகின்றன. இன உணர்வு பெருகிவிட்டது. ஒரு மாணவனைத் தாக்கினல் மாணவ இனமே திரள்கிறது. ஒரு கண்டக்டரைத் தொட்டுவிட்டால் அத்தனை பஸ்களும் ஓடாமல் நின்றுவிடுகின்றன. தனி மனிதன் செய்யும் தவறுகளால் சமுதாயமே பாதிக்கப்படுகிறது." என்று ஒரு புதிய தத்துவத்தைப் பேசினள்.

அந்த மாதிரி நிகழ்ச்சிகளின் போதுதான் தனக்குச் சோதனை ஏற்பட்டது என்று கூறினள். எதுவுமே சொல்ல முடியாத காலமாகவிட்டது என்று தன் முடிவைச் சொன்னள்.

இந்தச் சாமியார் மட்டும் எப்படி என் எதிர்காலத்தைப்பற்றிச் சொல்லமுடியும். என் நிகழ்காலப் பிரச்சனை பத்து. அவள் வீடு வந்து சேர வேண்டும். மறுபடியும் பழைய குடும்பம் அழகாக ஓடவேண்டும். நடுவில் வீசிய புயலின் பாதிப்பு மறையவேண்டும். இதை எப்படி அவர் கூறமுடியும்.

அவர் என் கையை நீட்டச்சொன்னர். அந்தக் கோடுகள் கைவிரல் மடிப்பால் ஏற்படுகின்றன என்று விஞ்

ஞான அடிப்படையில் கூறமுடியாவிட்டாலும் அனுபவ அடிப்படையில் சொன்னேன்.

அவர் ஓர் அனுபவத்தைச் சொன்னார். அதை எப்பொழுதும் மறக்க முடியாது என்றால். அதைக் கேட்க ஆசைப்பட்டேன். அவர் ஒரு கவிஞர் வீட்டுக்குப் போயிருந்தாராம். அவர் சமுதாயச் சிந்தனை மிக்கவராம். அவரிடம் தன் கைவரிசை காட்ட இந்தப் பெரியவர் போய் இருக்கிறார். பேச்சு முடிந்ததும் அவர் கையைச் காட்டச் சொன்னாராம்.

''நான் எதிர்காலத்தில் வாழ்பவன் அல்ல'' என்று கூறினாராம்.

கவிஞர்கள் கற்பனையில வாழ்பவர்கள் என்று இவர் எதிர்பார்த்தார்.

''நான் நிகழ்காலத்தைப் பற்றிச் சிந்திப்பவன்'' என்று கூறினாராம்.

''கவிஞன் முதன் முதலில் நிகழ்காலத்தைப் பற்றிச் சிந்திப்பது இதுதான் முதல்தடவை'' என்று இவர் கூறினாராம்.

''இந்த நாட்டின் வியாதியே எதிர்காலத்தைப்பற்றி நினைப்பதே'' என்று விளக்கினார்.

''என்னைப்பற்றியே நான் எப்பொழும் கவலைப்பட்டதில்லை. நீர் எனக்கு என்ன சொல்லமுடியும்'' என்று கேட்டாராம்.

இப்படியும் ஒரு மனிதர் இருப்பாரா என்று வியந்தாராம்.

'அது எப்படி முடியும்?'

''இந்த நாட்டின் கவலை என்னுடைய கவலை, இந்தச் சமுதாயத்தின் வேதனை என் வேதனை'' என்று கூறினார்.

''உன் பிள்ளைகள்''

"அவர்களை மறந்து எத்தனையோ நாட்கள் ஆகின்றன. அவர்கள் என்னைப் பற்றிக் கவலைப்படாதபோது நான் ஏன் அவர்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டும்" என்று கூறினர்.

"ஏன் தகராறு?" என்று கேட்டாராம்.

"அவர்கள் என்னிடம் எதிர்பார்ப்பது இல்லை. அவர்கள் சமுதாய மனிதர்கள் ஆகிவிட்டார்கள். அவர்கள் சமுதாயத்துக்குக் கொடுக்க அதனிடமிருந்து பெற இருக்கிறுகளே தவிரப் பெற்றோர்களை எதிர்பார்க்கவில்லை."

"இதுவரை பெரிய பெரிய நீதிபதிகளைப் பார்த்து இருக்கிறேன். அதிகாரிகளைப் பார்த்து இருக்கிறேன். அவர்கள் சதா தம் பிள்ளைகளின் கவலையைப்பற்றித்தான் பேசுவார்கள். நீங்கள்"

"இன்னும் அவர்கள் குடும்பத்தலைவர்களாக இருக்கிறார்கள்."

"நீங்கள்?"

"சமுதாய மனிதன்" என்று கூறிவிட்டு "என் கவலை வாழ்க்கை இந்தச் சமுதாயத்தை ஒட்டியது" என்று கூறினராம்.

தனிமனிதன் தன்னைப் பற்றியே கவலைப்படும்போதுதான் இந்த ஜோசியம் பக்தி முதலியன தலையெடுக்கின்றன என்பதை அந்தக் கவிஞன் அவரிடம் பேசிய பேச்சிலிருந்து தெரிந்துகொண்டேன்.

அடிக்கடி மது இந்தச் சமுதாய உணர்வைப்பற்றிப் பேசுவாள். அது அந்தக் கவிஞனிடம் முழுமை பெற்றிருந்ததை என்னல் உணரமுடிந்தது.

எனக்கும் இந்த மதுவின் பழக்கத்தால் இந்தச் சமுதாய உணர்வு என்ற பைத்தியம் கொஞ்சம் கொஞ்சம் தலைக்கேறிவிட்டது. அதனால்தான் என் மனைவியின் பிரிவை அவள் முரண்பாட்டை என்னல் தாங்கிக்கொள்ள முடிந்தது. அவளைத்தவிர நான் யாரிடமும் பழகக்கூடாது

என்று நினைக்கிருள்; அதற்காக ஒரு பெரிய போராட்டம்; ஒத்துழையாமையைக்காட்டிவிட்டாள்.

நான் என்ன செய்ய வேண்டும் என்றே எனக்கே தெரியவில்லை. என் கவலையை உணர்ந்துதான் அந்தத் துறவி என் கையை நீட்டச்சொன்னுர் என்று நினைக்கிறேன்.

அந்தக் கவிஞனின் நினைவு எனக்கும் வந்தது.

''அது என் மனைவியின் கவலை''. என்ற எண்ணம் பளிச்சிட்டது. அவள் என்னோடு வாழ விரும்புவது அவள் பிரச்சனை. எதற்காக நான் கவலைப்பட வேண்டும். அவள் இங்கே இருப்பதை விட அங்கே சுகமாக இருக்கிருள் என்பது தானே அர்த்தம். இல்லாவிட்டால் அவள் எப்பொழுதோ இங்கு வந்திருப்பாள் அவள் சுகத்தை நான் ஏன் கெடுக்க வேண்டும்.

திடீர் என்று அந்தச் சாமியார் என் நினைவுக்கு வந்தார். எப்படித் தனிமனிதர் வாழ்வுப் பிரச்சனைகள் இந்த மூட நம்பிக்கைகளை உண்டாக்குகின்றன என்பதற்கு அவர் ஓர் எடுத்துக் காட்டாக விளங்கினுர்.

சில பேர் நூருண்டு வாழவேண்டும் என்று நினைக்கின்ருர்கள். எப்படி வாழ முடியும் என்றும் நூல்கள் எழுதுகிருர்கள். நானும் படித்து இருக்கிறேன். அவர்கள் ஐம்பதை எட்டிப் பிடிப்பதற்கு முன்னலேயே சாவு அவர்களைப் பிடித்துக்கொள்கிறது. ஏன் மனிதன் நூருண்டு வாழ நினைக்கிருன்? அவனுக்குச் சமுதாயச் சிந்தனைகள் இருப்பது இல்லை, அப்படிப் பட்டவனே தான் நூருண்டு வாழ்வது எப்படி என்ற கவலையில் சிந்தனையில் ஆழ்கிருன்.

எனக்கு இந்த மாதிரி தத்துவங்கள் நிறையத் தோன்ற ஆரம்பித்து விட்டன. அவள் என்னோடு இருந்தால் தத்துவம் பிறக்காது. அவள் மகத்துவத்தில் மறந்து கிடப்பேன்.

படிக்காதவன் நான்; அதனுல் தான் நான் நிறைய தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். படித்தவர்கள் எல்லாம் தெரிந்தவர்கள் போல் நடிக்கிருர்கள். அதிலும் பட்டம் வாங்கிவிட்டவர்கள் தம்மைப் பற்றிப் பிரமாதமாக நினைத்துக் கொள்கிருர்கள்.

என் பெட்ரோல் பங்கில் ஒரு அதிருப்தி எப்பொதும் இருந்து கொண்டு இருக்கிறது. அவர்கள் அதிருப்தி உடையவர்களாகவே இருக்கிருர்கள். நாங்கள் செய்வது கூட அநியாயம் தான். மாதம் முப்பதும் ஐம்பதும் தந்தே வேலையாட்களை வைக்கிறேம். அவர்கள் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும். போனஸ் கேட்கிருர்கள்.

இதெல்லாம் விட்டு விட்டு எங்காவது ஓடிப்போய் விடலாம் போல அடிக்கடி தோன்றுவது உண்டு, நிம்மதியற்ற வாழ்க்கை. அது சரி, யார்தான் நிம்மதியாக வாழ முடிகிறது. யார்தான் ஓடாமல் இருக்கிருர்கள்? நான் பல பேரைப் பார்க்கிறேன். எல்லாருமே வாழ்க்கையை விட்டு ஓடத்தான் பார்க்கிருர்கள், லட்சோப லட்சம் மக்கள் 'சாமி சரணம் ஐயப்பா' என்று கோஷமிட்டு ஓலமிடுகிருர்கள். ஒரே கூச்சல் வீட்டில் நிம்மதியாகத் தூங்க முடிவதில்லை. எல்லாரும் படித்தவர்கள் தான். என் பக்கத்து வீடு மலையாளிகள். அவர்கள் எப்படியோ இங்கு வந்து சேர்ந்து விட்டார்கள். அவர்கள் தெய்வத்தைப் பரப்பிப் பிரச்சாரம் செய்து விட்டார்கள். 'சாமி சரணம் ஐயப்பா' என்று கத்துகிருர்கள்.

எல்லாரும் தான் பார்க்கிறேன் ஒரு ஞாயிற்றுக்கிழமை வந்தால் யார் வீட்டில் இருக்கிருர்கள். நான்தான் இருக்கிறேன் அது கூட பத்து இல்லாததால்தான் முரளியோடு விளையாட வேண்டி இருக்கிறது.

"அப்பா! அம்மா எப்ப வருவாங்க"

என்று கேட்கிருன்.

"இப்ப வரமாட்டாங்க"

"நான் பெரியவன் ஆனப் புறம் தான் வருவாங்களா"

அதிலே சோகம் கலந்து இருந்தது. இவ்வளவு பெரிய இடை வெளியை அவள் இல்லாமல் எப்படி நிரப்ப முடியும்.

'நான் தான் பணிய வேண்டும்'. மது சொன்ன சொற்கள் நினைவுக்கு வந்தன. 'அவள் ஒரு முதலாளி என்னை முழு அடிமைப்படுத்த நினைக்கிருள். உண்மைதான்.

மறுபடியும் கண்ணகியின் சிலை என் நினைவுக்கு வந்தது. அவளுக்கு ஏன் சிலை வைத்தார்கள்; அது இப்போதுதான் நினைவுக்கு வருகிறது.

"மாதவியின் வீட்டுக்கு ஏன் சென்ருய்?" என்ற கேள்வியை அவள் ஒரு நாளும் கேட்டதில்லை.

"அவளைப் பற்றிய நினைவை அகற்றிஞல் தான் உன்னேடு பேசுவேன்" என்று ஒரு நாளும் பேசவில்லை.

எனக்குப் பின்ஞல் சொத்துக்கு வாரிசாக முரளியை நினைத்து வளர்க்கிருகள். என் அப்பாவும் அப்படித்தான் வளர்த்தார். 'அப்புசாமி அண்ட் சன்ஸ்' என்று தான் என் தந்தை இந்த பங்குக்குப் பெயர் வைத்தார். நான் 'நான் சன்ஸ்' என்ற பெயரைத்தான் வைக்க வேண்டும்.

அவ்வளவு சொத்தையும் அவன் தன் சொத்தாக மதிக்கவில்லை. காதல்கலவையிலே போட்டுக் கரைத்தான். அவள் ஏன் என்று கேட்கவில்லை: எதற்கு என்று பேசவில்லை. கொள்க எனக் கொடுத்தாள் தன் காற்சிலம்பினை; விற்க எனச் சொல்லி விடை தந்தாள். பத்து அப்படிச் சொன்ஞளா செல்லுவாளா, உனக்குப் பின்ஞல் யார் கவனிப்பார்கள் என்று கேட்பாள். கற்சிலையில் வாழும் கண்ணகியைப் பற்றி அவ்வப் பொழுது நினைத்துப் பார்க்கிறேன்.

இந்த ஒரு குணம் தான் எனக்குப் பிடித்திருக்கிறது. 'எங்கே போகிருய்' என்று கேட்கக் கூடாதுஎன்ற பழக்கம் எவவளவு உன்னதமானது என்பது இப்பொழுதுதான் தெரிகிறது. போகிற வேலை கெட்டுவிடும் என்பதஞல்

அல்ல; அது அவரவர் சொந்த விஷயம் அதைச் சொல்லித் தான் தீர வேண்டும் என்பது மனிதஉரிமையைப் பறிப்பது ஆகும். என் கனவுக் கன்னியைப்பற்றி அவள் தெரிந்து கொள்ள ஆசைப் பட்டாள். அதனுல் இவ்வளவு பெரிய முறிவு ஏற்பட்டது.

அந்த மதுவுக்கும் ஒரு பிரச்சனையை எழுப்பிவிட்டேன், அவள் என்வீட்டில் தங்கியது ஒரு பெரிய குறை. மாருத மாசு; அவள் அதை எப்படிச் சமாளிக்க முடியும்.

அவளைச் சந்தித்த போது இதைத் தான் சொன்னுள். "இன்றைய பெண் பழமைக்குப் பழமையாக விளங்க வேண்டும்; புதுமைக்குப் புதுமையாக விளங்க வேண்டும்" என்ருள்.

"நீங்கள் அவளுக்குக் கடிதம் எழுதுங்கள் முரளி அழுகிருன் என்று" என்று சொல்லிக் கொடுத்தாள்.

அதுவும் நியாயமாகப் பட்டது. வாழ்க்கையில் வேறு பட்ட நாங்கள் முரளியால் ஒன்றுபட முடியும் என்பதை நினைத்துப் பார்க்க முடிந்தது.

அதன் விளைவு தான் முரளியை அவள் கொண்டு சென்று விட்டாள்.

"உன்னிட மிருந்தால் அவன் கெட்டுக் குட்டிச் சுவர் ஆவான்" என்று கடுமையாக விமரிசனம் செய்தாள்.

வேலைக்காரி கமலம் யார் எப்படிப் பேசுகிருர்களோ அவர்கள் பக்கம் சாயும் இயல்பினள்; பிறர்மனம் நோகா மல் பேசக் கூடியவள்.

அந்த மூன்று நாள் நிகழ்ச்சிகளை மூன்று மணி நேரத் தில் சொல்லி முடித்தாள்.

அந்த நாட்கள் வெளியேயும் ஒரே குழப்பம் தான் பஸ்கள் கண்ணுடி சுக்கு நூருகத் தன் சோகக் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தன. நல்ல காலம் என் தலை சுக்கு நூருகி இருக்கும். தப்பினேன். யார் கல்லடித்தது அடித்தவர்

க்ள் தெரியாது. அது பிரயாணிகள் மீது பட்டிருக்கும் வெறும் கண்ணுடியை மட்டும் சுவை பார்த்தது.

தெருவில் இரத்தம் சிந்தவில்லே. கண்ணுடித்துகள்கள் சிந்திக் கிடந்தன. அதற்குப் பிறகு நான் பஸ்ஸில் ஏறு வதைத் தவிர்த்தேன் அது தான் என் ஸ்கூட்டர் இருக் கிறதே, அது தானே மதுவை என்னேடு பழக்கப் படுத் தியது.

அப்பொழுது ஒரு மாணவனைச் சந்தித்தேன். கல்லூரி இல்லேயா என்று கேட்டேன். 'மூடிவிட்டார்கள்' என்று கூறினன். அவனும் எங்கள் பங்குக்கு வந்து பெட்ரோல் போட்டுக் கொள்வான்.

"கல்லூரி மூடினல் பஸ் ஓடுகிறது;

பஸ் ஓடினல் கல்லூரி மூடுகிருர்கள்"

என்று எனக்குள் கூறிக் கொண்டேன். இதை யாரிடம் சொல்ல முடியும்

அன்று அவள் பஸ்ஸில் சென்ருள். முரளியை அழைத்துக் கொண்டு எழும்பூர் ரயில் நிலேயம் அவள் சென்றது; அதுதான் முன்னமேயே சொன்னேன். அவர்கள் ஊரில் மழை பெய்தது; புயல் அடித்தது. சேதம் உண்டா யிற்று; ஆனல் அவள் வீடு தப்பியது. கட்டுக் கோப்பான மாடி வீடு; மாடி வீடுகளுக்கு அதிகம் சேதம் இல்லே. அந்தப் பக்கத்துப் புளியமரங்கள் எல்லாம் வேரோடு சாய்ந்து விட்டன. சில சமயம் ஆளும் கட்சிகள் தேர்தலில் முறிந்து விழுவது போல அந்தப் புயல் இருந்தது.

மின்னல் வேக வேலே நிறுத்தம் ஏற்பட்ட போதுதான். மது வன்முறையாளர் கையில் சிக்கினள்; நாட்டில் குழப்பம் ஏற்படுப் பொழுது பொதுமக்கள் பாதிக்கப்படுகிருர்கள். இதை நான் எழுதித்தான் தெரியவேண்டும் என்பது இல்லே. பொது மக்கள் என்ருல் சில சமயம் நாம் அதில் அகப்படு வதில்லே. அவர்கள் யாரோ என்று விமரிசித்துப் பழக்கம்

அதனுல்தான் அதைக் கொஞ்சம் சொல்ல வேண்டி யிருக்கிறது.

அன்று அவள் பாதிக்கப்பட்டாள். அன்று முரளி தலைக் கட்டோடு வீடு திரும்பினுன். உயிருக்கு வந்தது தலைக் கட்டோடு நின்றது.

அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. இந்த நாட்டு அரசியல் சூழ்நிலையை அடியோடு வெறுத்தேன். வெறுக்க வேண்டி இருந்தது. 'முரளி' என்ன செய்தான். அவன் ஒரு தவறும் செய்யவில்லை. அவன் அன்று டாக்சியில் செல்லாததுதான் தவறு. எல்லோரும் எப் போதும் டாக்சியில் போக முடியுமா! அன்று அவள் போயிருப்பாள். பஸ் ஸ்ட்ரைக் என்ருல் டாக்சி எங்கே கிடைக்கிறது. அது யானைவிலை குதிரை விலை என்ற பழமொழிக்கு இலக்காகி விடுகிறது. இல்லாவிட்டால் அவள் டாக்சியில்தான் போயிருப்பாள். முன் டாக்சியில் தானே போனுள்.

"ஏன்பா அவர்கள் என் மண்டையை உடைத்தார்கள்? என்று கேட்டான்.

"அவர்கள் மண்டையில் மூளையில்லை" என்றேன்.

"இல்லேப்பா பயித்தியம்" என்ருன். அவனுக்குப் பழக்கமான அந்தச் சொல் என்னைச் சிந்திக்க வைத்தது. அவன் எங்கே குறை கண்டாலும் அங்கே அந்தச் சொல்லைத் தான் பயன்படுத்துவது பழக்கமாகிவிட்டது.

"மாணவர்கள் கண்டக்டர்கள் மோதல்" என்றேன்.

"அதற்கு நான்தான் கிடைத்தேனு"

"நீ ஒருவன்தான் இதை எதிர்பார்த்து இருக்க மாட்டாய்" என்று கூறினேன்.

"பைத்தியக் காரன்தான் கண்டபடி கல் எடுத்து அடிப் பான்" என்று அவன் விமரிசனம் செய்தான்.

இதுவரை மது எனக்கு விளக்கிய அரசியல் தத்துவங்கள் பொதுவாழ்வு நிகழ்ச்சிகளைப் பற்றிய விமரிசனங்கள் இவை எல்லாவற்றையும் விட அவன் சொல்லியதுதான் மிகப் பொருத்தமாக இருந்தது.

மது காந்தியின் சிலையைக் காட்டுவாள். இந்த நாடு கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினை இது ஒன்றுதான். பகைவனையும் மன்னிக்கும் இயல்பு. இப்பொழுது பகைமையை எப்படி வளர்ப்பது என்ற கலையில்தான் அரசியல் ஈடுபட்டுள்ளது.

சில நாளேடுகளில் வரும் கட்டுரைகளை அவற்றைக் கட்டுரைகள் என்ற பெயரில் வெளியிடுகிறார்கள். அவை எவ்வளவு தூரம் தாழ்ந்து கிடக்கின்றன என்பதைப் பார்க்க முடிந்தது. மொழி இவ்வளவு தூரம் தாழ்ந்து போக முடியும் என்பதை அதைப்படிக்கும் பொழுதுதான் தெரிகிறது. சிலம்புக் கூட்டங்களைக் கேட்டிருக்கிறேன். தமிழ் எவ்வளவு உயர்ந்தது என்று அறிந்திருக்கிறேன். அது எவ்வளவு தூரம் தாழ முடியும் என்பதை இந்தப் பத்திரிகைகளில் காணமுடிகிறது. அரசியல் எவ்வளவு அடிமட்டத்துக்கு இந்த நாட்டில் போகிறது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டி இருக்கிறது.

திரு வி.க. வின் தென்றல் தமிழ் படித்து இருக்கிறேன். அவரும்தான் அரசியல் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். இவர்களும்தான் எழுதுகிறார்கள். இமயமும் பசுபிக்கடலும் எவ்வளவு வேற்றுமை உடையது என்பதை அங்குச்சென்று பார்த்துத் தெரிந்து கொள்ளத் தேவைப்படவில்லை,

அதே நிலையைத்தான் எங்கள் நான்கு தெருச்சந்தியில் சந்தி சிரிக்கும் பேச்சுகள் பச்சைத் தமிழில் தம் இச்சைப் படி பேசப்படுகின்றன.

இந்த மாதிரி மேடைப் பேச்சுகளும் எழுத்துகளும் உலகத்தில் வேறு எங்காவது உண்டா என்று நினைத்துப் பாரக்கிறேன். நான் என்ன உலக சரித்திரமா படித்து இருக்கிறேன். நேரு இப்படி ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார்

என்று மது சொல்லுவாள். அவள் படித்தவள் அவளுக்குத் தெரியும். அவள் மட்டும் என்ன பழைய சரித்திரத்தைப் பற்றித்தான் பேசமுடியும். இன்றைய சரித்திரம். அதுசரி நாம் போய்ப் பார்த்தோமா என்ன?

ஆங்கிலத்தில் எந்தப் பத்திரிகையிலும் இப்படி வருவது இல்லை என்று அவள் சொல்கிருள். உலக நாடு களில் எங்கேயும் இவ்வளவு தூரம் தாழ்ந்து போனது இல்லை என்று கூறுகிருள்.

"மேடைத் தமிழ் தமிழில் உயர்ந்ததைப் போல் எங்கும் உயர்ந்தது இல்லை. அது தாழ்ந்ததைப் போல் எங்கும் தாழ்ந்து இருக்க முடியாது" என்று ஒரு முடிவுக்கு வந்தேன்.

எல்லாம் முரளியின் தலைக்கட்டுதான் இப்படி என்னைச் சிந்திக்க வைத்தது. இல்லாவிட்டால் இந்தப் பொதுப் பிரச்சனைகளைப் போய் நான் ஏன் பேசப் போகிறேன். நான் என்ன அரசியல் வாதியா? அல்லது அரசியலை இலை மறைவாக எழுதும் எழுத்தியல் வாதியா. இரண்டும் இல்லை. இந்தக் கார்களை ஓட உதவும் பெட்ரோல் விற்கும் சாதாரண ஏஜெண்டு. நான் எப்படி இதைப்பற்றி விமரி சிக்க முடியும். என் மகன் மண்டையின் குருதி அதன் மேல் கட்டை நனைத்துக் காட்டிய சிகப்புத்தான் என்னை இவ்வாறு வெளிப்படையாகப் பேச வைத்தது.

அவனை உடனே பொது மருத்துவமனையில் சேர்த்து வைத்தோம்.

புயலுக்குப் பின் விமரிசனம் தொடர்வதில்லை. அமைதி தான் ஏற்படும் என்று சொல்லுவார்கள். அவள் முரளியைப் பற்றிக் கவலைப்பட்டாள். அதாவது அவள் என்னைப்பற்றிக் கவலைப்படவில்லை. மது மாலை நேர விசிட்டராக வந்து சென்ருள். அதற்கு அங்கே தடை விதிக்கப்படவில்லை.

# 3

மூரளி அடிபட்டது ஒரு பெரிய அதிர்ச்சியை உண்டு பண்ணிவிட்டது; எங்கள் வருங்காலம் அஸ்தமித்தது போன்ற உணர்வு ஏற்பட்டது.

அவன் இந்த நாட்டின் பொதுச் சொத்து; அதில் பத்மினி மட்டும் உரிமை கொண்டாட முடியாது; மதுவுக்கும் அவன் உறவாக விளங்கினான்; அவள் அவனைப் பார்க்காமல் இருக்கமாட்டாள்.

எந்த வன்முறையாளரால் அவள் வழி மறிக்கப் பட்டாளோ அவர்களாலேயே என் மகன் தாக்கப் பட்டான். இப்பொழுது இது ஒரு புதிய செயல் முறையாக மாறிவிட்டது. வீரம் என்பது நேருக்கு நேர் போர்செய்வது அதுதான் பழைய காலத்து வீரம்.

காந்தியடிகள் சத்தியாக்கிரகம் தொடங்கி வைத்தார். போராட்டம் வேண்டும்தான். கிளர்ச்சிகள் தேவைதான். இந்தக் கோழைத்தனம் தேவை இல்லை.

தனிமனிதர் தவறுகள் இனத்தின் போராட்டமாக மாறுவது வியப்பாக உள்ளது. ஒரு கண்டக்டர் தவறு செய்தால் அந்த இனமே அவருக்கு ஆதரவாகப் பின்னணியில் நிற்கிறது; ஒரு மாணவன் தவறு செய்தால் ஒரு சமுதாயமே பின்னணியாக அமைகிறது; கூட்டுணர்ச்சி வேண்டியதுதான். தவறு செய்யும்பொழுது அவர் தனித்து தண்டிக்கத் தக்கவர் என்ற நியாயம் இந்தக் கூட்டு உணர்வால் மறைக்கப்படுகிறது.

நாடு ஜனநாயகம் என்ற பாதையில் இப்பொழுதுதான் அடியெடுத்து வைக்கிறது. எதேச்சாதிகாரமும் எமர்ஜன்சியும் சர்வாதிகாரமும் தனிமனிதர் ஆதிக்கமும் தலை யோங்கி இருந்தன. அந்த நிலை மாறி மனித சுதந்திரத்துக்கும் உரிமைக் கிளர்ச்சிகளுக்கும் ஜனநாயகம் இடம் தந்தது; தேர்தலுக்குப்பின் ஏற்பட்ட மாற்றம் இது; எழுத்து சுதந்திரப் பேச்சு சுதந்திரம் மறுபடியும் கால் ஊன்றிக் கிளைத்

துத் தழைத்து வளரும் நாளில் வன்முறைகள் வளர்கின்றன என்றால் இது நினைத்துப்பார்க்க வேண்டிய ஒன்றுதானே.

மறுபடியும் 'எமர்ஜன்சி' வந்தால்மேல் என்று எண்ணக் கூடிய வகையில் வன்முறைச் செயல்கள் தலை யோங்குகின்றன. பல பேர் இப்படி நினைக்கிறார்கள். ஜன நாயகத்தில் நம்பிக்கை வைக்கும் நிலையில் இந்த வன்முறை கள் ஒரு சோதனையாக ஏற்பட்டுள்ளது. இந்த நினைவுகள் என் மகன் மண்டையில் பட்ட அடிகள் எழுப்பின.

இவை பற்றி எண்ண எனக்குத் தெரியாது. மது இப்படி எல்லாம் பேசி அரசியல் சூழ்நிலைகளை விளக்கி இருக்கிறாள்.

முன்னெல்லாம் வேலை நிறுத்தம் என்றால் வாக்குச் சீட்டு எடுத்துதான் முடிவு எடுத்தார்கள். பெரும்பான்மை யோர் அந்த முடிவுக்கு ஒப்புக்கொண்டால்தான் அந்த முடிவை எடுக்கிறார்கள். இப்பொழுது அப்படி இல்லை தலைவர்கள் ஒரு சிலர் முடிவு அவசரப்பட்டு எடுத்துவிடு கிறார்கள். அல்லது யாரோ ஒரு மூலையில் எங்கோ தொடங்கிவிடுகிறார்கள். வன்முறைகள் அதற்குப் பக்க பலமாக அமைகின்றன. தீப்பொறி பரவுவதைப் போலப் பரவுகிறது.

கட்சிகள் மோதிக்கொள்கின்றன. மாணவர்களும் தொழிலாளிகளும் மோதிக்கொள்கின்றனர். ஆசிரியர்கள் மாணவர்களைத் தேர்வுகள் எழுதவேண்டாம் என்று கூறு கிறார்கள். மாணவர்கள் ஆசிரியர்களோடு மோதிக்கொள் கிறார்கள்; ஆசிரியர்கள் மாணவர்களோடு மோதிக்கொள் கிறார்கள்.

'ஜனநாயகம்' ஒரு பெரிய சோதனைக்கு உள்ளாகி இருக்கிறது. முன் மது சொன்னது எல்லாம் நினைவுக்கு வருகிறது. வாழ்க்கையில் உறுதிப்பாடு இல்லை.

இந்த நினைவுகள் தோன்றிய போது முரளியின் உடம்பு அவ்வளவு மோசமாக இல்லை. அதனால் இந்தப் பொதுச் சூழ்நிலைகளை விமரிசிக்க முடிந்தது. எனக்குள் பேசிக் கொள்வேன்; சில சமயம் மது என் சிந்தனையைத் தூண்டுவாள்.

வன்முறையும் அடக்குமுறையும்தான் இன்றைய அரசியல் என்று கூறினுளே அதுதான் நினைவுக்கு வந்தது. மற்ருென்று மறந்துவிட்டேன். முரளியை மருத்துவ மனைக்கு அழைத்து வந்ததே மாணிக்கம் என்ற இளைஞன் தான். அவன் ஏதோ கல்லூரி மாணவன்தான் என்று தெரிந்தது.

கையில் 'உண்டி'வைத்திருந்தான். அதாவது புயலுக்கு நிதி திரட்டிக் கொண்டிருந்தான். நல்ல காலம் அவன் கவனித்து மருத்துவ உதவி செய்யவில்லை என்ருல் என் மகனைக் கட்டோடு நான் பார்த்திருக்க முடியாது.

"யார் அடித்திருப்பார்கள்?"

"மாணவன்" ஒருவேளை அவனே அடித்துவிட்டு மனம் தாளாமல் கொண்டு வந்து சேர்த்திருப்பானு? என்னுல் முடிவு செய்ய முடியவில்லை.

மறுபடியும் மது சொன்ன சொற்கள் என் நினைவுக்கு வந்தன.

'ஆக்கச் செயலில் ஈடுபடுபவருக்கு அழிவுச் செயல் தெரியாது.'

நிச்சயம் மாணிக்கம் இதைச் செய்திருக்கமாட்டான்.

மாணவர்கள் இந்தத் தவறைச் செய்யமாட்டார்கள். 'முரளி' அவர்களுக்கு என்ன பகையா? இல்லை இந்தச் சமுதாயம் பகையாகக் காணப்படுகிறது. 'முரளி'யும் அதன் ஒரு பகுதி தானே.

என்னமோ இப்படி எல்லாம் எனக்கு நினைக்கத் தோன்றின. அடக்கு முறைகள் வளர்கின்றன. அதற்குக் காரணம் என்ன? மது குறிப்பிட்ட வன்முறைதானே.

ஒவ்வொருவரும் தாம் வலிவுள்ளவர்கள் என்று காட்டிக்கொள்ள வன்முறையிலும் போராட்டங்களிலும் ஈடுபடுகிருர்கள். யார் வலிமை உடையவர்கள். நிச்சயம் அரசுதான் வலிவு உடையது. சட்டம் வலிமை மிக்கது. அதுதான் வெல்கிறது. இதை அடக்குமுறை என்று சொல்லுகிருர்கள். வேறு அரசாங்கம் என்ன செய்யும். கைகட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்குமா! நிச்சயம் அரசாங்கத்தின் கரம் ஓங்கித்தான் இருக்கும்.

இந்த நாட்டில் வன்முறை கூடாது. அதைத் தாங்கும் நிலை இல்லை. அதிலே வளர்ச்சி இருக்கிறது என்றால் எப்பொழுதோ வன்முறையாளர்கள் வெற்றி பெற்றிருப்பார்கள். அவரவர் தம் கோரிக்கைகளுக்காகத்தான் போராடுகிறார்கள். நாட்டின் பொது வளர்ச்சிக்கு எந்தப் போராட்டமும் நடைபெறவில்லை.

எனக்குக் காந்தியடிகள் சிலைதான் கண்முன் நின்றது. நீ ஒருவன்தான் இந்த நாட்டில் வன்முறையை ஒழிக்க முடியும் என்று நினைப்பேன்.

ஏன் அவரையே வன்முறை பலி வாங்கிக் கொண்டது என்றாள். அவர் என்ன செய்யமுடியும். துப்பாக்கிமுனை தானே அவரை முடித்துத் தீர்த்தது. காந்தீயம் அந்த வெடிச்சத்தத்திலேயே மறைந்து விட்டது. அன்று காந்தியடிகளுக்கே தற்காப்புத்தர முடியாமல் போய்விட்டது.

முரளி என்ன சாதாரண குடிமகன்தானே. அவன் குடிமகன்கூட இல்லையே இந்த உலகில் வாழலாம் வாழமுடியும் என்ற நம்பிக்கையில் வளர்ந்து வரும் எதிர்காலக் குடிமகன்.

அவனுக்கு எவ்வளவு அழகான கற்பனைகளை அமைத்துக் கொண்டிருந்தோம்.

"அம்மா பைத்தியம்" என்பான். என்னிடம் அவள் எண்ணிப்பார்க்காமல் சண்டை போடுவதால்.

"அப்பா நீ பைத்தியம் என்பான்." நான் அவன் அம்மா பேச்சு கேட்பதால்.

"கல்லெறிந்ததால் பைத்தியம்" அவன் கண்டபடி எறிந்ததால் என்றான்.

"நான் சொல்கிறேன். முரளி நீதான் பைத்தியம். இந்த உலகத்தில் பிறந்தாயே" என்று என்னையும் அறியாமல் துக்கம் தாளாமல் பேசுவேன்.

மதுவும் ஒரு பைத்தியம்தான், நான் அவளுக்கு உதவினேன் என்பதால்—என்னைச் சுற்றிக் கொண்டு இருந்தாள். இப்பொழுது இந்தக் குடும்பத்தைச் சுற்றிக் கொண்டு இருக்கிறாள்.

''சின்ன அம்மா என்ற அழகான பதவியை அவளுக்கு முரளி தந்து அழகு பார்த்தான்.

'சின்ன அம்மா, நீ அம்மா கிட்டே பேசமாட்டியா?' என்று கேட்பான்.

அவன் அம்மா அதைக் காதில் போட்டுக்கொள்ளவே மாட்டாள்,

எல்லாம் இந்த மதுவால்தான் வந்தது என்பது அவள் கொண்ட முடிவு. என்றாலும் அவள் உறங்கினாலும் இரவு பகல் கண்விழித்துக் கொண்டு அவனைக் கவனித்து வந்தாள்.

அவளே பத்துவிடம் வலியப் பேசுவாள். பெற்றதாய் படும் வேதனையை அவள் அறிந்தவளாக விளங்கினாள்.

நிச்சயமாக அவளுக்கு அடித்தது யார் என்று தெரிந்திருந்தால் அவள் கண்ணகியாக மாறி இருப்பாள்.

கள்வனோ என் கணவன் என்று கூறினாள் அந்தக் கண்ணகி.

''என் மகன் என்ன குற்றம் செய்தான்'' என்று கதறினாள் பத்மினி.

''அடபாவிகளா'' என்று ஆள் தெரியாமல் அவள் அங்கலாய்த்தாள். இந்தச் சொல் எப்பொழுது சொன்னாள்.

அவன் இனிப் பிழைக்கமாட்டான் என்ற நிலைமை ஏற்பட்டபிறகு.

அப்பொழுதுதான் இரண்டு கைகளிலும் விலங்கிட்டு ஒரு முரடனைப் போலீசார் பிடித்து வந்தனர். அவனை எங்கேயோ பார்த்த நினைவு.

திடீர் என்று தன் நிலை இழந்தாள் மது. தன் இடுப்பில் செருகி இருந்த கத்தியால் அவனைக் குத்தச் சென்றாள். அவள் அவனை அடையாளம் கண்டு கொண்டாள்.

''யார் இவன்தானா உன்னை''

''இல்லை. முரளியைக் கல்லால் அடித்தது'' என்றாள்.

''எப்படித் தெரியும்''

இவனுக்கு இதுவே வேலை. கிளர்ச்சி நடக்கும்பொழுது இவன் குழப்பங்களை உண்டாக்கிக் கொள்ளை அடிப்பான்; அதற்காக இவன்தான் கல் எறிந்து இருப்பான்" என்றாள்.

"கற்பனைதானே" என்றேன்.

அதற்குள் போலீசுகாரர் அவனைத் தடுத்து விட்டார்கள்.

"உண்மை சார். அவன் கல்லெடுத்து வீசியதைக் கண்டுபிடித்தோம். கையும் களவுமாகத்தான் பிடித்தோம்" என்றார்கள்.

நான் நம்பவில்லை, ஆனால் அவன்தான் கடற்கரையில் மதுவை அன்று வன்முறைக்கு இழுத்தான்.

அன்று அகப்படவில்லை. இன்று அகப்பட்டான் என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

"வன்முறை இருக்கும் வரை அடக்குமுறை அவசியம்" என்றாள் மது.

ஆம் அவசியம்தான் என்று எனக்கும் பட்டது முரளியைப் பார்த்தபோது.

## 4

கடற்கரையில் அந்த மூன்று சிலைகள் அந்த இடத்தில் அசையாமல் நின்றன. காந்தியடிகள் வன்முறைக்குப் பலியானவர்; சத்தியாக்கிரகத்தில் சுதந்திரம் பெறமுடிந்தது. ஆனால் வன்முறையில் அவர் ஆவி பிரிந்தது. அன்றே அரசாங்கம் விழிப்பாக இருந்து அந்த உத்தமரைக் காத்து இருக்க வேண்டும்.

கிளர்ச்சிகள் அவசியம்தான்; ஆனால் வன்முறை உடன் கலக்கும் போது அது தோற்றுவிடுகிறது என்பதை எண்ணிப்பார்க்க முடிந்தது.

மதுவைக் கடைசி முறையாகச் சந்தித்தது அந்த மருத்துவ மனையில்தான். அவள் மகத்தான தொண்டை அங்குதான் பார்க்க முடிந்தது, மாணவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள் என்பதை அவளைக் கொண்டுதான் அறிய

முடிந்தது. அவள் என்னிடம் காதலும் செலுத்தினுள். ஆனுல் கற்பை இழக்கவில்லே. அன்பைச் செலுத்தினுள் ஆசைக்கு இரையாகவில்லே. ஆண்களோடு பழகினுள். ஆனுல் பெண்மையை இழக்கவில்லே.

இன்றைய மாணவர்களே நான் உணர முடியவில்லே எனக்குப் படிக்கின்ற வாய்ப்புக் கிட்டாததால். ஆனுல் அவர்களுள் ஒரு மாணிக்கத்தை மதுவினிடம் காண முடிந்தது.

அவள் நினைவுகள் என் உள்ளத்தில் தோன்றி மறைந்து கொண்டே இருந்தன. பத்மினி அதற்காகவே போராடினுள். தன் மகனேயும் இந்தப் படுகளத்தில் பறி கொடுத்தாள். மருத்துவமனேயில் அவனேக் கொண்டு சேர்த்தாள், எல்லாம் முடிந்தது. ஆனுல் 'மதுவை' என் உள்ளத்திலிருந்து நான் அகற்ற முடியவில்லே. அவள் அசாதாரண பெண்ணுகத்தான் காணப்பட்டாள்.

அவன் கண்ணே மூடிய போதும் அவன் மூடிய கண்களில் அவளே வைத்தே மூடினுன்; மறுபடியும் அவளே நான் காணவில்லே, அவன் எங்கே எந்த ஊர் இதைப் பற்றி நான் கேட்கவே இல்லே.

அன்று கல்லறையில் அந்த மாணவன் மாணிக்கம் கண்களில் நீர் சிந்தினுன். அவள் அது தான் மது அழவே இல்லே. ஜனநாயகத்தின் பரிசு என்று அவள் பழக்கமான மொழியில் சொன்னுள்; குழந்தை பொதுச் சொத்து எனக்கு உரியவன் அல்ல. என் இதயமும் கல்லாகச் சமைந்து விட்டது.

ஆக்கப் பணியில் ஈடுபடுபவர் அழிவுப் பாதையில் செல்ல மாட்டார் என்று அவள் சொல்லிய சொற்கள் ஒலித்துக் கொண்டே இருந்தன.

அந்த எழுத்துகளை அவன் கல்லறையில் செதுக்கச் சொன்னேன்.

'ஜனநாயகத்தை வன்முறையால்
அழித்து முடித்த அக்கிரமக்
காரர்களுக்குக் காணிக்கை'

என்று எழுதி வைக்கச் செய்தேன்.

கடற்கரையில் அந்தத் தொழிலாளியின் 'வெற்றி' என்ற சிற்பம் என் மனத்தை விட்டு அகலவே இல்லை. என் மனைவி மட்டும் அழுது கொண்டே இருந்தாள்.

நான் அழவில்லை. என் மகனை ஒரு நினைவுச் சின்னமாக எழுப்பி விட்டேன்.

'தாஜ்மகாலைப் பார்க்க வேண்டாம். என் மகன் கல்லறையைப் பாருங்கள்' என்று இந்த உலகத்துக்குச் சொல்வதை விட வேறு என்ன சொல்ல முடியும்? அதை விட நான் எழுப்பிய கல்லறை எழுத்துகள் இந்த நாட்டுக்கு அவசியம் என்று நினைக்கிறேன்.

மறுபடியும் 'பதினாறு வயதினிலே' படத்தில் அவன் வரும் வரை அவள் காத்திருந்தாள். இனி என் மதுவை என்றும் காண முடியாது. அவள் மறைந்து விட்டாள். இந்த மனித கூட்டத்தில் நிச்சயமாக அவள் எங்கோ ஒரு குடும்பம் நடத்திக் கொண்டிருப்பாள்.

முரளி அங்குச் சென்று நிச்சயமாகப் பிறந்திருப்பான். அவள் அவனோடு விளையாடிக் கொண்டிருப்பாள். மாணிக்கம் அந்த விளையாட்டில் தன்னைப் பறிகொடுத்து இருப்பான். இந்த மூன்று உருவங்களை ஒன்றாகச் சேர்த்துக் காண்கிறது என் மனம். இப்படித்தான் என் மனம் அமைதி கொள்ள முடிந்தது.



## நூல்கள் கிடைக்குமிடம்

**அணியக வெளியீடுகள்**

**ஆசிரியர் : ரா.சீ**

1. அணியகம், சென்னை-30. © 644 9630
2. பாரி நிலையம், சென்னை - 108.
3. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
4. ஹிக்கின் பாத்தம்ஸ், சென்னை - 2.
5. நியூ சென்சுரி புக் ஹவுஸ்.
6. நியூ புக் லாண்ட், சென்னை - 17.
7. கிரி டிரேடிங் ஏஜென்சி, சென்னை-4.